தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

CONNEMARA PUBLIC LIBRARY

தமிழ் வளர்ப்பார்...!

★

கூர் உரைகள் பலசெய்வார்;
நலங்காண் வினைக்கே முழுமனதாய்
ங்கார்; பிறர் ஆங் கெழுந்தியங்கின்
இணையார்; ஒருகால் இணைந்துவிடின்
ங்காண் பொழுதில் பொருள்நயப்பால்
வழிப்போ வார்க்கே பழிசெய்யவும்
ங்கார்; இவர்காண் தமிழ்வளர்ப்பார்!
தமிழே! இதுநின் தலையெழுத்தே!

ரூ0 50 காசு

தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத்திங்களிதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 2. | பங்குனி–தி. பி. 1995 (1964 மார்ச்) | **ஓலை 2.**

தேர்(தல்) திருவிழா!

—*—

அரசியல் சார்பில் நடைபெறும் தேர்தல் திருவிழாவிற்கும் சமயச் சார்பில் நடைபெறுகின்ற தேர் திருவிழாவிற்கும் பல வகையான ஒற்றுமைகள் உண்டு. ஒப்போலை (Vote) உரிமை வழங்கப்பெற்றுள்ள எந்த நாட்டிலும் இத்தகைய தேர்தல் விழாக்கள் சமயத் திருவிழாக்களைப் போன்றே ஆரவாரமாகக் கொண்டாடப் பெற்றாலும், நம் இந்திய நாட்டில் நடக்கும் தேர்தல் ஏமாற்றுகள், கொள்ளைகள், கொலைகள், குலச் சண்டைகள், ஊதாரித்தனமான செலவுகள் போன்று வேறு எந்த நாட்டிலும் நடைபெறுவது அரிதினும் அரிது. குரங்கு குடித்துவிட்டுக் கூத்தாடுவதை விடப், பித்தம் பிடித்த குரங்கு குடியால் ஆடுவதுதான் அருவருப்பாகவும் அச்சமாகவும் இருக்கும். நம் நாட்டு அரசியல் குரங்குகள் மடமைப் பித்தம் பிடித்தவையே! அதனொடு அவை குடிக்கின்ற குலக் கள்ளும், ஏமாற்று வெறிநீரும் கட்சிக் காடியும் அவற்றிற்கு மேலும் வெறி ஊட்டி நடுத்தெருக்களிலும் ஆட வைக்கின்றன.

தேர் திருவிழாக்கள் நடைபெறப் போவதற்கு முன்பே, அதற்கான உண்டியல் திரட்டு முதல் நாள் குறித்துக் காப்புத் தூண் நடுதல் வரை, பூச்சாத்தி(பூசாரி)கள் எங்ஙன் இரவு பகல் இதே வேலையாகத் திரிகின்றனரோ, அதேபோல் அரசியல் பூச்சாத்திகளும் தேர்தல் தொடங்குதற்கு நெடுநாட்கள் (ஏன்? ஓரீராண்டுகள்) முன்பிருந்தே உண்டி தண்டல் முதல் ஆரவார அறிக்கைகள், போலிப் பொழிவுகள், சுவர் விளம்பரங்கள், தொகுதி காண்டல் முதலிய கரண (சடங்கு) முறைப்படி ஒழுங்காகவும் விறுவிறுப்பாகவும் அவர்களுக்கென்று ஒதுக்கப்பெற்ற

சிறப்பாசிரியர்: **புலவ, பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்**
பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரன்**
உறுப்பாசிரியர்: **தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன்**

கோழி, குடம், மாடு, மரம் முதலிய அடையாள ஊர்திப்பொருள் களோடு ஊர்வலம் வரத் தொடங்கி விடுகின்றனர். திருவிழாக் காலங்களில் நிகழும் பணப் புழக்கம், தொகுதிச் சண்டை, குலச் சண்டை முதலியன தேர்தல் காலங்களிலும் தலையெடுத்து நிற்கும். இவை தவிர மாலை மதிப்புகள், கூழைக் கும்பிடுகள், அடிதடி, எடுபிடி, முதலிய போலிப் புற நிகழ்ச்சிகளுக்கோ சிறிதும் பஞ்சமில்லை. சிற்சில இடங்களில் வாண வேடிக்கைகள் வண்டிப் புனைவுகள் முதலியனவும் நடக்கும் இன்னுஞ் சொன்னால் திருவிழாக்களில் நடைபெறும் குடமுழுக்கு (அபிஷேகம்), கொளுத்தல், புகைத்தல், சாத்தல் முதலிய வழிபாடு (ஆராதனை)கள் முதலியனதாம் தேர்தல் விழாவில் கையாளப் பெறுவதில்லை. எனினும் சமயப்பித்தன் ஒருவன் தப்பித் தவறித் தேர்தல் விழாவில் போட்டியிடுவானானால் இவ்வகையான பழ நூன்மரபு(சாஸ்திர சம்பிரதாயங்)களையும் விடுவதில்லை. வ ண் டி ப் ப ட் ட றை வாயாடிக் குப்பனும், ஒண்டிக் கடை நொண்டிச் சுப்பனும், கள்ளுக்கடைக் காசடி முத்துவும் தேர் திருவிழாக் காலங்களில் எங்ஙன் முகச் சாயங்களாலும் ஆடை அணிகளாலும் 'இராம இலக்குவனராகவும்', 'கிருட்டிண அருச்சுனராகவும்' புனைந்து கொண்டு, காற் சலங்கை கட்டிக் கொண்டு ஆடுகின்றனரோ, அங்ஙனமே புகையிலை வாணிகன் பொய்யாச்சாமியும், தண்ணீர்ப் பந்தல் தண்டல் அமுக்கியும் மாடாகவும், கோழியாகவும், கதிரவனாகவும், குதிரையாகவும் உருவெடுத்து ஆடத் தொடங்கி விடுகின்றனர். அத் தேர் திரு விழாவில் நடைபெறும் வாண வேடிக்கைகளிலும், வழிபாடு வகைகளிலும் எப்படி உண்மையான இறைப்பற்றுக்குச் சிறிதும் இடமில்லையோ, அப்படியே இத்தகைய தேர்தல் விழாக்களில் நடைபெறும் போலி ஆரவாரப் புனைவு, சுருட்டல்களிலும் உண் மையான அரசியல் பற்றுக்கும் சிறிதளவு கூட இடமில்லை. திரு விழாக்களில் சிறுபிள்ளைகளைத் தூண்டிவிட்டு அவர்கள் தோள் களில் சிறுசிறு காவடிகளைத் தூக்கிவைத்து ஆட்டிவைக்கும் சமயப் பித்தர்களைப் போலவே, தேர்தல்களிலும் பச்சைப்பிள்ளை களைப் பயன்படுத்தி அரசியல் காவடிகளைக் கொடுத்து ஆடச் செய்தவர்களும் உளர். மொத்தத்தில் திருவிழாக்களில் ஊர் காவ லர்கள் துணையோடே கடவுட் படிமங்கள் ஊர்வலம் வருதல் போல், தேர்தல்களிலும் காவலர்கள் காவலிலேயே வெறியாட்ட மும் வெற்றியாட்டமும் நடைபெற்று முடிந்தன. என்னே, நம் அரசியல் அறிவு!

பண்பாடும் அறிவும் வாய்க்கப் பெறாமல் தந்நலமும் பணப் போராட்டமுமே வாழ்க்கைப் போராட்டமாகக் கொண்டிலங்கும் மக்களிடை ஒப்போலைத் தேர்தல்முறை என்பது உப்பிலாக் கருவாடே! பிண நாற்றமும் புழுத்தோற்றமுமே நாளுக்கு நாள் அவற்றில் மிகுதலன்றி மக்கட்கு அவை எள்ளளவும் பயன்படா.

இக்கருத்தை நாம் தென் முனைக் கடற்கரையில் நின்றும் வட பெருங்கல் குவட்டில் நின்றும் முக்காலும் மும்முறையும் துணிந்து சொல்லுவோம். இவ்வடிப்படை முறைகளில் சட்டங்களின் துணையாலோ, கல்வியின் வாயிலாகவோ ஏதாவது ஒரு மாற்றம் நிகழ்த்தினாலன்றி, நாம் என்றும் இப்பொழுதுள்ள தேர்தல் முறைகொண்டு சரியான ஒரு நல்லாட்சியை நிறுவி விடல் முடியாது. இந்நிலையை இப்படியே வளரவிடுவோமாயின் நல்லாட்சிக்கு மாறாக வல்லாட்சியையோ, குடியாட்சிக்கு மாறாகப் படையாட்சியையோ தாம் எதிர்பார்த்தல் முடியும் என்பதை மக்கள் தெளிவுபட எழுதிச் சட்டமிட்டுத் தங்கள் தங்கள் வீடுகளில் மாட்டி வைத்துக் கொள்ளலாம்.

அண்மையில் நடைபெற்று ஒருவாறுமுடிந்த நகராண்மைக் கழகத் தேர்தல்களின் வெற்றி தோல்விகளைப் பற்றி வக்கணை பேசுவது நாம் எடுத்துக்கொண்ட வேலையன்று. நோயின் முடிவு என்னவாகவும்இருக்கட்டும். நோயை வளரவிடாமல் தடுப்பதில் மக்கள் எவ்வெவ்வகையில் கருத்துடனும் விழிப்புடனும் இருத்தல் வேண்டும் என்பதே நம் கவலை. அரசினர் அமைத்துக் கொண்ட தேர்தல் சட்ட திட்டங்கள் அவர்கள் அமைக்கும் ஐந்தாண்டுத் திட்டங்களைப் போல அடிப்படை அற்றவையே! அவர்தம் ஆட்சிமொழிச் சட்டத்தைப் போல நெறி பிறழ்ந்தவையே!; அவர்தாம் இயற்றிய மதுவிலக்குச் சட்டத்தைப்போல நாற்றமடிப்பவையே! அவர்தம் பொன் கட்டுப்பாட்டுச் சட்டங்களைப் போல மாற்றுக் குறைந்தவையே! இவற்றைத் திருப்பித் திருப்பிச் சொல்லிப் பயன்......? நாம் எதிர்பார்ப்பதெல்லாம் அரசினர் திருந்தவேண்டும் என்பதன்று! மக்கள் திருந்தவேண்டும் என்பதே! அரசாட்சி என்பது கூரைமேல் ஏறிய குரங்கைப் போன்றது. நாம் கீழிருந்து வெருட்ட வெருட்ட குரங்கு இறங்கி வராது; கூரைதான் பிய்க்கப்படும் அதனாலேயே நாம் எந்தக் கருத்தையும் மக்களை நோக்கியே சொல்ல வேண்டியுள்ளது. மக்கள் மாறும்பொழுது அரசியலமைப்பும் மாற்றப் பெறும்.

காட்டிலிருந்து பிடித்து வரப்பெற்ற கடுவிலங்குகளுக்குத் தொடக்கக் காலத்தில் வேண்டுவது கற்பிப்பே. அக் கற்பிப்புக் காலத்தும் நமக்குத்துணையாக இருக்கவேண்டுவது கைக்கழியே! அதுவே அவற்றைப் படிவிக்கும். அதன் பின்னரே அவற்றை நம் வழிக்குப் பழக்கல்வேண்டும். மாற்றான் ஆட்சியால் அடிமையுற்ற நம் நாட்டு மக்கள் உரிமை எய்தியவுடன் கட்டற்ற காளை போல வரை முறையின்றித் தம் பணவலிமையையும் துணை வலிமையையும் தாறுமாறாகப் பயன்படுத்துகின்றனர். அவ்வறியா மக்களைப் போலவே அவர்தம்மை ஆளவந்த அமைச்சர்களும் வன்மவினைகளிலும், கள்ளங் கரவுகளிலும் உள்ளப் பண்பாடின்றி இழிகின்றனர் இவ்வடிப்படையின் வழி எழுந்த பல்லாயிரம் கரடு முருடுகளில் இத்தேர்தல் முறையும் ஒன்று.

சில நாடுகளில் உள்ளதுபோன்று தேர்தலுக்கு நிற்பவர்கட்குக் கல்வித்தகுதி, நிலைத்தகுதி முதலியன கவனிக்கப்பெற்று வரையறுக்கப்பெறல் வேண்டும் என்பதும், பெல்சியம், ஆலந்து செக்கோசுலோவாக்கியா, ஆத்திரேலியா போன்ற நாடுகளில் இருப்பதுபோல் ஒப்போலை செய்தல் கட்டாயக் கடமையாக வகுக்கப்பெறல் வேண்டும் என்பதும், நாம்உடனடியாகச்செய்ய வேண்டிய சட்டமாகும். பெல்சியத்தில் உள்ளதைப்போன்று ஒப்போலை செய்ய வராதவர்கட்கென மறு தேர்தலை நடத்தி அதற்குண்டான செலவை அக் கடமை தவறியவர்களிடமிருந்து தண்டல் செய்தல்வேண்டும். ஒப்போலை செய்யத் தவறியவர்கள் எந்த அரசினர் வேலைக்கும் தகுதியில்லாதவர்கள் என்ற சட்டம் பெல்சியத்தில் உள்ளதும் கவனிக்கத்தக்கது. எவ்வாறாயினும் சட்டங்களிலும் அவை கையாளப்பெறும் முறைகளிலும் ஓட்டை உடைசல்கள் உள்ளவரை நடைமுறையில் ஒழுக்கல் இருக்கும் என்பதை எவரும் மறந்துவிடல் கூடாது *

பாவாணர் பொருட் கொடைத் திட்டம்:

தென்மொழியின் பாவாணர் பொருட்கொடைத்திட்டத்தால் நாம் எதிர்பார்த்த நன்மைகளைக் காட்டிலும் எதிர்பாராததீமைகளே விரைந்தும் நிறைந்தும் காணப்படுகின்றன. இத்திட்டத்தால் தென்மொழிக்குக் கிடைத்த புன்மொழிகள் பல. எவரெவர் வாயிலிருந்து எவையெவை வரக்கூடாதன என்று நாம் கருதி இருந்தோமோ, அவரவர் வாயிலிருந்தெல்லாம் அவையவை முறையாக வந்து கொண்டிருக்கின்றன. இவற்றை விளக்கி எழுதித் தென்மொழியை அறிக்கைப் பலகையாக்க நாம் விரும்பவும் இல்லை; அன்பர்களைச் சோர்வடையச் செய்ய நாம் முனையவும் இல்லை. தூய்மைத் தொண்டாலும் நல்லெண்ணத்தாலும் தொடங்கப் பெற்ற இத்திட்டம் வல்லார் சிலரால் மாசு கற்பிக்கப்பெற்று வருதலை எண்ணிப் பார்க்கையில், அவரும் அவர்தம் செயலும் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் மாறானதும் வேறானதும் இல்லை என்பதே புலப்படுகின்றது. தமிழனின் கை, கால், வாய், கண், செவி, முதுகு முதலிய புறவுறுப்புகள் மட்டும் அடிமைப்பட்டும் மிடிமைப்பட்டும் கிடக்கவில்லை; அவனின் உள்ளம், உணர்வு முதலிய அகவுறுப்புகளுங் கூட அடிமைச் சேற்றில் மீள வழியின்றி ஆழப் புதையுண்டிருக்கின்றன. இருப்பினும் எதைப்பற்றியும் நாம் கவலைப்படவில்லை. அன்பர்கள் விரைவில்உண்மை உணர்த்தப் பெறுவார்கள். இடையில் ஒரு வேண்டுகோள்; நமக்கென்று ஒரு கடமையை ஏற்றோம். அதனை இடை முறிவின்றிச் செய்வோம். அதன்முடிவுதான் உண்மையை உணர்த்துமே அன்றி, பதற்றக்காரர் தம் தூற்றலும் ஆற்றலுமல்ல என்பதை உணர வேண்டுகின்றோம். விரைந்து செயலாற்றுங்கள்... அடுத்த இதழில் பொருட்கொடைத் திட்டத்தின் முடிவான அறிக்கை வெளியிடப் பெறும்.

-பெருஞ்சித்திரன்

தமிழனுக்கு ஒப்பாரி.

துரை-மாணிக்கம்

ஐயோ தமிழ்மகனே! ஆண்டிருந்த மன்னவனே;
பொய்யோ புதுக்கனவோ? போகா நெடுநினைவோ?
மெய்யாய் நடப்பதுவோ மேனிச் சிலிர்சிலிர்ப்போ?
உய்யாய் எனநினைத்த ஊரார் களிப்புறவே-
வாழாய்நீ என்ற வடவர் மகிழ்வுறவே-
வீழாயோ என்றிருந்த வேறூர் உவப்புறவே,
சாய்ந்தாயே! ஆலஞ் சருகாய் விழுந்தாயே!
வாய்ந்த பெருமையெலாம் வாயெடுத்துப் பாடிடுவேன்;
வாய்ந்த பெருமையினை வாயெடுத்துப் பாடிடுங்கால்,
மாய்ந்த உயிரும் மறிக்கவந்து தங்கிடுமா?
மாய்ந்த உயிரும் மறிக்கவந்து தங்குமெனில்
தோய்ந்த நறுந்தமிழில் தோதாகப் பாடேனோ?
கன்னல் தமிழில் கனிவாகப் பாடேனோ?
என்னேர் தமிழில் இசையேறப் பாடேனோ?
சொல்லுக்குச் சொல்லும் சுவையேறப் பாடினமால்
கொல்லவரும் அம்பும் குறிதப்பிப் போகாதோ?
வெல்லவரும் மாற்றாரும் வில்லொடிந்து போகாரோ?
வல்லதடா நின்நினைவும்; வாழ்க்கைக் கெருவாகும்!

பாண்டிமன்னன் பெற்ற பழமேனி நின்மேனி!
ஆண்டவனும் நீயே! அரசரெலாம் நின்குடியே!
சோழமன்னன் பெற்ற திருமேனி நின்மேனி,
வாழவந்தாய் நீயே, வடவர் குறிதொடுத்தார்.
சேரமன்னன் பெற்ற சிறப்பெல்லாம் நின்சிறப்பே!
சீரவிந்து போனாய்; சிறப்பிழந்து வீழ்ந்துவிட்டாய்!
தப்பாக் குறிவைத்தார்; தாழாமல் அம்பெடுத்தார்;
எப்பாலும் சூழ்ந்தவரை என்செய்வார் என்றிருந்தாய்.
மாறாச் கவணெடுத்தார்; மாய்க்காமல் மாய்த்துவிட்டார்,
வேறாய் நினைக்கவில்லை; வீணரவர் வீழ்த்திவிட்டார்!
வெல்வாரோ என்றிருந்தாய் வேவியிட நீமறந்தாய்;
கொல்வாரோ என்றே குறிவைக்க நீமறந்தாய்!

முத்தளந்த கையில்—முடியணிந்த நின்தலையில்—
பத்தும் அளந்துதந்து பாமடுத்த நின்செவியில்--

குத்தவரும் வேலின் குறிதடுக்கும் மார்பினிலே—
தொத்தவரும் பைங்கிளிமார் தோய்ந்துறங்கும் தோளினிலே

பார்த்திருந்த நின்பகைவர் பாய்ச்சினரே கூரம்பை!
காத்திருந்த மாற்றார்க்குக் காணுவழி வேறிலையே!

கொல்லன் வடித்தீந்த அம்புக்குக் கூர்பார்க்க
வல்லனே நின்கை வடுப்படுவ தல்லாது —

காந்தள் மலர்க்கைக் கயல்விழியார் கூருகிரால்
ஏந்துகின்ற மார்பில் எடுத்தவடு வல்லாது —

நின்றோள் வடுப்படவும் நேர்ந்த கதையறியேன்;
அன்றோகாண் நின்பெருமை! ஆரே இனியுரைப்பார்?

பூரித்த தோள்கள் பொலிவிழந்து போயினவோ?
ஏரித் தடங்கரையை இங்குவந்து யாருடைத்தார்?

முக்கழகச் சீர்மை முழுதலரும் என்றிருந்தேன்.
முக்கழகச் சீர்மை முழுதலரும் என்றிருக்கத்.

தக்கபடி வந்தான் தலையரிந்து கொண்டிருப்பான்;
ஒக்கபடி வந்தான் உடலரிந்து கொண்டிருப்பான்!

முத்தமிழ்க்குக் காப்பாக முன்னிற்பாய் என்றிருந்தேன்!
முத்தமிழ்க்குக் காப்பாக முன்னிற்பாய் என்றிருக்கப்

பித்தனவன் வந்தான் பிணமாக வீழ்த்திவிட்டான்!
எத்தனவன் என்றறியேன்; ஏமம் விளைத்தறியேன்!

பொய்யன்று; தூங்கும் புலியென்று நானிருந்தேன்;
கொய்யென்று நின்தலையைக் கொய்தான்; உறங்கினையே!

ஆளழகு மட்டுமிலை; ஆணரிமா என்றிருந்தேன்!
தோளழகு மாளத் தொடுத்தகணை பாய்ச்சிவிட்டான்.

பில்குதமிழ்த் தேன்பா பிலிற்றும் புலவரொடு,
மல்குதமிழ் வேந்தன் மறைமலைகள் காத்திருந்தும்,

பல்குதமிழ் ஆய்ந்துவரும் பாவாணர் காத்திருந்தும்,
நல்குதமிழ்ப் பாவேந்தன் நாட்டுவிழி பார்த்திருந்தும்,

ஓரா யிரமறவர் ஓச்சியவாள் வீச்சிருந்தும்,
ஆரோ வெறியன் அடிவெட்டி வீழ்த்தி விட்டான்!

செந்தமிழைச் சாய்த்தான்;நின் சீருடலைச் சாய்த்துவிட்டான்;
முந்திவிட்டான்; நின்னையவன் மூக்கரிந்து கொண்டுசென்றான்.

பாட்டனவன் வாளும் பரணிருக்கும்; நீமறந்தாய்!
நீட்டி யிருப்பின் நினைவிழந்து போயிருப்பான்.

அப்பனவன் வேலும் அருகிற் கிடந்திருக்கும்!
ஒப்புக்குக் காட்டினையேல் ஓடி உயிர்குலைவான்!

வேலொடித்த கையால் விரலொடித்துப் போட்டிருந்தால்,
ஆலொடிந்து சாய்ந்ததுபோல் ஐயனே நீகிடவாய்!

வாய்மொழிக்குத் தானே வரம்பிட்டான் என்றிருந்தாய்;
வாய்மொழிக்குப் பூட்டிட்டே வல்லுயிரின் தாழ்திறந்தான்!

தாய்மொழிக்குத் தானே தடைபோட்டான் என்றிருந்தாய்!
தாய்மொழியைத் தான்தடுத்துத் தன்னுயிர்க்குக் காவலிட்டான்!

தூக்குங் களிற்றுத் துதிக்கைத் தடங்கையனே!
தாக்கும் நரிக்குத் தலைகவிழ்ந்து போனாயே!

என்ன, அடா பாட்டிசைப்பேன்? என்னென்று சீர்குறிப்பேன்?
என்னெழுதும் நெஞ்சம்? எழுத்தாணிக் கூர்மழுங்கும்!

பொன்னுருக்கி வார்த்துப் புதுத்தகடாய் நீளடித்துப்
பன்மணியால் சொல்லமைத்துப் பச்சைமணிப்பாட்டமைத்து,

முத்தெடுத்துக் கோத்து முழுப்பாட்டு நின்றெழுதிப்
பித்தேறச் சூழ்ந்து பிழையில்லாப் பாட்டெழுதி,

நின்பெருமை பாட நினைத்திருந்தேன், செந்தமிழா!
நின்பெருமை பாட நினைத்திருக்கும் போழ்தினிலே,

குத்துண்டு போனாய்! குலைநடுங்கிக் கீழ்சாய்ந்தாய்!
கத்துண்ட தொண்டை கரகரக்கும் வேளையிலே,

ஒப்பாரிப் பாட்டோ உனக்கென்று வாய்த்ததுகாண்!
துப்பில்லாப் போனாய்! துகளாகி நீசாய்ந்தாய்!

ஆர்நெஞ்சம், திண்கால் அமர்ந்த அரியணையில்
யார்வந் தமருவது? யாராட்சி ஆளுவது?

கூழைக் கரும்பின் குருத்தொடித்து வீசுதல்போல்
மோழை வடவர் முதுகொடிப்பாய் என்றிருந்தேன்!

பாளையினைச் சீவிப் பதநீர் வடிப்பதுபோல்
ஆளின் தலையை அறுத்தெறிவாய் என்றிருந்தேன்!

கோழைக்கு முன்வாளைக் கூர்மழுக்கிக் கொண்டாயே!
வாழை இளந்தண்டாய் வந்துமடி வீழ்ந்தாயே!

வல்லடிமை செய்ய, அவர் வாய்வீச்சு வீசியதும்,
கொல்லுதற்கு நின்னைக் குறிபார்த் திருந்ததுவும்,

இந்தியினைக் கொண்டே எழிற்றமிழைச் சாய்த்ததுவும்,
இந்தியமென் றூர்த்தே இசைமயக்கில் ஆழ்த்ததுவும்,

செந்தமிழா நின்னைச் சிறைசெயவே என்றுரைத்தேன்.
எந்தமிழால் சொன்ன எதிர்வறிய மாட்டுகிலை;

கூப்பாடு போட்ட குறிப்புணரக் கூடவில்லை;
நாப்பாடு வேண்டி நயப்பாடு காணவில்லை!

கற்றைக் குடுமியவன் கைக்குப் பிடிகொடுத்தே
இற்றைக் கடிவீழ்ந்தாய்! ஏந்தலே ஏந்துவதார்?

பொன்னுர் திருமேனி மண்ணில் புரளுவதோ?
என்னேர் தமிழ்த்திருவை இந்'தீ' எரிப்பதுவோ?

ஏந்தியவாள் வீச்சிற் கெதிர்வீச்சைக் கண்டிலனே!
காந்தியகண் நோக்கிற் கெதிர்நோக்கைக் கண்டிலனே!

நின்னை எவண்காண்பேன்? நின்மொழி, யார் வாய்கேட்பேன்?
தன்னேர் உயர்பண்பைச் சாற்றுவதார்? தாளேனே!

எண்ணுத நெஞ்சாய், எழுதாத பாடலாய்,
உண்ணுத தீங்கனியாய், ஊட்டாத தாய்முலையாய்,

பூக்காத மொக்காய்ப் புதுக்காத ஊருணியாய்
நோக்காத நல்விழியாய் இக்கால் நுடங்கினையே!

என்பொறுப்பேன் நின்சாவை? என்வைப்பேன் வல்லுயிரை?
நின்பிணங்காண் சான்ருகும்; நீளுலகில் தூணுகும்!

தாய்மொழியைப் பேணுர் தரைமூடிப் போதற்கே,
வாய்மொழியைக் காவாதார் வாழ்விழந்து போதற்கே—

உன்றன் பிணமே உறுகரியாம்! வல்சான்ரும்!
குன்றுபோல் வீழ்ந்திருக்கும் கொல்களிறே! நாணுடைத்தே!

கன்பூசியசும் குழந்தைகளும்

—*—

சீன அறிஞரான கன்பூசியசு ஒருமுறை தெருவில் இரண்டு சிறுவர்கள் வழக்காடிக் கொண்டிருப்பதைக் கண்டார். என்ன செய்தி என்று கேட்டார். ஒரு சிறுவன், கதிரவன் நண்பகலில் இருப்பதைவிடக் காலையிலேயே நமக்கு மிகவும் அண்மையி லிருக்கின்றது என்று நான் கூறுகின்றேன்; இவனே, காலையில் தான் தொலைவில் இருப்பதாகக் கூறுகிருன்; "காலையில் கதிரவன் வண்டியின் உருளைபோல் பெரிதாக இருக்கின்றது. நண் பகலிலோ உண்கலத்தைப்போல் சிறிதாகி விடுகின்றது. தொலை வாக இருக்கும்பொழுது தானே சிறிதாகத் தெரியும்!" என்ருன். மற்ருெருவன் "காலையில் கதிரவன் ஒளி இளஞ்சூடாகத்தான் இருக்கின்றது. நண்பகலிலோ நெருப்பாகக் காய்கின்றது. தொலைவு போகப் போக வெப்பம் குறைந்தும், அருகில் வரவர மிகுந்தும் இருப்பதுதானே இயற்கை" என்ருன். கன்பூசியசு என்ன முடிவு கூறுவதென்று தெரியாமல் திண்டாடினுர். அக் குழந்தைகள் இருவரும் அவரைப் பார்த்து "ஐயே, மக்கள் உம்மைப் போய்ப் பேரறிஞர் என்று பாராட்டுகின்றனரே, இது கூட உமக்குத் தெரியவில்லையே" என்று பகடி செய்தனர். *

பெயர்ப் பட்டியல்–3.

பாவாணர் பொருட் கொடைத் திட்டம்.

(6—2—64 முதல் 5—3—64 வரை அலுவலகத்திற்குப் பணம் விடுத்த அன்பர்கள்)

	உருபா.
மாம்பட்டு திரு. வே. திருமாவளவன் ,, மு. அண்ணமலை	3—75
இவர்வழி, ,, அண்ணமலை	2
,, அ. நா. கணேசன்	2

தலைக்கு உருபா 1 மேனி விடுத்தவர்கள்:–

திருவாளர்கள் பாபு. நா. எத்திராசன், கே. ஏ. நாராயணசாமி, க. பா. நடராசன், கி. தருமலிங்கம், சு. நடராசன், தி. அண்ணமலை, தே. ஞானமணி, எம். முருகேசன், ஏ. கதிர்காமன், ச. பி. பால், எம். கிருட்டினசாமி, பி. எம். உலூயிசு, ச. முத்து. 13

தலைக்கு 50 காசு மேனி விடுத்தவர்கள்:–

திருவாளர்கள் நாகரத்தினம், கே. கே. சாமிலிங்கம், து வீரண்ணன், இரா. பொன்னுசாமி, இரே. இராமசாமி, கே. குப்புசாமி, திருஞான சம்பந்தம், கே. அருணசலம், கே. ஆதிமூலம், வி. இராசாமணி, சா. சக்கிரவர்த்தி, எம். ஏ. சுப்பிரமணியம், பி. ஏ. கண்ணன், கே. சொக்கலிங்கம், வாசுதேவன், எம். கோபால், நா. பாண்டுரங்கம், இரெ. ச. முருகன், கே. என். இராமசாமி, இராமநாதன், எம். கண்ணன், கோ. பலராமன், எஃச். நடராசன். 11—50

தலைக்கு 25 காசுமேனி அளித்தவர்கள்:–

திருவாளர்கள் து. இராதாகிருட்டினன், கே. சுப்பிரமணியன், அ. சாம்பசிவம், மா. வே. இராமச்சந்திரன், சோ. கிருட்டினமூர்த்தி, எஃச்.பி.கே. சாமி, ஏ. சோணசைலம், ஆர். கோவிந்தசாமி, எஃச். அண்ணமலை. 2—25

திரு. பெ ந. பழநிசாமி, சைதாப்பேட்டை	4
,, துரை. இராசகோபாலன், கடலூர்.	2
,, துரை. நாராயணசாமி, ஆசிரியர், கல்மண்டபம்.	10

தலைக்கு 5 உருபா மேனி கொடுத்த புராணசிங்கு பாளைய ஆசிரியர்கள்:–

திருவாளர்கள் பா. நடராசன், சி. வேதாசலம், இர. கோவிந்தராசன், செ. செகதீசன், சு. இராமாநுசன், தங்கபாண்டியன் 30

திரு. இரா. கோபாலகிருட்டிணன், தலைமையாசிரியர் மதகடிப்பட்டு. உருபா 5
,, கோ. எல்லப்பன், ஆசிரியர், புராணசிங்கு பாளையம் 3
,, அ. மணவாளன், ஆசிரியர், மதகடிப்பட்டு. 2
,, வ. பக்தவத்சலம், ,, ,, 2

தலைக்கு 1 உருபா மேனி:

திருவாளர்கள் இரா. திருதரன், கே. சௌரிராசன், உலூ கபிரியேல் 3
திரு. அ. அறிவடிவன், காரைக்குடி-4 2
,, ஆ. இ. தங்கராசன், பெங்களூர்-14 2
,, ப. இறைநம்பி, எம். ஏ, அல்லாளபுரம் 3

ஈரோடை கூட்டுறவுத் துணைப் பதிவாளர் அலுவலகத் தொகுப்பாளர் திரு. பெ இராமசாமி வழி:-

தலைக்கு 1 உருபா மேனி கொடுத்தவர்கள்:

திருவாளர்கள் ந உலு கிருட்டினன், கொ. இராமலிங்கம், கு. ச. தங்கமுத்து, க. இரா. பழநிசாமி, கி. சண்முகம், வெ. பத்மநாபன், இரா. சு. தியாகராசன். 7

திரு. வெற்றியழகன், சென்னை-17 1
,, செ. துரைசாமி, பி. எசி., குரோம்பேட்டை 4
,, பெ. கிருட்டினசாமி, இடைசெவல் 1
,, துரைராசு, பெங்களூர்-13 5
,, ச. முத்துராசு, ஒழுகினசேரி 1—25
,, தொ. ப. குப்புசாமி, நெல்லிக்குப்பம் 2
,, க. இர. பாசுக்கரன், சென்னை 1—10
,, சே. க. முருகன், திருப்பனந்தாள் 3—67
இவர்வழி, திரு. ந. கே. வேங்கடேசன் 3
திரு. மா. கோவிந்தன் 2—22
,, வீ. வீராச்சாமி 1—11

தலைக்கு உருபா 1 மேனி கொடுத்தவர்:-

திருவாளர்கள் மு. அழகப்பன், மா. குப்புசாமி, ச. சுந்தரேசன், க. வடிவேலன், ஆ பாலகிருட்டினன் பா. சம்பந்தம், சி. சீனிவாசன், க நாகரத்திரன், சு. இராமசுப்பிரமணியம், க. நாகப்பன், தெ. மு. கிருட்டினமூர்த்தி, மு. கோவிந்தராசன், அ இளமுருகு, சீ. பத்மநாபன், மு. கந்தசாமி, அரங்க நடேசன், வ. சா. கலியபெருமாள், செ. பரசுராமன், அர. சண்முகசுந்தரம், வே. சுப்பிரமணியன், வெ. இரா. துரைசாமி, ச. சுப்பிரமணியன், ப. எட்டிக்கன், க. நச்சினார்க்கினியன், ம. திருஞானசம்பந்தம், சிவ. அருண்மொழித்

தேவன், ஏ. முருகையன், ஆ. இராமச்சந்திரன், தங்க. இராமநாதன், ந. கிருட்டினமூர்த்தி. 30

திரு. வை. முருகேசன் 0—50
,, கோ. முத்துச்சாமி 0—50
,, ப. க. சீனிவாசன், ஆண்டிப்பட்டி (மதுரை) 10
,, செ. பாலசுப்பிரமணியன், சென்னை–17 7

பு. புளியம்பட்டி, மறைமலையடிகள் மன்றச் செயலர்வழி 2-ஆம் முறையாக:–

திரு. பு. ப. ஆறுமுகன் 2
,, ம. ஞானம், எம். சி. 2
,, கோ. ப. பழனியப்பன் 2
,, கி. தங்கவேலன் 1
,, மாரிமுத்து 1
மறைமலையடிகள் மன்றம் 2

பெங்களூர், தூரவாணிநகர் இந்தியத் தொலைபேசி அலுவலகப் பணியாளர் மு. உலகன் வழி:–

தலைக்கு உருபா 2 மேனி:

திருவாளர்கள் மு. உலகன், கோ. சு. கோபால கிருட்டினன், கம்பீரம் 6

தலைக்கு உருபா 1 மேனி:

திருவாளர்கள் அருணகிரி, இராசாமணி, சோபாய், மணி, இரா. சத்தியேந்திரநாதன், சந்திரன் 6

திரு. சி. மு அன்புக்கரசன், பெங்களூர்–2. 2—45
இவர்வழி, திரு ம. கொ. கண்ணன் 2
திரு. பி. எசு. கோபால் 1—50
,, எல். சண்முகம் 1—50

தலைக்கு உருபா 1 மேனி:

திருவாளர்கள்: வி. எசு. ஐசக் (ITI), பெ. அன்பழகன், எம். பாண்டியன், க. கடராசன், அ. கோவிந்தராசன், க. கந்தசாமி, க. சுப்பிரமணி, எல். ஆர். பாஃசா, அ. குப்பன், சி. தேவர் 10

தலைக்கு 50 காசு மேனி:

திருவாளர்கள்: எம். பி. சேது, அ. சிவலிங்கம், ஆர். சுப்பிரமணியம், வி. கே. நடேசன், ஆர். பி. கண்ணன், க. மதிவாணன், பெ. மி முத்தழகன், கோ. சின்னச்சாமி, எல். வடிவேல், க. நடராசு, கிருட்டினன், கன்னியப்பன் 6

தஞ்சை, கரந்தைப்புலவர் கல்லூரி, திரு. த. சரவணன் வழி:	உருபா
திரு. த. சரவணன்	5
,, வே. நடராசன்	5
,, ம. வீரப்பன்	3
,, த. திருநாவுக்கரசு	2
தலைக்கு உருபா 1 மேனி கொடுத்தவர்கள்:— திருவாளர்கள்: இர. சுந்தரேசன், மு. ஆறுமுகம், துரை-இராமலிங்கம், குழ. இராமசாமி, முகமதி. கலைமுகிலன், சோலை. திருநாவுக்கரசு, மா. குருசாமி, க. பச்சமுத்து, பெ. சுந்தரராசன், வீர. இராமையன், குமரலிங்கம்.	11
திரு. அருணை. இராசகோபால், பி.எசி., கோவை-2.	5
,, கு. கனகசபை, இரண்டாம் புளிக்காடு	2
,, கோ. வேணுகோபால், பால்வார்த்துண்ணுன்	0—50
நெல்சன் குழுமம், தென்மொழி முகவர், சென்னை	10
திரு. மகிபை. பாவிசைக்கோ	15
இவர்வழி, திரு. மு. சூரை. ஆ. சொக்கலிங்கம்	15
தலைக்கு உருபா 10 மேனி: திருவாளர்கள்: மகிபை. அ. பிச்சை இபுராகிம், மு சூரை கலைப்பித்தன், கா. நூர்முகமது, மு. அ. முகம்மது இபுராகிம், அ. அப்துல் பரூக்	50
தலைக்கு உருபா 5 மேனி: திருவாளர்கள் இலாரன்சு பி.எசி. ; அருணைசலன்; முத்துப் பழநியப்பன்; ஓவியர் கணேசன்	20
	371—80
பெங்களூர் பின்னி ஆலை அன்பர்கள் எடுத்துக் கொண்ட பணவிடைக் கழிவு:	0—45
மொத்தம்:	371—35
முன் மொத்தம்:	336—05
தொகு மொத்தம்:	707—40

தென்மொழி அன்பர்களுக்கு...!

தென்மொழி முதல் சுவடியின் பல ஓலைகள் வேண்டி அன்பர்களிடமிருந்து மடல்கள் வருகின்றன. இக்கால் அலுவலகத்தில் கீழ்க்கண்ட ஓலைகள் கையயம் உள்ளன. தனிப்படிகள் வேண்டுவார் படி ஒன்றுக்கு 75 காசுமேனி அஞ்சல் தலையோ பணவிடையோ விடுத்து அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

கையிருப்புப் படிகள்: சுவடி. 1. ஓலை 1,2,3,5,6,7,9,10,12.

— அமைச்சர்.

இலக்கியம்

ஆந்தைப் பாட்டு.

ம. இலெ. தங்கப்பா.

(இயற்கைக் கண் கொண்டு நோக்கும் கற்பனை வல்ல கலைஞனுக்கு உலகப் பொருள்கள் அனைத்தும் அழகும் அருமையும் வாய்ந்தனவே. பொதுநிலை மாந்தனுக்குப் புலனாகாத அழகுத்தோற்றங்கள் பல கலைஞனின் கண்கட்குப் பெருக்காடியில் தெரியும் நுண்ணணுக்கள் போல் புலப்படும். அறிவியலறிஞன் ஒருவன் அந் நுண்ணணுக்களின் இயங்கங்களைப் பற்றி அறிந்து தெரிப்பதைப் போல் கலைஞன் பிறர் அழகற்றவை என்று ஒதுக்கும் உலகப் பொருள்களில் உள்ள அழகையும் அவற்றின் வரலாற்றையும் தன் மெய்யுணர்வால் அறிந்து பிறர்க்குக் காட்டுகின்றான். குருவி விட்டுவிட்டிசைக்கும் மணி முரலுக்கும், புறவின் குணுகலுக்கும் கோழியின் கொக்கரிப்புக்கும், எலியின் குசுமலுக்கும், பூனையின் மூச்சொலிக்கும், ஆடு மாடுகளின் அகவோசைக்கும், கழுதையின் கதறலுக்கும், குதிரையின் கனைப்புக்கும், நாயின் ஊளைக்கும், யானையின் பிளிறலுக்கும், அரிமாவின் கார் முழக்கிற்கும் தனித்தனிப் பொருள்கள் உண்டு. அவற்றில் இன்பமும் ஏக்கமும், உண்டு; அச்சமும் அவலமும் கலந்திருக்கும். அவை தம் மொழியை நம் மொழியால் வடித்தால், அவை மாந்தனின் செருக்குளத்தை அறுக்குந் தகையன வாகவு மிருக்கலாம்; இவன் நாகரிகத் தொழு நோய்க்குத் தக்க மருந்தாகவும் பயன்படலாம்; இவன்றன் கங்கு கரையற்ற காதல் வெறிக்குக் காப்பாகவும் அமையலாம்.

பாரதியாரின் குயில் அவ்வாறு எழுதப்பெற்ற ஒரு கற்பனை உருவகம். நீங்கள் இப்பகுதியில் சுவைக்கப்போகும் 'ஆந்தைப் பாட்டு' அதைப்போன்றதே! ''குயில்'' பிறர்க்கு மனக்கிளர்ச்சியை எழுப்புவது. ''ஆந்தை'' மனவுணர்வோடு அறிவுணர்வையும் கிளறுவது. அழகுப் பொருளை அழகென்று கூறிவதினும், அழகற்ற பொருளை அழகென்று வியந்து பாராட்டக் கற்பனைப் பரப்போடு உள்ளப் பரப்பும் அமைதல்வேண்டும். அத்தகையார்க்குக் குயிலும் ஆந்தையும் ஒன்றே! இருளும் ஒளியும் ஒன்றே! காதலும் சாதலும் ஒன்றே! புழுவும் தெய்வமும் ஒன்றே! இத்தகைய நல்லுணர்வுக்கு நம்மை அழைத்துச்செல்கின்றார் இவ்வாந்தைப் பாட்டாசிரியர்.

— **ஆசிரியர்**)

மாலை எழிற்கதிரோன் தன்முன் வரக்கண்டு
மேலை அடிவானம் நாணி முகம் சிவக்கும்;

சின்னஞ் சிறுமுகில்கள் செய்யோன் ஒளிமூழ்கிப்
பொன்னின் பிழம்பாகும்; பொற்புமிழுஞ் சோலையெலாம்.

அன்பற்ற பாழுலகின் ஆர்ப்பரிப்பை எண்ணிஎண்ணித்
துன்புற்ற நெஞ்சின் துயரம் மறத்தற்கே

ஆற்றோரம் சென்றேன்; அழகின் ஒளிதோய்ந்து
மேற்றிசையை நோக்கி நடந்தேன் மிளிர்கரைமேல்!

தென்றல் தவழும்; செழும்பூ மணங்கமழும்;
துன்றும் மரக்கிளைமேல் புள்ளமர்ந்து பாட்டிசைக்கும்;

புள்ளிருந்து பாடும் புதுப்பண்ணுக் கேற்றபடி
கள்ளருந்திப் பூமேல் களிவண்டர் ஒத்திசைக்கும்;

ஆற்றுநீர் மோதி அணையில் முழவொலிக்கும்;
சேற்றெருமைக் கூட்டம் திரளாய் வழிநடக்கும்;

நீர்பாய் நெடுங்கழனி வானின் நிறம்காட்டும்;
கூர்வாய்ப் பெருநாரை கூவித் துணை அழைக்கும்;

வாய்க்காலில் மீன்துள்ளும்; வானில் சிரல்பாயும்;
பூக்காத தாழைப் புதரிலொரு பாம்போடும்;

யாவும் நுகர்ந்தேன்; எழில்சேர் இருங்கரைமேல்
மேவுமென் கால்கள் விரைந்திழுப்ப நானடந்தேன்.

நீரார் வயலும் நிழலார் பசும்பொழிலும்
ஓராங்கு மாறி ஒளியிழந்த தாற்றோரம்.

கட்செவிகள் வாழுங் கரையானின் புற்றுடனே
முட்செடிகள் சூழ்ந்த முரம்புநிலம் தோன்றிற்றால்!

மேற்றிசையில் வான விளக்கின் ஒளிசற்றே
ஆற்றல் குறைந்துவரும் அவ்வேளை என்னெதிரில்
ஆற்றயலில் மேட்டில் அமைந்த சுடுகாடு
தோற்றம் அளித்ததுவால்; தூண்டலுற்ற வேட்கையால்
சென்றாங்கு நின்றேன்; சிலிர்த்ததுளம்! பொய்யுலகின்
மன்றமர்ந்த வாழ்க்கைக்கு மாற்றலன்யான்
என்பதுபோல்

வெட்ட வெளிக்கண் வியன்காடு காட்சிதந்து
குட்டை உலகின் குலுக்கைச் சிரித்ததுகாண்!
ஆரும் நடமாட அச்சமுறும் அவ்விடத்தே
மாறாத பேரமைதி மண்டி யிருந்ததுவால்!
எல்லையிலாத் துன்பின் இயக்கத்தால் நெஞ்சடங்கிச்
சொல்லடங்கிப் போனமையால் தோன்றும் அமைதி
கொலோ

மாந்தர் சுமந்தவுடல் மாய்கையொடு பூசலெலாம்
சேர்ந்தெரிந்து போனமையால் சேரும் அமைதிகொலோ?
வாழ்க்கை விளிம்பில், வகைகொள் பருவுலகின்
பாழ்த்த நிலையழிவாற் பாயும் அமைதிகொலோ?

அந்த அமைதியர சாளுங் குடைநிழற்கீழ்
வெந்த உளம்குளிர்ந்தேன்; விட்டகலும் எண்ணமற்றேன்,
சுற்றுமுற்றும் நோக்கினேன்; சுக்குக்கற் பாறைமேற்
பற்றியங்குச் சாம்பல் படர்ந்திருக்கும்; ஆங்காங்கு
வெள்ளெலும்பு மின்னும்; விறகெரிந்து வீழ்ந்திருக்கும்;
கொள்ளிக் குடத்தோடு கோணற் கழைகிடக்கும்.
செல்லலுற்றேன் மேலும்; சிறுதொலைவு செல்முன்னொரு
கல்லறைக் கோட்டமெதிர் கண்டேன்; அவண்சென்றேன்.
மேவும் கொடும்போரில் வீழ்ந்து பலர்மடிய
யாவும் ஒடுங்கி இரவில் அடங்கியதோர்

போர்வேந்தர் பாசறையே போலுமந்தக் கோட்டத்துள்
ஆர்வந்து நின்றங் கழுது புனைந்தாரோ,
தார்கள் சருகாகி மண்ணிற் கிடந்தழியும்.
யார்கொல்? எனையரோ இங்குத் துயில்புரிவார்?
சாகுமட்டும் வைதிடுவார்; சள்ளைஎன்பார்; தொல்லை
போகும் உயிரைப் புறம்நின்று தள்ளிடுவார்; [என்பார்
அந்தவுயிர் போனபின்போ, ''ஐயா இறந்தனையோ?
எந்தாய் இறந்தனையோ? யாயே மடிந்தனையோ?
என்றன் விழியனையாய், இன்னுயிரே, மாய்ந்தனையோ?
உன்றன் பெருமைக் குலகனைத்தும் ஈடாமோ?

சென்றாயோ? என்வாழ்வைச் சிந்தவிட்டுச் சென்றாயே!''
என்றிவ்வா றேங்கிடுவார்; எங்கோ பறந்தோடி
மாலைகொணர்வார்; மலர்கொணர்வார்; செத்தவர்க்குக்
கோலம் பலபுனைவார்; கோடி உடுத்திடுவார்;
கல்லறையும் கட்டிவைத்துக் கண்ணீர் சொரிவாரே!
நல்ல உலகம்!என எண்ணி நடந்திட்டேன்.

வாழ்ந்த வளம்ஒழிந்து, வன்கண் நிரப்பொழிந்து
மாந்தரெலாம் ஒன்றாய்இம் மண்ணில் துயில்கின்றார்.
'சாதி'யெங்கே? 'சாதி'த் தருக்கெங்கே? பொய்ச்சமயம்
பேதைமை எங்கே? பிளவுமிகு பூசலெங்கே?
அல்லும் பகலும் அயலார்ச் சுரண்டிவைத்த
செல்வமெங்கே? செல்வச் செருக்கெங்கே? வாழுங்கால்
கொண்ட பகட் டெங்கே? குலுக்கு மினுக்கெங்கே?
மண்டெரியில் மண்ணில் மடியும் பருவுடற்கோ
ஈசற் புழுவனையர் இவ்வாட்டம் காட்டுகின்றார்!
பூசலிட்டு மெய்மைப் பொருள்மறந்து வீழ்கின்றார்!
கண்ணிற் புனல்பனிப்பக் காட்டைக் கடந்துசென்றேன்.
உண்ணேர் தனிமை உறைகின்ற நெஞ்சோடும்,
நெஞ்சக் கனவுகளில் நீந்தும் விழிகளொடும்
விஞ்சும் உலகின் வெறுமைக்கு மாற்றெண்ணி
ஆற்றோரம் நின்றேன்; அசைந்த இளந்தென்றல்
காற்றும் நினைவின் கழிதுயரை மாற்றவில்லை.
நேரம் நடைவிரையும்; நீள்கதிர் மேற்றிசையின்
ஓரத்தி னின்றே உருண்டுவிழும் மேல்கடலுள்
வானம் ஒளியிழக்கும்; வாய்ந்தசெழுஞ் செவ்வானின்
மேனி அனலவிந்த சிற்றுலைபோல் நின்றிருளும்.
அவ்வுலையில் மிஞ்சுபுகை அப்பால் பரவுதல்போல்,
எவ்விடமும் தாவி இருள்பரந்து மேலோங்கும்.
ஆற்றயலில், புல்தரைமேல், ஆங்கோர் மரத்தருகில்
ஏற்ற களைப்பொழிய யான்சாய்ந்தேன்; அவ்விருளால்
நீலப் புனலாறும் நீள்கரையும் வெங்காடும்
கோலந்தான் மங்கிக் குழம்பிக் கிடப்பதையும்
நெட்டை உருக்கறுத்து நின்ற மரத்திலொரு
மொட்டைக் கிளைதாழ்ந்தென் முன்வளைந்து தோன்றலையும்,
அண்டையிலோர் கல்லறையில் ஆரோ விளக்கெடுப்ப,
மண்டும் இருள்நடுவில் அந்த மணிவிளக்கும்
பொல்லா இளங்காற்றில் போராடிப் போராடி
நல்லுணர்வுத் தொண்டரைப்போல் நைந்துயிரை
விட்டதையும்,

பார்த்திருந்தேன்; அற்றைப் பனிநிலவு காண்பமெனக்
காத்திருந்தேன்; எவ்வாறோ கண்ணயர்ந்து
போய்விட்டேன்.

* * *

எத்தனை நாழிகைதாம் ஏகியவோ நானறியேன்!
கத்தும் குரலொன்று காற்றைக் கிழித்தெழுந்தென்
உள்ளமைதி போழ, உடனங் கெழுந்தமர்ந்தேன்.
கொள்ளை அழகிற் குளிர்குழையும் வெண்ணிலவில்
நேராய் எதிர்தாழ்ந்த நெல்லி மரக்கிளைமேல்
ஆரும் புகழாத ஆந்தையொன்று வீற்றிருந்து
துன்ப உளத்தின் துடிப்பெல்லாம் மீறுதல்போல்,
வன்பால் உளம்வெடித்து வன்முழக்காச் சீறுதல்போல்,
துன்பக் குரல்எழுப்பி எங்கும் பரப்பியதை
என்புருகக் கேட்டேன்; இசைவெள்ளத்
தாழ்ந்துவிட்டேன்.
அந்த இசையில் அமிழ்ந்திருக்கும் அவ்வளவில்
மந்திரமோ, செந்திறமோ? மற்றெதுவோ? அக்குரல்தான்
மாந்தர் குரலாக மாறுவதை நானுணர்ந்தேன்
வாய்ந்த பொருளும் வகையாய் விளங்கிற்றால்:–

(தொடரும்.)

தென்மொழித் தொகுப்பு.

முதல் சுவடி.

முதல் சுவடியின் பன்னிரண்டு ஓலைகளும் சேர்ந்த தென்மொழியின் புதிய தொகுப்பு விற்பனைக்கு அணியமாயுள்ளது. மிகவும் குறைந்த தொகுப்புகளே கைவயம் உள்ளமையால் தேவையான தமிழன்பர்கள் உரிய முழுத் தொகையையும் அனுப்பி, விரைவில் பெற்றுக்கொள்ள வேண்டுகின்றோம். படிகள் எஞ்சாமற்போமாயின் பின்னர் வருந்தநேரும். இலக்கிய இலக்கண அறிவியல் பற்றிய பல்துறை ஆராய்ச்சிக் கட்டுரைகள் 63ம், ஆங்கில மொழியாக்கங்கள் 12ம், 16 நூல்நிறைகளும் 73 இன்சுவைப் பாடல்களும், முழு இலக்கியம் ஒன்றும், 27 சொல் விளக்கங்களும், 31 துணுக்குகளும், 106 கருத்துரைகளும், 62 வினு விடைகளும், 8 சிறுகதைகளும், 3 நூற்சுருக்கங்களும், 6 கற்பனை ஊற்றுக்கட்டுரைகளும், 7 அறிஞர் வரலாறுகளும் கூடிய அறிவுப் பெட்டகம்! உயர்ந்த அழுத்தமான கட்டடம். பதிவு அஞ்சல் செலவும் சேர்ந்து விலை 10 உருபா. உங்கள் படிகட்கு உடனடியாக எழுதுங்கள்.

– அமைச்சர், தென்மொழி.

இலக்கியத்திறன்

கருத்திலக்கியம்.

புலவர். தி. நா. அறிவுஒளி, திருப்போரூர்.

ஒழுங்குபட்ட எண்ணங்கள் என்றும் ஒழுங்கு படுத்தப் பட்ட எண்ணங்கள் என்றும் இருவகை எண்ணங்கள் நிலவு கின்றன. சீரிய சான்றோர் ஒழுங்குபட்ட எண்ணங்களை எண்ணும் சிறப்புடையோராவர். அத்தகையோரின் கருத்து களையும் அறிவையும் உணர்ந்த மக்கள்–சுவைஞர்–தம் எண் ணங்களைப் பண்படுத்திக் கொள்கின்றனர். இவ்வாறு பண்பட்ட எண்ணங்களைக் கண்டு கற்றுணர்ந்து பண்படுத்தப்பட்டவை ஒழுங்கு படுத்தப்பட்ட எண்ணங்களாம். ஒழுங்குபட்ட எண் ணங்கள் இயற்கையாக அமைந்து தனித் தன்மையோடு கூடிய உயர்திறன் வாய்ந்தமைபவை. ஒழுங்கு படுத்தப்பட்ட எண் ணங்கள், பண்பட்ட கருத்துகளால் வளர்க்கப்பட்டவை; ஆதலால் ஓரளவு செயற்கைச் சாயல்கொண்டவை. ஒழுங்குடை எண்ணத்தினர் படைக்கும் இலக்கியங்கள் கருத்திலக்கியங்க ளாகத் திகழும். அத்தகு கருத்திலக்கியங்களைக் கற்போர் ஒழுங்குபடுத்தப்பட்ட எண்ணமுடையராகச் சீர்திருந்துவர். கழக இலக்கிய மரபின் தனித் தன்மைகள் பலவற்றுள் ஒன்று அஃது கருத்திலக்கியமாகத் திகழ்வதாகும்.

நம் நாட்டு இலக்கியங்கள் அரசியல் என்ற மரத்தை ஒட்டித் தழுவி வளர்ந்த கொடியாகவே இருந்திருக்கின்றன. அரச குடியினரின் கதையை அவர்கள் வாழ்வை–இன்ப துன்பத்தை– பாடும் மரபு பண்டைக் காலத்திலிருந்து வழக்கிலிருப்பது. அத் தகைய படைப்புக்கும், படைப்பாளர்க்குமே அரசின்–அரசர் களின்–அன்பும் உதவியும் கிடைத்திருக்கின்றன. இந்நிலை கழகக் காலத்தில் இல்லை. இன்றும் இந்நிலை ஓரளவு மேற்குடியினரைப் பற்றியே எழுதும் நிலையில் உருமாறியமைந்திருக்கிறது என்பதை நாம் மறத்தற்கில்லை.

தனியியல்புடைய மக்கள் வாழ்விலக்கியம் இடைக் காலத் தில் பல நூற்றுண்டுகளாகவே இல்லை எனலாம் அரசியலி னின்று சமயத் துறையைப் பற்றிவிட்டது இலக்கியம்! இவ்வாறு குறிப்பிட்ட எல்லையில் சிறைப்படும் நிலையினின்றும் விடுபட்ட நிலையே இலக்கிய வளர்ச்சிக் கட்டத்தில் பெரியதொரு புரட்சி நிலை எனலாம். அரசியல் தழுவிய இலக்கியமோ, சமயந்தழுவிய இலக்கியமோ, வேறு எந்தச் சிறு சார்பு தழுவிய இலக்கியமோ வெற்றி பெறுது அம்மட்டோடமையாது காலக்காற்றில் அடித்

துச்செல்லப்பட்டு அழியும். ஆகவே மக்கள் தழுவிய இலக்கியம், உலகு தழுவிய இலக்கியமாக ஆக்கப்படுமாயின் அதுவே காலம் வென்று வாழும் உண்மை இலக்கியமாகத் திகழும்.

நம் நாட்டுப் பாவியங்களின் தலைவர்கள் அரசர்–செல்வ ராகவே இருந்திருக்கும் உண்மை அறிவோம். இதன் காரணம் என்ன? அக்கால அறிஞர்கள் செல்வர்–மன்னரை அடுத்தே வாழ்ந்திட வேண்டிய நிலையில் இருந்ததும், அம் மேற்குடியினர் பால் பிறர் கொண்டிருந்த மேலான மதிப்புமே அவ்வகை உறுப் பினரும், கதைப்போக்கும் அமையக் காரணமாக அமைந்தன. இந்நிலையை மாற்றும் புரட்சியுணர்வு இடையிடையே சில புலவர்கட்கு அமைந்திருந்தும், காலப்போக்கால் வெற்றிபெற வில்லை. ஆனால் நாட்டு வாழ்வில் ஏற்பட்ட பலவகை வரலாற்றுச் சீர்மை சான்ற மாற்றங்கள் இலக்கியப் பழம் போக் கையும் தாக்கி மாறுதல் செய்தன. மக்கள் இலக்கியம் என்றும் கருத்திலக்கியம் என்றும் புதுமலர்ச்சிப் படைப்புகள் தோன்ற லாயின.

பண்டைத் தமிழிலக்கிய மரபே மீண்டும் புத்துயிர் பெற்று வளம் பெறுகிறது என்ற உண்மையை உணர்வோமாயின் கருத் திலக்கியத்தின் சிறப்பை மேலும் விளக்க வேண்டியதில்லை. இடைக்காலப் போலி மரபுகள் பொய்த்து விட்டமையையும் சுட்டிக்காட்டியே ஆகவேண்டும்.

மக்களையும் வாழ்வையும் உலகியலின் அறியாமையையும் எள்ளலோடு நடித்துக்காட்டி, அவர்தம் குற்றங் குறைகளை வெளிப்படுத்தி இகழச்செய்து அறிவுறுத்துவதே இலக்கியத்தின் சீரிய பணியாகும். எந்தப் புலவனும் எழுத்தாளனும் மன் பதையை–வாழ்க்கை மடமைகளைத் தாக்கவோ, கிண்டல் செய் யவோ, குத்திக் காட்டவோ முயலாதிருந்ததில்லை. குறிப்பாக, நாடக இலக்கியம் மன்பதையின் குறைகளை–மாசுகளை-அழிக்கும் சீர்திருத்தப் போர்ப்படை என்பதை நன்கு அறிய வேண்டும். நாடகம் பார்த்துச் சுவைக்கும் போதும், இலக்கியம் கற்றுச் சுவைக்கும்போதும் மக்கள் தம் மடமைகள்–தவறுகளைப்பார்த்துத் தாமே சிரித்தோ, உணர்ந்தோ சீர்திருந்த வேண்டும். இந் நோக்கத்திற்காகவே அக் கலைப்படைப்பை உருவாக்குகிறார்கள்.

கலைஞர்களும் எழுத்தாளர்களும் கதை-நாடகம்-பாடல்கள் வாயிலாக மக்களின் மடமை-அறியாமை-போலித் தன்மை-குற்றங்குறைகள்-பண்படாமை போன்றவற்றைச் சுவையோடு சுட்டிக்காட்டுகின்றனர். மக்கள் தங்களையே பார்த்துத் தாமே சிரித்து எள்ளி இழித்துச் சுவைக்கின்றனர். நம்முடைய பண்பு களே கலை-இலக்கியங்களில் ஊர் சிரிக்கக் காட்டப்படுகின்றன

என்பதை உணராமலே கூடச் சிலர் கலை–இலக்கியங்களைச் சுவைப்பதுதான் இங்கு மிகவும் சுவையான வியப்பு! இந்த மறைமுகத் தாக்குதலைத் தம்மை உணராமலே ஏற்றுக்கொண்ட மக்கள் அக் கலைப் படைப்பாளனைப் புகழ்ந்து பேசி, வழக்கம் போல் தம் தவறுகளைச் செய்துவரும் அவலநிலையும் உலகியலில் காணலாம். கதையில்-நாடகத்தில்-பாவியத்தில் வரும் தீமைகள்-குற்றங்குறைகளைத் தீயவை என உணரும் உள்ளத்தைச் சுவைஞரிடம் உண்டாக்கும் பெருந் தொண்டே கலை-இலக்கிய வெற்றியாகும். மக்களின் முன்னிலையிலேயே அதே மக்களின் வாழ்வை ஓவியமாக்கிக் காட்டி, அவர்தம் தவறுகளை உணர்த்திச் சீர்திருத்தும் எழுத்தாளர் திறமை தனிச் சிறப்புடையதேயாம். ஆனால், மக்கள் தம்மைப் பார்த்துத் தாமே சிரித்து எள்ளி நகையாடிப் பேசிவிட்டு, 'அது தங்களையன்று' என்ற எண்ணத்தோடு பழைய குருட்டு முறையிலேயே வாழ்வை இயக்கும் இழிநிலை பேரறியாமையின் எடுத்துக்காட்டாக அமைகிறது. எழுத்தாளரின் எள்ளல்-அறிவுரை-பொதுமக்களை அணுகித் தைக்காததற்குக் காரணம் இந்நுட்பத்தைப் பொதுமக்கள் புரிந்து கொள்ளாததேயாம். இத்தகு கருத்திலக்கியத்தின் வளமே நாட்டு வாழ்வுச் செம்மைக்கு நனி இன்றியமையாதது.

தமிழிலக்கியத்தில் கலையழகு–கலைநயம்–இலக்கியச் சுவை என்ற பெயரில் பகுத்தறிவுக்கு ஒவ்வாததும், உண்மைக்கு மாறுபட்டதுமான அறியாமை வாய்ந்த படைப்புகள் மலிந்து கிடப்பதும், அவற்றைப் படித்தும், பிறர்க்கு உணர்த்தியும் பரப்பும் பேதையர் கூட்டம் மிகுந்து கிடப்பதும் கருத்திலக்கிய வளர்ச்சிக்குப் பெருந்தடையாக இருக்கின்ற உண்மையை வற்புறுத்திக் கூற விழைகிறேன். மடமை ஓம்பும் அழிவிலக்கியங்களைப் புறக்கணிப்பது மன்பதை வளர்ச்சிக்கும், மக்கட் பண்பாட்டு வளத்துக்கும் நல்லது. சீர்திருந்திய வாழ்க்கையும், அறிவியல் சிறப்பும் அமையக் கருத்திலக்கிய வளம் செழித்தல் மிக மிக இன்றியமையாததாகும்.

மக்களுக்கு வேண்டிய கருத்து என்ன என்பதையும், மன்பதைச் சீர்திருத்தத்துக்கு இன்றியமையாததும், அறிவியல் வளர்ச்சிக்கு நனி வேண்டியதும், உள்ள மலர்ச்சிக்கு–உணர்வுப் பண்பாட்டுக்கு–அக நெகிழ்ச்சிக்கு–இன்றியமையாது உதவுவதுமான எண்ணங்களையும், பகுத்தறிவு வளர்ச்சிக்குப் பயன்படும் இலக்கியங்களையும் எழுதுபவரே உண்மையான எழுத்தாளர்; இலக்கியப் படைப்பாளர்; புலவர் ஆவர். அத்திறமும் தொண்டும் ஆற்றாதார் பல்லாயிரம் பேரால் படிக்கத் தக்கவராயினும், பல கோடி இதழ்கள் விற்பதற்குரிய எழுத்தை எழுதியவராயினும், பெரிய இதழில் எழுதுபவராயினும் எழுத்தாளராகார்; இலக்கியப் படைப்பாளர் ஆகார். நம் நாட்டு நூல்களில் பல, மக்களின்

முற்போக்கான எண்ண வளர்ச்சிக்கோ, அறிவு வளத்துக்கோ, ஆராய்ச்சித் திறனுக்கோ வழி வகுக்காமல் மடமை நம்பிக்கைகளுக்கும் ஏமாறும் தன்மைக்கும் உரமூட்டும் நிலையிலிருப்பதை மிக வன்மையாக இளைஞர்களும் அறிவுலகமும் எதிர்த்தழிக்க வேண்டும். பட்டந்தாங்கிகளாகப் பணிபுரிபவர்களும் கூடப் பயனற்ற முயற்சிகளில் தம்மறிவைப் பறிபோகவிட்டு, மொழித்துறையில் பாழ்மையை வளர்ப்பதைக் காணும்போது 'தமிழ் உருப்படுமா?' என்று ஐயப்பாடு உண்டாவது இயல்பே.

செய்தித் தாள்களின் செய்திகளைத்திரட்டிக் கட்டுரை வடிக்கும் எழுத்து மன்னர்களும் (?) பழமையான—மடமையான—கருத்துக்கு, மேனாட்டார் அரிதின் ஆராய்ந்து கண்ட அறிவியல் உண்மைகளை மேற்பூச்சாகப் பூசிக் குழப்பி, 'ஈதோ காணீர்! ஆகா! பண்டைக்கால நம் முன்னோர் அன்றே கண்டுபிடித்த அறிவியல் உண்மைகள் இவையாகும்! இதுகாறும் உருவகமாக—மறைபொருளாக—இவ்வுண்மையைப் புதைத்து வைத்திருந்தனர் ஆன்றோர். இன்று நாம் புதையலைத் தோண்டி எடுத்துப் புலப்படுத்தி விட்டோம், காணீர்!'' என முழங்கிச் செருக்கவும் காணலாம். இவர்கள் தம் பேதைமைக்குக் கழிவிரக்கப்படுவதைத் தவிர வேறு என்ன செய்ய வியலும்?

சமயத்துறை நம் நாட்டில் பெரியதொரு பிற்போக்கு ஆற்றலாகவே இருந்து வந்திருக்கிறது. அறவுணர்வும் ஒழுக்கமும் போலச் சமயம் வாழ்க்கைச் செப்பத்தை ஓம்புவதாகப் பயன்படவில்லை. சமயம் முற்போக்கு ஆற்றலையும் அறிவியல் நோக்கையும், அறவளத்தையும் அழித்துவிடும் எதிர்ப்பாற்றலாகவே இருந்து வந்திருக்கிறது. தன்னலமிக்க ஒரு கும்பலின் கொள்ளைக்கூடமாகச் சமயம் விளங்கியதற்கு வரலாற்றுக் கல்வெட்டு—வாழ்வியல் சான்றுகள் அளவற்று மலிந்துள்ளனவே தவிர, ஆராய்ச்சிக்கோ, அறிவியலுக்கோ, உலகோடு ஒத்தியங்கும் வளர்ச்சிக்கோ, அரசியல் வளர்ச்சிக்கோ, மன்பதை யுரிமை இயக்கத்திற்கோ ஆற்றலூட்டுவதாகச் சமயம் இருந்ததே இல்லை. இதே நிலையில்தான் சமய நூல்களும் இருந்திருக்கின்றன; இன்னும் அதே பழமைப் பாசறையாக இருக்கின்றன. இச் சமயத்தையும் சமயக் கோட்பாட்டையும் தமக்கு ஏற்ற கொள்கையாகத் தவறுகப் புலவர்கள் கருதிவிட்டமையால் தான் பயனில் இலக்கியங்கள் படைக்க நேர்ந்தது.

இலக்கியப் படைப்பாளர்கள் தங்களைத் தாங்களே எளிய நிலைக்கோ, கொள்கைகளுக்கோ விலை பேசி விற்றுக் கொள்வது மிகத்தீது. இஃது அவர்களின் தோல்விக்கு வழி வகுக்கும். அது மட்டுமின்றி, அவ்வறிஞர்களின் படைப்பாற்றலின் வெற்றியை

யும் தாக்கும். இந்த அறியாமையை மேற்கொண்டோர் யாவரும் வீழ்ந்துபட்டிருக்கின்றனர். கருத்திலக்கிய வளர்ச்சியைத் தகைந்த மற்றொரு நிலை மன்பதையில் அறிஞர்கள் வறியவர் களாக வாழ நேர்ந்த அவல நிலையாகும். இதனால் வயிற்றுப் பாட்டுக்கே வாழ்க்கையையும் மூளையையும் அடைமானம் வைத்து வாழ வேண்டிய கட்டாய நிலைக்குப் புலவர்களும், அறிஞர்களும் ஆளானார்கள். இந்த இழிநிலை இன்றும் மாறிவிட வில்லையென்பதை இங்குச் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது. செல்வரையோ, அரசையோ அண்டி வாழும் நிலையே அறிவுல கில் பெரிய பாழை—வீழ்ச்சியை—உருவாக்கிவிட்டது. இந்த உண்மையைத் தெளிந்தால் உரிமையோடு கலைஞர்கள்-புலமைச் செல்வர்கள்- வாழ்ந்து—அறிவுப் பணிபுரிய வேண்டிய இன்றி யமையாமை தெள்ளத் தெளிவாகப் புலனாகும். கருத்திலக்கிய வளர்ச்சி அறிவுலகின் வெற்றிக்கு இன்றியமையாதது என மக்களும், எழுத்தாளர்களும், திறனாய்வாளர்களும் உணர்ந்தா லொழிய மொழி வளமும், பண்பு வளமும் கூடச் சிறக்கமாட்டா என்பதை யாரும் மறக்கக் கூடாது *

தென்மொழி

கடலூர்-2.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்.	50 காசு.	60 காசு.	75 காசு.
ஆண்டுக் கட்டணம்.	6 உருபா.	7-25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்.

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனை யாளர் எழுதிக் கேட்கவும்.

பைந்தமிழ்ப் பணி.

தாயெனக் குள்ளாள்; தமிழ்தான் அவள்பெயர்
தருவேன் உயிரவட்கே!
மாய்வது திண்ணம், மண்ணொடு பிறந்தவள்
மலர்ந்திட எருவாவேன்!

நாடெனக் குண்டு; நற்றமிழ் நாடே!
நாடேன் பிறநாட்டை!
பாடெலாந் தந்து பைம்பொழி லாக்கிப்
பாரில் உயர்த்திடுவேன்!

ஏடெனக் குண்டு; இன்றமிழ் இலக்கிய
இலக்கணங் கற்பேன்யான்!
நாடுவேன் பின்றை நன்மொழி ஆங்கிலம்
நலஞ்செய் வேன்தமிழ்க்கே!

துயில்பவர் எழுப்பித் துணிவொடு தூய்பணி
துவங்கிடச் செய்திடுவேன்!
பயில்பவர் நரம்பில் பைந்தமிழ்க் குருதி
பாய்ச்சுதல் என்பணியே!

ஆளுக் கொருநெறி அரசியல் கண்டிடும்
அவல நிலையொழிப்பேன்!
நாளுக் கொருநிலை நாடிடும் புல்லரை
நாயினுங் கீழ்மதிப்பேன்!

பாலிலே நஞ்சா? பைந்தமிழ்ப் பாலில்
பன்மொழிச் சொற்கலப்பா?
காலிலே தளையா? கனிதமிழ் காத்தால்
காரிருட் சிறைபரிசா?

வந்தவ ரெல்லாம் வாழ்க்கை வளமொடு
வளர்வதைக் காணுகின்றேன்!
இந்தமண் பெற்றவர் எங்கெங்கோ ஓடி
இரப்பதை யான்தவிர்ப்பேன்!

நூற்றுக்கு நூறு நூற்களில் தெருவில்
நுவலும் மொழியிலெல்லாம்
போற்றிடத் தனித்தமிழ், புதுப்பணி யாற்றிடப்
புறப்பட் டேன்! அடடா!

இரா. இளவரசு, எம். ஏ.

சட்ட அமைப்பும், மக்கள் மனப்பாங்கும்!

மு. சாத்தையா, எம். ஏ.

நல்லவர்தம் நெஞ்சங்களில் நாட்டைப்பற்றிய கவலை என்றும் இருக்கிறது வாழ்வில் ஒழுங்கமைத்துக் கொண்டு மகிழும் அவர்கள் மன்பதையிலும் அதே ஒழுங்கும் நெறியும் அமைய வேண்டுமென்று துடிப்போடு எதிர்பார்க்கிறார்கள். தம் வாழ்வின் தேவைகளைக் கூடத் தூசென மதித்துப் புறந்தள்ளத் துணியும் நெஞ்சம் மன்பதையின் கோணலைக் கண்டு கண்டு குமைகின்றது; என்றேனும் மக்கள்தம் நடப்பில் செம்மையும், ஒழுங்கும் அமையாவா என்று ஏக்கத்தோடு எதிர் பார்க்கிறது. மன்பதைச் சீர்திருத்திகள் (Social Reformers) எல்லார்க்கும் இந்தக் கவலை பொது. அதனால்தான் வள்ளுவரும் நன்றறி வார்க்கு என்றும் நெஞ்சத்து அவலம் உண்டு என்றார். இந்தக் கவலைக்குக் காரணம் மன்பதை அமைப்பில் உள்ள கோளாறு தான்; பல்வேறு முரண்பட்ட பண்புகள் படைத்த மக்களிடையே ஏற்படும் மோதல்கள் மெல்லமெல்ல வளர்ந்து பொது ஒழுங்கைக் கெடுக்கின்றன. அந்த நிலையில் நாட்டின் அமைதி நசுங்கு கிறது; நல்லவர்தம் மனமும் தாக்கப்படுகிறது.

மக்களாட்சி மலராத காலத்தில் அரசனே அனைத்து நிலை களையும் மேற்பார்க்க நேர்ந்தது. அவன் இட்ட ஆணைகளே நாட்டை ஆண்டன. இன்றோ, நாடு முழுமைக்கும் பொதுவான சட்டங்கள் உருவாக்கப்பட்டு நடைமுறையில் கையாளப்படுவ தோடு, அவ்வப்போழ்து ஏற்படும் பூசல்கட்கும், புல்லிய நிலை கட்கும் ஏற்பப் புதுப்புதுச் சட்டங்களும் உருவாக்கப்படுகின்றன 'மக்கள் நலம்' எனும் பெயரால் ஆட்சியாளர் ஆக்கிப் படைக்கும் சட்டங்கள் மக்கள் மன்றத்திற்கு வரும்பொழுது விளைவுகளும் வெவ்வேறு வகையாக அமைகின்றன இதன் காரணம் மக்கள் தம் மனப்பாங்கில் அமைந்துள்ள விருப்பு, வெறுப்புகளே. ஆட்சி யாளர் தம் தன்னலத்துக்குப் பொதுநலச் சாயம் பூசிப், புல்லிய வேட்கைகளைப் பொது வினைத் தோற்றத்தால் போர்த்து அனைத் துக்கும் ஆணவ முத்திரை பொறித்து உருவாக்கும் சட்டங்களை உடைத்தெறியவும் துணிந்து சட்டத்தையே போட்டிக்கிழுப்பது மக்கள்தம் மனப்பாங்குதான்.

வாழ்க்கையிலும் வேறு துறைகளிலும் ஒன்றுக் கொன்று முரணான இரு கருத்துகளோ இரு முடிபுகளோ இருத்தல் இயல்பே. மக்கள் மனப்பாங்கு சட்ட அமைப்புக்கு எதிராகவோ சில நேரங்களில் ஒத்துப் போகக்கூடியதாகவோ இருக்கலாம்.

சட்டத்தின் வலிவையும், நலிவையும், பின்விளைவுகளையும் மக்கள் மனப்பாங்கில் நேரும் மாறுதல்களைக் கொண்டே அறிய முடியும்.

சிற்றூரில் வாழும் ஒருவன் ஒரு நகரத்தில் மிதிவண்டி ஓட்டும்பொழுது இடப்பக்கம் போதல்வேண்டும் என்பதறியாமல் இயல்பாக அங்குமிங்கும் ஓட்டி அதனால் ஒரு மோதலுக்குக் காரணமாகின்றான் என்று கொள்வோம். அவன் குற்றவாளிக் கூண்டில் நிற்கும் பொழுது, 'இடப் பக்கந்தான் போக வேண்டுமென்பது தெரியாது; எந்தப் பக்கத்தில் இடம் கிடைத்தாலும் போவதே முறை என நினைத்தேன்' என்பானாயின், சட்டம் அவன் அறியாமைக்கு இரங்கி அவனை மன்னிப்பதில்லை. காரணம், ஒவ்வொரு குடிமகனும் சட்ட அடிப்படைகளைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பதே ஒரு பொதுச் சட்டமாகும்.

உண்மையில் மேனிலைக் கல்வி கற்றவர்கூடச் சட்டத்தின் அடிப்படைகளை ஆழ்ந்து அறிந்திருப்பர் என்று கொள்வதற்கு இல்லை. மற்ற துறைப் பட்டங்களைப் போலச் சட்டப் படிப்பும் ஒரு தனித் துறையாகிவிட்டது. சட்டங்களும் மாந்தன் கழுத்தை முரிக்கும் அளவுக்குத் தொகுதி, தொகுதியாக விரிந்து விட்டன. இவ்வளவும் எதற்காம்? மாந்தன் நடப்பில் ஏற்படும் குறைகளைந்து நிறையை நிலை நாட்டுவதற்காம். ஒரு வகையில் மாந்தர் தம் தனி இயல்புகளும், பழக்கமும், பண்பாடுமே தனிச் சட்டங்களாக இருந்து அவர்களை நல்வழியில் இயக்கிச் செல்கின்றன. தவறுகள் செய்யாமல் மேலிடத்தாரின் கட்டளைகளைச்செவ்வனே நிறைவேற்றுவதே கடமையும், அமைதியும் ஆகும் என்று பண்பட்ட மனப்பாங்கோடு எல்லாரும் பொதுவாக ஒழுகுவதே சட்டத்தின் வெற்றிக்குத் தலையாய காரணம். யாரும் அறியாமல் கள்ளத் தனம் புரிய விரும்புபவர்களை உடனே தடுத்து நிறுத்த முடியாமல் சட்டம் தவிக்கிறது.

சட்டத்தின் அமைப்பு முறைகளை மூவகையாய்ப் பகுப்பர்.

1) குடிமக்களின் உரிமைகளையும் கடமைகளையும் வரையறுக்கும் சட்டங்கள்.

2) பொது ஒழுங்கை நிலைநாட்டும் சட்டங்கள்.

3) அரசினர்க்கு மக்கள் மீதுள்ள ஆணைவலிவை வரையறுக்கும் சட்டங்கள்

முதல் பாகத்தில் அடங்கும் சட்டங்கள் சொத்து உடைமை, உறவு முறைமை, மணம் முதலியவை பற்றியவையாகும். இந்தச் சட்டங்கள் பெரும்பாலும் மக்கள் கையாண்டு வரும்

மரபு வழிக் கோட்பாடுகளை (Conventions) அடிப்படையாகக் கொண்டவை. இதில் அரசினர் முற்றிலும் தங்கள் பகுத்தறிவுக் கொத்தவற்றையே சட்டமாக்க இயலாமற் போகிறது. ஏனெனில் நடைமுறையில் உள்ள தவறான வழக்கத்தை உடனடியாகச் சட்டத்தால் கல்வி எறிய முற்படும்பொழுது, அந்த வழக்கத்தில் வேரூன்றிய மக்களின் பெரும் எதிர்ப்புக்கும் கிளர்ச்சிக்கும் ஆளாகி ஆட்சியே ஆட்டம் கொடுக்க நேரும் என்பதை அரசினர் புரிந்து வைத்திருக்க வேண்டும். இந்த மரபுகள் சரியோ, தவறோ, ஆட்சியாளர் மக்கள் மனப்பாங்குக்கு விட்டுக் கொடுத்துப் போக வேண்டியவராயிருக்கின்றனர்.

இவ்விந்தியத் துணைக் கண்டத்தில் சில மாநிலங்களில் மட்டும் மதுவிலக்குச் சட்டம் நடைமுறையில் இருக்கிறது. 'ஒரே இந்தியா'ப் பாட்டிசைக்கும் ஆட்சியாளர், இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரை 'ஒரே இந்தியா'வை எண்ணாத காரணம் என்ன? கள்ளுக்கடை மறியல் நடத்திய பேராயக் கட்சியே பெரும்பான்மை பெற்று ஆளும் சில மாநிலங்களில் 'மக்கள் விரும்பினால்தான் மதுவிலக்குச் சட்டம் கொணர்வோம்' என்று கூறியே ஆட்சிக்கு வந்தார்கள் என்பதோடு, அந்தப் பகுதி மக்களின் மனப்பாங்கோடு மோத முடியாத தங்கள் இயலாமையை வெளிப்படையாகப் புலப்படுத்தியிருக்கிறார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். உயிரனைய கொள்கையையும், உண்மை உள்ளங்களையும் சுட்டெரிக்கும் மொழித் துறைச் சட்டங்களை இயற்றும் பொழுது மக்களைக் கேட்டுக் கொண்டா இயற்றினார்கள்? சட்டத்துக்காட்படும் மக்கள் தங்கள் துயரங்களை ஆயிரமாயிரம் வகைகளில் எடுத்து ஓதியிருந்தும் மக்களாட்சியின் பெயரைக்கூறிக், கையுயர்த்தக் காத்துக் கிடப்பவர்களைக் கொண்டு வெந்தும் வேகாமலும் வெளிவந்த சட்டங்கள் என்றும் மக்கள் மனப்பாங்குக் கியைந்தனவாகா. அரசியல் சாயத்தில் தோய்த்தெடுத்து, தம் ஆட்சியை என்றென்றும் நிலைப்படுத்தி, உரிமை நெஞ்சரின் தூய வேட்கைகளை நசுக்கி நாடாள வேண்டும் எனும் நச்சு மனப்பாங்கே தான் தோன்றித் தனமான சட்டங்களின் பின்னணியாகும்.

இரண்டாவது பிரிவின் சட்டங்கள் கொலை, திருட்டு முதலிய குற்றங்களைப் பற்றியவாகும். இதில் அரசினர் எவ்வளவு கடுமையான சட்டங்களையும் இயற்ற முடியும். தனி மாந்தனின் கோணல் போக்கைச் சீர் செய்வதற்கு அரசினர் எடுத்துக் கொள்ளும் எந்த முயற்சியையும் நடுநிலை படைத்த எவரும் ஏற்றுக் கொள்வர். ஆனால், இந்த நாட்டில் பொது ஒழுங்கை நிலைநாட்டும் சட்டங்களால் எந்தவொரு தனிமாந்தனின் மனப் போக்கிலும் மாறுதலோ, சீர்திருத்தமோ தோன்றியிருப்பதாகத் தெரியவில்லை. சிறைவிடப்பட்ட ஒருவன் திரும்பி வரும்போது

'இனி என்றும் திருடுதல் கூடாது' என்ற தீர்மானத்தோடு வருவதும் இல்லை; வந்தாலும் அவன் எண்ணப்படி வாழ மக்களமைப்பு அவனுக்கு வழிவிடுவதும் இல்லை. மன்பதை, ஒருமுறை குற்றம் செய்தவனை இகழ்வாக மதித்து அவனைச் சிறை நோக்கியே நெட்டித் தள்ளுகிறது. அவனும், புதுவாழ்வு காண முடியாமல் அரசினரின் 'விருந்தாக' இருந்த நிலைமாறி, என்றும் நிலையான உறவினனாக மாறி விடுகின்றான். சென்னை போன்ற நகரங்களில் திருடர்களை மிதி வண்டித் திருடர்கள், கன்னம் வைப்பவர் என்று இவ்வாறு வகைப்படுத்தி அவர்தம் படங்களையும் பொதுவிடங்களில் மாட்டி வைத்துள்ளனர். இவர்களைக் கணக்கெடுத்தாலே ஆயிரத்துக்குமேல் வரலாம். இந்த ஆயிரவரும் என்றும் சட்டத்தின் பிடிகளுக்குள் சிக்க வேண்டிய கட்டாய நிலையோடு தப்பித் திரிபவர்கள் என்றுதானே பொருள்!

இனி, மூன்றாவது பிரிவில் அடங்கும் சட்டங்களே பெரும்பாலும் கருத்து வேற்றுமைக்கு இடங் கொடுப்பவை அரசினர் தங்கள் ஆணையை நிலை நாட்டுவதற்காக ஊரடங்குச் சட்டம் (144) போன்றவற்றை என்றும் கையிலேயே வைத்திருக்கின்றனர் உள்நாட்டுக் குழப்பங்களை மட்டுப் படுத்தவும், தடுக்கவும் இதுபோன்ற சட்டங்கள் பயன்படும் என்பதுண்மையே. ஆனால் இவ்விந்தியத் துணைக்கண்டத்தில் அரசினரின் ஆணை வலிவைப் புலப்படுத்தும் சட்டங்களுக்கும் மக்கள் மனப் போக்கிற்கும் பெரிய மோதல் இருந்து வருகின்றது. அரசினர், எல்லா வகையான மக்களின் மனப்பாங்கையும், உரிமை மூச்சையும் மதித்து அவற்றுக் கேற்பச் சட்டங்களை இயற்றும் பொழுதுதான் அவை மதிக்கப்பெறும். ''சிறுபான்மையர்க்கும் பொந்திகை அளிப்பதே உண்மையான மக்களாட்சியாகும்'' (The test of democracy lies in the Contentment of the minorities) என ஆக்டன் பெருமகன் கூறியதை நினைவிற் கொள்ளல் வேண்டும். ஆட்சியாளர், தங்கள் தன்னலப் போக்கிற்கும் தனி விருப்பு வெறுப்பிற்கு ஏற்பவும் தங்கள் இயலாமையை மறைப்பதற்கும் சட்டங்களை உருவாக்குவார்களாயின், அவற்றின் போலி அமைப்பை உடைத்தெறிய உரிமை வேட்கையுடையவர் முற்படுவது இயல்பே. 'மக்களாட்சியில் மக்களுக்கு உரிமையும், நேர்மையான தீர்ப்பும், நன்மையும் கிடைக்காவிட்டால், கொள்கைக்காக மட்டும் அதை மக்கள் ஏற்றுக்கொண்டு, எல்லாக் குறைகளையும் பொறுத்து வருவார்களென்று எதிர்பார்ப்பது மூடத்தனம்' (திரு. க. சந்தானம் அவர்கள்).

ஒரு சட்டத்தை எதிர்ப்பவரும் அரசினர் தரும் உண்மையான நிலை விளக்கத்தால் தெளிந்து பெரும்பான்மையரோடு ஒத்துப் போகக்கூடிய மனமாறுதலை அடைதல் வேண்டும். அந்த முயற்சியில் அரசு ஈடுபட்டு வெற்றி கண்டால் சட்டங்கள்

இறையவர் ஓதிய மறை எனப் போற்றப்படும். உண்மை உணர்ச்சிகளை எடுத்துக் கூறியும் கேளாமல் கண்ணை மூடிக் கொண்டு சட்டங்களை இயற்றினால், இன்று சட்டங்களும், நாளை சட்டங்களை இயற்றியவர்களுமே தீயில் எரிந்து கருகுதல் திண்ணம்!

எடுத்துக்காட்டாக ஒன்றைக் குறிப்பிடலாம். மொழி, மக்களின் உரிமை மூச்சு; அந்த மூச்சை நிறுத்துவதோ, கட்டுப்படுத்துவதோ சட்டத்தால் செய்யக் கூடாத வேலைகள். முரண்பட்ட பண்பாடும், இன மாறுபாடும் படைத்த மக்களை உள்ளடக்கிய ஒரு துணைக்கண்டத்தில் வெறிமனம் கொண்ட சிலரின் விருப்பமே சட்டமாக்கப்படுவதற்கு, மொழித்துறைச் சட்டமே சான்று! ஒரு நாட்டில் அரசியல் இணைப்பின் காரணமாக இயற்றப்பட்ட ஒரு சட்டத்தால் சிறை செல்வார் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போனால், அந்நிலை, சட்டத்தை இயற்றியவரின் தகாத போக்கையும், உரிமை உணர்வை அடக்கவியலாமல் சட்டம் படும் திண்டாட்டத்தையுமே காட்டும். உரிமைக்காகச் சிறை புகுவோர் அளவில் மிகுந்தால், அதன்பின் விளைவு யாரும் எதிர்பாராத நெருக்கடியாக உருவெடுக்கும் என்பதை ஆள்வார் உணர்தல் வேண்டும்.

சட்டத்தின் வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்படாமல் சட்டத்தை மட்டுமே நம்பிக் கொண்டிருப்பது பேதைச் செயலாகும். மதுவிலக்குச் சட்டம் சில பொது நன்மைகளைச் செய்தது. ஆனால், கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழிலை மூலை முடுக்கெல்லாம் பரப்பிவிட்டது. மக்களின் மனப்பாங்கு சீர்கெட்டுப் போயிருப்பதும் இதற்கொரு காரணம். சட்டங்கள், நாம் விரும்பினாலும் விரும்பாவிடினும் நன்னெறிக்கே மக்களை அழைத்துச் செல்லும் அற நூற்கள் அல்ல. அற நூல் மக்கள்தம் மனப்பாங்கு வளர்ச்சிக்குத் துணை நிற்பது; சட்டமோ குற்றங்களைத் துருவிக் கண்டு, தண்டித்து, அமைதியையும் குற்றம் செய்ய அஞ்சும் மனப்பாங்கையும் உருவாக்குவது. ஆனால், இன்றோ மக்கள், சட்டங்களை எண்ணியும் பாராமல் தீய செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். சட்டங்கள், ஆள் பார்த்தும் அவர்தம் வலுப்பார்த்தும் தண்டனையைமறைத்தும், குறைத்தும், திரித்தும் செயலாற்றக் கூடா. சட்டம் மன்பதையின் பொது அறத்தை மறந்தால் மக்களோ சட்டத்தின் மீது கொள்ள வேண்டிய மதிப்பை மறக்க நேரும்.

கொள்கைச் சான்றோர் நுணுகி ஆய்ந்து வரையறுக்கும் நிலை இன்றிப், புல்லிய நோக்காளர் சிலர் கூடி உருவாக்கும் நிலைக்குச் சட்டம் இறங்கிவிடுதல் கூடாது. நற்குடிப் பிறந்த நன்மகனை மதிக்கப்பட வேண்டிய சட்டம், யாருக்கோ யாரோ

கொன்னிப் பேசல்.

கொன்னிப் பேசுதல் என்பது சரிவரச் சொற்களைப் பலுக்கி (உச்சரித்து)ப் பேசாமை எனப்படும். இது திக்குதல், தெற்றிப் பேசுதல் என்றும் கூறப்பெறும். இஃது ஒரு நோயன்று; உறுப்புக் குறையே. தொடக்கத்திலேயே ஊன்றிக் கவனித்தால் இக் கோளாறு நேராமல் தடுத்து விடலாம். இக்கோளாறு உள்ளவர் பேசும்பொழுது இடையிடையே சில சொற்களைக் கூறமுடியாமல் தடுமாறுவர். இத்தகையார் பேசுகையில் தொண்டைத் தசைகளில் ஒரு வகை அதிர்வு அல்லது வலிப்பு உண்டாகின்றது. அதனால் சொற்கள் தடைப்படுகின்றன. பலுக்கவேண்டும் என்று நினைத்துச் சொற்களை வெளிப்படுத்த வியலாமற் போகும் பொழுது வாய் மட்டும் அச்சொற்களுக்கேற்ப அசைகின்றது. ஒலி குரல்வளையிலேயே தடைப்பட்டுப் போகின்றது. இதனால் வாய் கோணிப் போகும். நாக்கை யாரோ பிடித்திழுப்பது போல் தோன்றும். வாய் கோணியவுடன் முகமும்கூடச் சிலர்க்குக் கோணி முன் நிற்பவர்க்கு அருவருப்பை உண்டாக்கும். ஆனால் இத்தகையார்மேல் இரக்கப்பட்டு அதில் நாம் நாட்டம் செலுத்துவதாகக் காட்டக் கூடாது. இக் கொன்னை வாய்க்கு இன்னும் சரியான காரணங்கள் கண்டுபிடிக்கப் பெறவில்லை. இக் குறைபாடு பெண்களைவிட ஆண்களிடமே மிகுதியாகக் காணப் பெறுகின்றது. இக் குறைபாடு உடையவர்க்குப் பொதுவாக ப, ட, க என்ற எழுத்துகளைப் பலுக்குகையிலேயே இடர்ப்பாடு நேர்கின்றது. இவை சொற்களின் இடையில் வருங்கால் வாய் திக்குவதில்லை. இவர்கள் பாடும் பொழுது இவ்வலிப்பு ஏற்படுவதில்லை. கொன்' என்ற தமிழ்ச் சொல்லுக்கு வீண், அச்சம் என்ற பொருள்கள் உண்டு. இக் கொன்னுதலும் வீணாக வாயாடித் திரிபவரிடமும் அவ்வாறு வாய் துடிக்கப் பேசும் உணர்வு உடையவரிடமும், அச்சம் உடையவரிடமுமே காணப்பெறுகின்றது. அறிவியலும் இவ்வடிப்படையை ஒப்புக்கொள்கின்றது. இக் குறைபாடு கொண்டவர்கள் தன்னம்பிக்கையுடன் துணிவாகவும் இருந்து, பேசுகையில் சொற்களில் நாட்டம் செலுத்தாது கருத்தில் நாட்டம் செலுத்தப் பகுழகுபவரானால் விரைவில் இக் குறைபாடு நீங்கலாம். *

(முன் பக்கத் தொடர்ச்சி)

எங்கோ பெற்று, அங்கேயே விட்டுவிட்டுப் போன ஏதிலியின் (அனாதை) நிலைக்குத் தாழ்ந்துவிடக் கூடாது. சட்டத்தால் தண்டிக்கப்படுவோம் எனும் அச்சந் தவிர்ந்தாரே தான்தோன்றிகளாக நடக்கத் தொடங்கலாம். மூலை முடுக்கெல்லாம் கிளைவிட்டு, இலை பரப்பி வளர்ந்திருக்கும் கேடுகளை மாற்றும் வலிமை சட்டத்திற்கே இல்லாமல் போய்விடக்கூடாது. ○

தென்மொழி
இலக்கிய இதழ்

தாளிகையின் உரிமை அறிக்கை.

(நடுவணரசு செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956–4–ஆம் வகுப்பு, 8–ஆம் கட்டளைப்படி)

1.	வெளியிடுமிடம்:	திருப்பாதிரிப்புலியூர், (தெ. ஆ.)
2.	வெளியிடும் காலமுறை:	திங்கள் ஒரு முறை.
3.	அச்சகத்தார் பெயர், இனம், முகவரி.	பு. சு. கிருட்டிணமூர்த்தி, தமிழர், மித்திரா அச்சகம், திருப்பாதிரிப்புலியூர்.
4.	வெளியிடுவார் பெயர்:	திருவாட்டி: மா. கமலம்(தாமரை) திருவாட்டி: ப. செகதீசுவரி, (உலக முதல்வி)
	இனம்:	தமிழர்.
	முகவரி.	மித்திரா அச்சகம், திருப்பாதிரிப்புலியூர்.
5.	ஆசிரியர் பெயர்:	பெருஞ்சித்திரன்.
	இனம்:	தமிழர்.
	முகவரி:	மித்திரா அச்சகம், திருப்பாதிரிப்புலியூர்.
6.	ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள, தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர்தம்பெயர்களும், முகவரிகளும்.	திருவாட்டி: மா. கமலம் (தாமரை) திருவாட்டி: ப. செகதீசுவரி. (உலக முதல்வி)

தாமரை, உலக முதல்வி யாகிய நாங்கள் இவ்வுறுதி வழி மேலே காணப்பெறும் விளக்கங்கள் யாவும் நாங்களறிந்த வரை முற்றிலும் உண்மையென முடிவாக அறிவிக்கின்றோம்.

பங்குனி 1.
14—3—64.

தாமரை,
உலகமுதல்வி,
வெளியிடுவார் கையொப்பம்.

எழுத்தாளர்.

<>

1. எழுதுபவர் எல்லாரும் எழுத்தாளர் அல்லர்;
இன்தமிழின் இயல்பழிப்போர் எழுத்தாளர் இங்கே!
விழுதெனவே தமிழ்தாங்கும் மெய்அறிஞர் தமக்கு
வீண்பழியும் பொல்லாப்பும் பரிசாக்கி, அந்தோ,
புழுவெனவே தமிழ்ப்பயிரை அரிப்பவர்க்கோ பட்டம்,
பொன்னுடை, பெருஞ்சீர்மை அளிப்பதெனில் வெட்கம்!
அழுகின்ருள் தாயென்ருல் மைந்தர்தமக் கல்லால்
அயலவர்க்கா நெஞ்செரியும்? ஆன்றதமிழ் நாடே!

2. வால்பிடிக்கும் பதர்களெலாம் ஆராய்ச்சி என்றே
வன்தமிழின் தொன்மைக்கு மாசேற்று கின்ருர்;
பால்அமிழ்துள் கடுநஞ்சைப் பெய்து பரி மாறிப்
படையலென்போர் தாய்க்கொலைசெய் பழிகாரர் ஆவார்!
நூல்திறனை நடுநின்று வரைவோரின் ஆக்க
நுண்ணறிவுத் தேன்பாகை வேம்பென்பார் தீயர்
கோல்சாயா மன்னரவைத் தலைநின்ற தமிழ்த்தாய்
குள்ளநரிக் கூட்டத்தால் வீழ்வாளோ, நாடே!

3. சுவைமிக்க தூயதமிழ்ச் சொல்வளமே காட்டித்
தொல்சிறப்பு மணக்கவரும் நடையழகை ஏற்றி
அவைச்சான்ருேர் கொண்டாடும் கருத்தமிழ்த மாக்கி
அறிவினிக்க நூல்செய்தல் எழுத்தாளர் தொண்டாம்.
நவைமிக்க வழுச்சொற்கள் கலப்புச்சொற் குப்பை,
நண்டுநடை கொண்டெழுதிக் கண்டபடி உளறி
இவையெல்லாம் நூலென்று காட்டுவதா சீர்த்தி?
இனிப்பொறுக்க முடியாதால், என்னருமை நாடே!

4. காலத்தால் அழியாத எண்ணத்தின் செம்மைக்
கலைகமழும் புதுநூல்கள் கருக்கொள்ளல் வேண்டும்.
ஞாலத்து மக்களுக்கு வழிகாட்டி யாகும்,
நல்லதமிழ் நூற்களையே பதிப்பித்தல் வேண்டும்!
ஆலொத்து நிலைநிற்கும் அறநூல்கள் பூத்தே
அருமைமிகு திருக்குறள்போல் புகழ்வீசல் வேண்டும்.
கோலத்து மணிமன்றத் தமிழ்க்கோயில் வாய்மை
கொண்டபணி எழுத்தாளர் குறியாதல் வேண்டும்.

-- மீனவன் --

நின்ற சொல்லர் சேனவரையர்

மு. அழகப்பன், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

பண்டைக் காலத்தே தோன்றிய வண்டமிழ் நூலாம் ஒண்டொல்காப்பியத்தில் சொல்லதிகாரத்திற்கு இரந்து செல் மக்கட்கு இனியிடனின்றிப் பரந்திசை நிற்க உரை எழுதிய உயர் தனிச் செம்மல் தான் சேனவரையர். இவருடைய உரைச் சிறப்பை விரிப்பின் அகலும், தொகுப்பின் எஞ்சும் என்பதால் அதனை விடுத்து அவர் **நின்ற சொல்லர்** என்பதை அவரது உரையினின்றும் அறியலாம். நின்ற சொல்லர் என்றால் சொன்ன சொல் தவறாதவர் என்று பொருள்.

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றினைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கினாகிய உயர் சொற் கிளவி
இலக்கண மருங்கின் சொல்லா றல்ல

(சொல். நூ. எண் உ௭)

என்னும் நூற்பாவில் உயர் சொற்கிளவி யென்புழிக் கூறியது கூறலன்மை பண்புத் தொகை யாராய்ச்சிக்கட் சொல்லுதும் என்று உரை கூறியுள்ளார். அவ்வாறே சொல்லதிகாரத்தில் ௪௧௯-ஆம் நூற்பாவில் பண்புத் தொகை யாராய்ச்சியில் இதனை விளக்குகின்றார். 'உயர்சொற் கிளவி என்பது, சாரைப் பாம்பு என்னும் இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் சாரை என்பது பாம்பைச் சிறப்பிக்க வந்தாற்போல, உயர் சொல் என்பது கிளவி என்பதனைச் சிறப்பிக்கவந்தது அவ்வாறு அமைவுடைய வாயினும் நூற்பாவில் வந்துளதால் உயர் சொல்லெனவேயமை யும். கிளவி என்பது மிகையெனின்:-- மிகையாயினும் இன்னோ ரன்ன அமைவுடைய வென்ப துணர்த்துதற்கு அவ்வாறோதினா ரென்பது' என்று மறவாமல் விளக்கிவிட்டார்.

சிறப்பினாகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க்கிளவி முற்படக் கிளவார்

(சொல் நூ. எண் ௪௧.)

என்னும் நூற்பாவில் திருவீரவாசிரியன், மாந்தக்கொங் கேனாதி என இயற்பெயர் முன்வந்தனவாலெனின்:- அவை தொகைச் சொல்லாதலின் அவற்றின் கண்ணதன்று இவ்வாராய்ச்சி என்பது. ஆண்டு இயற் பெயர் முன்னிற்றல் பண்புத் தொகை யாராய்ச்சிக்கட் பெறுதும்' என்று உரை கூறியுள்ளார்.

எப்பொழுதும் ஒரு சொல்லுக்குப் பொருளுணருங்கால் நேரான பொருளை யுணர வேண்டும். பெறுதும் என்றால் பெற

லாம் அல்லது உய்த்துணரலாம் என்று பொருள். சொல்லுதும் என்றால் யான் பின்னர்க் கூறுவேன் என்று பொருள். பெறுதும் என்ற சொல்லுக்கு நேரான பொருளை யறியாது சேனாவரையத்துக்கு விளக்கவுரை எழுதவந்த பூவராகம் பிள்ளையவர்கள் சொல் ௪௪௬–ஆம் நூற்பா விளக்கவுரையில் ''சேனாவரையர்–சொல் ௪௪-ஆம் நூற்பாவில் திருவீரவாசிரியன், மாந்தக் கொங்கேனாதி என்பவனாற்றுள் இயற்பெயர் முன்னிற்றல் பண்புத்தொகை யாராய்ச்சிக்கட் பெறுதும் என்றார். அவற்றை இங்கு எடுத்துக் கூறவில்லை யாயினும்'' என்று எழுதியுள்ளார். இது பொருந்தாது. சொல் ௨௪-ஆம் நூற்பாவில் சொல்லுதும் என்று எழுதினார். அதன்படி ௪௪௬–ஆம் நூற்பாவில் சொல்லிவிட்டார். ஆனால் இங்குப்பெறுதும் என்று கூறியிருப்பதால் நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும் என்பதே பொருள். அவர் கூறவேண்டிய தேவையில்லை. இவர் சேனாவரையரைப் பற்றி என் நினைந்தாரோ? அன்றி அவரை மறப்பெனும் பகைவன் வாரிக் கொண்டனன் என்று கருதினாரோ? யானறியேன். சேனாவரையர் காணாதார் அவரை இவர் காட்டுவான் தான் பெறுதும் என்ற சொல்லுக்கு நேரான உரை காணாராய்த் தான் கண்டவாறு உரை கண்டுவிட்டார்.

சொல் ௨௬-ஆம் நூற்பாவில் ''படர்க்கைச் சொல் மயக்கமும் எய்துமாலெனின்:- அஃது எச்சவியலுள் பெறப்படுதலின் ஈண்டுக் கொள்ளப்படாது என்க'' என்று சேனாவரையர் கூறியதற்கு சேனாவரையத்துக்குத் திருத்தங்களும் குறிப்புரையும் எழுதிய கந்தசாமியாரவர்களும், ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களும் கூறுகின்றனர். எச்சவியலுள் பெறப்படுதலின் என்று கூறியது

''கொடுவென் கிளவி படர்க்கையாயினும்
தன்னைப் பிறன்போல் கூறுங் குறிப்பில்
தன்னிடத் தியலும் என்மனார் புலவர்''

என்னும் எச்சவியல் ௫௨–ஆம் நூற்பாவை நோக்கி, அவர்கள் பெறுதல் என்ற சொல்லுக்கு நேரான உரை கண்டுள்ளனர். எனவே பெறுதல் வேறு சொல்லுதல் வேறு.

எனவே சேனாவரையத்துக்குச் சிறப்பான விளக்கவுரை எழுதிய பூவராகம் பிள்ளையவர்கள் இங்கே தவறியது பற்றி அவரைத் தவறாக நினையற்க.

அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு.

என்ற தமிழ்மறைதான் விடையிறுக்கும். எனவே சேனாவரையர் நின்ற சொல்லரே என்பதைத் தெள்ளிதின் அறியலாம். *

ஆங்கில மொழியாக்கம்

Won't Yield Before Swords:

Wondrous is Pari's Parambu hill;
Though to besiege it you three have come
Beating your pompous drums of war!
Sources of sustenance the hill has four
Without the farmers tilling the soil:
One, the verdant bamboo yields its grain;
Two, the jack-trees bear delicious fruits;
Three, the creeping "Valli" its edible roots produce;
And four, the cliff's replete with honey-combs
Blue with mellowness, affording honey sweet.
The hill is sublime as the Heavens are;
And the springs thereof innumerous like the stars.
(And so, O kings,)
Be it, you have an elephant bound to every tree,
Be it, your chariots cover all this ground,
You can't, for all your efforts, take his hill.
He won't yield before your swords
But I know how you can get it :
Go to him dancing and singing
Playing your lyres fine and trim
Accompanied by your courtesans
With scented locks of lustrous hair,
And then to you he'll make a gift
Of his land and hill together !

(Purananooru 109; Kapilar.)

மொழியாக்கம் : ம. இலெ. தங்கப்பா.

வாளில் தூரலன்.

—*—

அளிதோ தானே பாரியது பறம்பே!
நளிகொண் முரசின் மூவிரு முற்றினு
முழவ ருழாதன நான்குபய னுடைத்தே;
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல் விளையும்மே;
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே;
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே;
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து;
திணிநெடுங் குன்றந் தேன் சொரி யும்மே;
வான்க ணற்றவன் மலையே! வானத்து
மீன்க ணற்றதன் சுனையே! யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்,
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினுந்,
தாளிற் கொள்ளலிர்; வாளிற் றரலன்.
யானறி குவனது கொள்ளு மாறே:
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி,
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வரு,
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே! *

புறம். ௧௦௯. கபிலர்.

கொள்ளிவாய்ப் பேய்.

முரம்பு நிலங்களில் மட்கிப் போன செடிகள், மரக்கிளைகள் முதலியன நிலத்தின் மேல் விழுந்து மண்ணால் மூடுண்டு கிடக்கும். கதிரவன் வெப்பத்தாலும் நிலத்தின் சூட்டாலும் அவை கரியாக மாறும். அக்கால் அவற்றிலிருந்து 'மீதேன்' என்னும் எரிவளி ஒன்று வெளிப்பட்டு, நிலத்தின் தொளைகளின் வழியாக வெளியேறிக் காற்றில் கலக்கும். காற்றில் உள்ள 'ஆக்சிசன்' என்னும் உயிர்வளியோடு 'மீதேன்' கலந்தவுடன் வெட்ட வெளியிலேயே தீப்பற்றி எரியும். இரவு நேரங்களில் இத் தீ நாக்குகள் எவ்வகைப் பற்றுமின்றி நிலத்தின் மேலுள்ள வெளிக் காற்றில் எரிந்து கொண்டே போவது, அறியாத மக்களுக்கு அச்சத்தை விளைவிக்கும். இதனையே கொள்ளிவாய்ப் பேய் என்று கூறுவர். இத்தகைய எரிவளியாகிய 'மீதேன்' நிலக்கரிச் சுருங்கைகளில் அடிக்கடி வெளிப்பட்டு உயிர்க்கு ஊறு விளைவிக்கின்றது. இதனை ஆங்கிலத்தில் Fire Damp என்பர்.

இலக்கிய ஆய்வு.

நற்சோணை

ஞா. அந்தோனிராசு, விரியூர்.

"கங்கைப் பேர்யாற்றுக் கடும்புன னீத்தம்
எங்கோ மகளை யாட்டிய வந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ் ஞூற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலம்"
(காட்சிக். ௧௬0-௪).

என வரும் அடிகளுக்குப் பலர் பலவாறு பொருள் கொள்வர். அரும்பதவுரை ஆசிரியர், "எங்கோ மகளென்றது செங்குட்டு வன் தாயை; அவளை இவன் கொண்டு போய் நீராட்டியதொரு கதை." என்பர். இவ்வடிகளிற் காணப்படும் 'எங்கோமகளை' என்பதற்குச் 'செங்குட்டுவனின் தாயாகிய நற்சோணையின் படிமத்தையே யன்றி, நற்சோணையை அன்று,' என்று பொருள் கொண்டு அதற்கேற்பக் கூறிச் செல்வார் உளர்.

காட்டாக, புலவர் கா. கோவிந்தன். எம். ஏ. அவர்கள் எழுதிய 'சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை' பகுதி. க என்னும் நூலில் பரணர் வரலாறு கூறும் பகுதியில், "செங்குட்டுவன் அரியணை ஏறிய பின்னர் மேற்கொண்ட போர்களும், பெற்ற வெற்றிகளும் பலவாகும் வேற் பஃறடக்கைப் பெரு விறற் கிள்ளியொடு போரிட்டு இறந்த தன் தந்தையைத் தொடர்ந்து உயிர்நீத்துப் புகழ்பெற்ற தன் தாய் நற்சோணையின் படிமத்தைக் கங்கையில் நீராட்டக் கருதி வட நாடு சென்றான்" எனவுள்ளது. (புறம் ௬௨-இல்.)

"பன்னூ றடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலை
மிடங்கெட வீண்டிய வியன்கட் பாசறைக்
களங்கொளற் குரியோ ரின்றித் தெறுவர
வுடன்வீழ்ந் தன்றா லமரே பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே
வாடாப் பூவி னிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னோரு மாற்ற
வரும்பெற லுலக நிறைய
விருந்துபெற் றனராற் பொலிகநும் புகழே!

என வரும் அடிகளால், கழாத்தலையார் என்னும் புலவர் 'சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும், சோழன் முதலாம்

வேற் பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்தாரைக் கண்டு பாடியுள்ளது விளங்கும்.

'பட்ட இருவேந்தரும் அக் களத்துக் கிடக்கின்ற படியைக் கண்டு தம் மனத்தொடு நொந்து அவரை நோக்கிக் கூறுகின்ரு ராதலான், நும் புகழென முன்னிலையாக்கிக் கூறினர்' என்பர் புறநானூற்று உரையாசிரியர்.

அடுத்து, புறம் ௬௩-இல்,

''வேந்தரும் பொருதுகளத் தொழிந்தன ரினியே
யென்னு வதுகொ ருனே கழனி
யாம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
பாசவன் முக்கித் தண்புனற் பாயும்
யாண ரருஅ வைப்பிற்
காமர் கிடக்கையவ ரகன்றலை நாடே!

எனப் பரணர் என்னும் புலவரும் அவ்வரசர்களின் நிலையை நேரிற் கண்டு கூறியுள்ளார். ஆகவே, கழாத்தலையார் என்னும் புலவரும், பரணர் என்பாரும் ஒரே காலத்தில் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்பது விளங்கும்.

இவ்விரு புலவர்களாலும் பாடப்பட்ட குடக்கோ நெடுஞ் சேரலாதன் என்பவன் கி. மு. 100 முதல் கி. மு. 80 வரையும், முதலாம் வேற் பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளி என்பவன் கி. மு. 90 முதல் கி. மு. 80 வரையும் அரசு வீற்றிருந்தவராவர். இவ்விருவருக்கும் கி. மு. 80-ல் திருப்போர்ப் புறத்தே போர் நடந்தது. இப்போரிலேயே இருவரும் நீத்தனர்.

இனி, கழாத்தலையாரின் காலத்தை நோக்குவோம், இவர் கி.மு 100-ல் வெண்ணிப் பறந்தலையில், சேரமான் பெருந்தோள் ஆதனுக்கும், சோழன் கரிகாலனுக்கும் நடந்த போரில், கரிகால் வளவன் செலுத்திய வேல், பெருந்தோள் ஆதனின் மார்பிற் பட்டு, முதுகில் புறத்தே உருவிச் சென்று புண் செய்தது; புறப் புண்ணுக்கு நாணி வடக்கிருந்து நீத்தான் ஆதனை 'கையறுநிலை' என்னுந் துறையில் (புறம்: ௬௫.) பாடியுள்ளார்.

மற்றும், இருங்கோவேள், பாரி மகளிரைக் கொள்ளானகக் கபிலர் பாடிய (புறம்: 202.) பாட்டில் இருங்கோவேளின் முன்னோன் ஒருவன், கழாத்தலையாரை இகழ்ந்ததனுல் அவனது தலை நகராகிய அரையம் என்பது அழிந்து பட்டதாகப் பாடியுள்ளார். இதனுல் கழாத்தலையார் கபிலருக்குக் காலத்தால் முற்பட்டவ ரென்பது விளங்கும்.

ஈண்டு குறிக்கற் பாலதொன்று; அஃதாவது சேர அரசர் களுள் நெடுஞ்சேரலாதன் என்ற பெயருடைய அரசர்கள் மூவர்

இருந்திருக்கின்றனர். அவர்களுள் முதல்வன், முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன். இவன் காலம் கி. மு. 2-ஆம் நூற்றுண்டின் முற்பகுதி. இவன் கடைக்கழகப் புலவர்களுள் ஒருவன். இவனுடைய பாடல் அகநானூற்றில் ௩௨-ஆவதாகத் திகழ்கின்றது. இரண்டாமவன் கி. மு. முதல் நூற்றுண்டில் (கி. மு. 100-80) வாழ்ந்து முதலாம் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியொடு பொருதுபட்டவன். மூன்றுமவன், சேரன் செங்குட்டுவனின் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுவான். இவன் கி. பி. 42 முதல் கி. பி. 100 வரை அரசு வீற்றிருந்து தனக்கும் இரண்டாம் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளிக்கும் கி. பி. 100-இல் நடந்த போரில் இறந்து பட்டான். இப்போரிலும் இருபெரு வேந்தரும் பொருது களத்தொழிந்தனராதலின், கி. மு. 80-இல் இறந்தவரை இவரென எண்ணியே நற்சோணையும் இறந்துபட்டாளென்பர் அஃது உண்மையன்று. கி மு. 80-இல் இறந்த அரசர்களோடு அவர்தம் மனைவியர் இறந்துபட்டனரே யன்றி கி. பி 100-இல் பொருதுபட்ட அரசர்களின் மனைவியர் இறந்து படவில்லை.

அடுத்து, கழகம் இருந்ததாகக் கருதப்படும் காலம் கி. பி 2-ஆம் நூற்றுண்டாகும். அக்காலத்தில் வாழ்ந்த பரணர், கபிலரின் நெருங்கிய நண்பராகிய பரணராவார். இஃது, இலக்கியங்களில் காணப்படும் 'கபிலபரணர்' என்னும் தொடரானே விளங்கும். இப்பரணரால் பாராட்டப்பட்டவர்கள் என்ற நிலையில், அம்மூவனுர், அரிசில் கிழார், ஆதிமந்தியார், இடையன் சேந்தன் கொற்றனுர், ஊன் பொதி பசுங்குடையார், ஒளவையார், கபிலர், கல்லாடனுர், கழாத்தலையார், காக்கைப் பாடினியார், நச்செள்ளையார், காப்பியாற்றுக் காப்பியனுர், குடவாயிற் கீரத்தனுர், குன்றுகட்பாலியாதனுர் குமட்டூர் கண்ணனுர், பாலைக் கௌதமனுர், பெருங்குன்றூர் கிழார், மதுரைப் பேராலவாயர், வன் பரணர் ஆகிய புலவர்களின் பெயர்கள் நூல்களில் காணப்படுகின்றன. ஆனல் இங்குக் குறிக்கப்பட்டுள்ள கழாத்தலையார் என்னும் புலவர் கி. மு 100-இல் நடந்த போரைப் பற்றியும் கி. மு. 80-இல் நடந்த போரைப் பற்றியும் பாடியிருத்தலினுல், இவர் காலம் கி. மு. 2-ஆம் நூற்றுண்டின் இறுதியும் கி மு. முதல் நூற்றுண்டின் தொடக்கமுமாயிருத்தல் வேண்டும் இவர் பாடிய அரசர்களை 'பரணர்' என்ற புலவர் ஒருவரும் பாடியிருத்தலினுல் கி. மு. முதல் நூற்றுண்டில் ஒரு பரணர் இருந்திருத்தல் வேண்டும். ஆகவே கபில – பரணர் வேறு, கழாத்தலையார் – பரணர் வேறு ஆதல் வேண்டும்.

கி. பி. 100-இல் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் களத்தொழிந்தவுடன் செங்குட்டுவன் (தன் இருபதாமாண்டில்) அரசேற்றுன். அரசேற்றவுடன் தன் தந்தையின் இறுதிக் கடன்

களை முடித்துவிட்டு, அவரின் எலும்புகளைக் கங்கையில் விடவும், தன் தாய் நற்சோணையை நீராட்டவும் கருதி வடநாடு சென்றக் கால், ஆரிய அரசர் ஈரைஞ் ஞூற்றுவர் எதிர்க்க அவரைவென்று மேற்சென்று வினை முடித்தான். ஆகவே செங்குட்டுவனின் தந்தை இறந்தக்கால் அவன் தாய் நற்சோணை இறந்துபடவில்லை என்பதும், சிலப்பதிகாரத்தில் 'எங்கோ மகளை ஆட்டிய அந் நாள்' என்ற அடிக்கு அரும் பதவுரை யாசிரியர், ந. மு. வே. போன்றோர் கூறிய பொருளே பொருந்தும் என்பதும் விளங்கும்.

செங்குட்டுவன் மீது பதிற்றுப் பத்து ஐந்தாம் பத்தைப்பாடி உம்பற்காட்டு வருவாயையும், அவன் மகன் குட்டுவன் சேரலை யும் பரிசிலாகப் பெற்ற பரணர் காலம் கி. பி. 50 முதல் கி. பி. 140 வரை (ந. மு. வே. கபிலர் வரலாறு. பக்: எசு.) ஆகும். இப்பரணரைக் குறிக்குமிடத்து கபில. பரணர் என்பது போல, கி. மு. முதல் நூற்றுண்டில் வாழ்ந்த பரணரை, கழாத்தலையார்–பரணர் என்பது பொருந்தும். இவ்விருவரேயன்றி வேறு பரணர் களும் இருந்திருக்கின்றனர். அவர்களுள் ஒருவர், கடையேழு வள்ளல்களுள் ஒருவனான, கண்டீரக் கோப் பெரு நள்ளி என் பானால், ஒருநாள் காட்டிடைத் தம் ஒக்கலோடு வந்து, தம் பசி தீர விலங்கின் தசையும், பரிசிலாக ஆரமொன்றினையும் பெற்றுச் சென்ற 'வன்பரணர்' ஆவார்.

மற்றும், பன்னிரு பாட்டியலில் கபிலரும், பரணரும் இயற்றி யவையாக நூற்பாக்கள் சில காணப்படுகின்றன. அவையும், சிவபெருமான் திரு வந்தாதி என்னும் நூலும் கபில-பரணராற் பாடப்பட்டன என்பர். ஆயின், வரலாற்றையும், பண்டை நூல்களோடு சிவபெருமான் திருவந்தாதி என்னும் நூலை ஒப்பிட்டும் நோக்கின், இவையிற்றை கழகக்காலப் பரணர் பாடி யிருத்தல் இயலாது என்பது விளங்கும். ஆகவே கி. பி. 2–ம் நூற்றுண்டிற்குப் பின் ஒரு பரணர் வாழ்ந்திருத்தல் வேண்டும்.

இதுவரை கூறியவாற்றன், கி. மு. முதல் நூற்றுண்டில் வாழ்ந்த கழாத் தலையார்–பரணர் வேறு; இவரால் பாடப்பட்ட நெடுஞ்சேரலாதன், முதலாம் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளி என்போர் வேறு; கி பி. முதல் நூற்றுண்டின் இறுதியில் இரண்டாம் வேற் பஃறடக்கைப் பெரு விறற் கிள்ளியொடு பொருதுபட்ட இமய வரம்பன் நெடுஞ் சேரலாதனோடு அவன் மனைவி நற்சோணை இறந்துபடவில்லை; செங்குட்டுவன் கங்கை யில் நீராட்டியது தன் தாயின் படிமத்தையன்று, நற்சோணையையே; பரணர் என்ற பெயரில் புலவர் பலர் வாழ்ந் திருத்தல்வேண்டும்; அவர்களின் வரலாற்று விளக்கக்குறிப்புகள் நமக்குக் கிடைக்காமையே இதுபோன்ற இடருக்குக் கரணியம், என்ற உண்மைகள் தெற்றென விளங்குகின்றன. ○

(அச்சேறு நூலெல்லாம் நூலாமோ? ஆங்குசிலர்
மெச்சியுரை செய்திடலால் மேலாமோ?—முச்சில்
புடைத்துலையி லிட்ட புதுமணலைச் சோருய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு? —ஆர்)

உடலோவியம் — (பாடல்கள்)

ஆசிரியர்: காராமேடு வள்ளிமணாளன்.
கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பெருவழி, சென்னை-1.
விலை: உருபா 1.

எழுத்தறிந்த மட்டில் இளைஞரெலாம் இந்நாள்
முழுத்தவருய் நூல்எழுத மொய்த்தார்;—கழுத்தை
அறுப்பார்தம் நூலால்; அதிற்குறைகள் கூறின்
மறுப்பார் திருந்த மறுத்து!

இற்றைத் தமிழர் இலக்கியத்தின் மாண்பிதுகாண்!
கற்றுத் தெளியார்; கலைமுயலார்—முற்றினர்போல்
பீடு மிகுவார்! பிழை திருந்தார்; தந்நிறைவார்;
பாடல்நூல் செய்வார் பலர்!

கட்டற்ற வெற்றுணர்வு! காலற்ற கற்பனைகள்!
குட்டை இலக்கணஞ்செய் கூனற்பா! நாணச்சொல்!
தீயவற்றுக் கஞ்சாத் திறந்த படப்பிடிப்பு!
ஆயிவற்றை நூலென்பார் ஆம்!

உடலோ வியமாம் ஒருசிறுநூல் கண்டோம்.
அடல்எம் குறியன்ரும்! ஆர்ப்புவெறுப் பில்லாமல்
ஆய்ந்தோம்; சலித்தெடுக்க ஆங்கெதுவும் கண்டிலமால்!
ஓய்ந்தோம் சலித்தோம் உணர்வு.

ஒவ்வோ றுறுப்புந்தன் உள்ளியல்பு கூறுதல்போல்
அவ்வே அமைந்துளவால்; ஆழமில்லை கற்பனையில்;
செவ்வி(து) உணர்வேல் சிறந்திருக்கும்; கீழுணர்வே
கவ்வியதால் நூல்நமக்குக் கைப்பு.

மயிர்மழிக்கும் புன்வகையை, வாயுறுநாற் றத்தைப்,
பயிர்ப்புமிக, மூக்கொழுக்கைப் பல்லழுக்கைப் பாடல்நன்றே?
தாய்மை உறுப்பின் தகவிழித்தல் பாட்டாங்கொல்?
பேய்மைக்கோ நூலென் பெயர்?

பாக்கோ கமுகு; பருப்பே துவரையாம்!
மேற்கோ கிழக்கெதிரா மேவுமென்றூர்; அம்மெய்போல்
ஓதினர் அன்பர் உடலோ வியமெனும்நூல்;
யாதிதற் கீ டென்போம் இவண்!

முகந்தலையில் உண்டாம்; முகத்துளதாம் மீசை!
மகப்பிறந்த பின்பேபெண் மார்பு சுரக்குமாம்!
நற்கருந் 'தாடி' நரைத்தால்வெண் 'தாடி'யாம்,
சொற்கருத்தில் கேளீர் சுவை!

கண்ணிழந்தால் துன்புண்டாம்; காற்றற்றால் சாவோமாம்!
பெண்முயன்றும் 'தாடி' பெறுகிலளாம்! எண்ணிற் பல்
மூப்பத் திரண்டாம்! முதுநாள் அவை விழுமாம்!
செப்பக் கேண்ம் மெய்மைச் சிறப்பு!

'விட்டல்' 'சதுரவட்டை' 'சம்மர்' 'கிராப்' 'சவரம்'
'சட்டி' 'சிப்பா' 'சோப்பு' 'ரசம்' 'கோட்டு' 'மொண்டி'
'கோளார்' 'டை'
'நைசாகப்' 'பைசாமா; 'பாடி' 'முட்டி' 'மேக்குப்பல்'
ஐயோ 'அசிங்கம்' இவர் சொல்!

யாப்பில் பலகோணல்; எண்ணறுமொற் றுப்பிழைகள்;
கோப்பின்மை; சொல்மழுங்கல்! கோதார் உரைபோலும்
வெற்றென் தொடுத்த விழல்இதனை ஆக்கியோர்க்(கு)
எற்றென் றிரங்குவோம் யாம்!

வகையுணர்த்து கின்றேம்; வசைபாட வில்லை!
நகைகிளப்ப நூல்எழுதல் நாட்டில் தவறன்றும்!
குற்றமதிற் சொல்வதுதான் கூர்ங்கொடிதாம்! அவ்வாறேல்
எற்றைக்கிங் குண்மை எழும்?

புன்மைச் சுவைதூண்டல், புல்லுணர்வுக் கின்புறுத்தல்
சென்மருங்கு சற்றே சிரிப்பூட்டல் பாட்டன்றால்!
நன்றே உணர்த்தி நயத்தால் ஒழுங்கழகால்
என்றும் நிலைப்பதுவே பாட்டு.

மண்ணில் முளைப்பதெலாம் மாண்பயிரோ? மாந்தருளத்
தெண்ணுறுவ எல்லாம் இலக்கியமோ? யாக்கை
உயிர்க்குவளஞ் செய்தல் உணவாமால்; வாழ்க்கைப்
பயிர்க்குவளஞ் செய்தலே பாட்டு.

(வாழ்க்கையில் எத்தனையோ உண்மையான நகைச்சுவை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றுள் சில, வெறுஞ் சிரிப்பை மட்டும் வருவிப்பன. ஒரு சிலவே அறிவைத் தூண்டி எண்ணவும் வைப்பன. அவற்றால், அந்நிகழ்ச்சியில் ஈடுபட்டாரே யன்றிப் பிறரும் பயனடைய வேண்டும். ஆங்காங்கே நடக்கும் இத்தகைய நிகழ்ச்சிகளை எழுதியனுப்பலாம். கற்பனை நிகழ்ச்சிகளைவிட உண்மை நிகழ்ச்சிகளே பெரிதும் வரவேற்கப் பெறுகின்றன. வெளியிடப் பெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் இரண்டு உருபாக்கள் அனுப்பப் பெறும். — ஆசிரியர்.)

○ அதுவும் நீயே.

பாரசீகத்தின் பெரும் பாவலரான சாஆதி, ஒருகால் மகமதியர் வழிபாட்டிடத்திற்குச் சென்றார். உள்ளே சென்று உள்ளமுருக வழிபட்டார். வழிபாட்டிற்கிடையில் ''இறைவனே! என் நினைவெல்லாம் நீயாகவே இருக்கின்றாய். என் கண்களுக்குத் தென்படும் பொருள்களெல்லாம் நீயாகவே எனக்குப் படுகின்றன'' என்று வாய்விட்டுக் கூறி வழுத்தினார். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவன், அவர் வழிபாடு முடிந்து வெளியே வருகையில் ''உங்கள்முன் ஒரு கழுதை வந்தால்...'' என்றான். ''அதுவும் நீயாகவே எனக்குப் படுகின்றது...'' என்று கூறி அப்பால் போனார். — **ஆர். கண்ணையன், கவித்தலம்.**

(முன் பக்கத் தொடர்ச்சி)

அன்னைமார் தங்கள் அருங்குருதி பாலாக்கி
மன்னும் மகர்க்களிக்கும் மாண்புபோல் சான்றோர்
உறுமுணர்வைத் தம்மளியால் ஊட்டக் கொடுக்கும்
நறும்பாலே பாட்டாம் நவில்!

அங்கணத்தி னுள்ளும் அரிசி சிலகிடக்கும்.
அங்கதுபா ராட்டல் அதுநம் பணியன்று!
மெய்நூல் வளர்த்திடுவோம் மெய்நிறையால்; அஃதொழித்துப்
பொய்நூலுள் தேடோம் புதைவு.

'கல்லாடன்.'

குறி தப்பாது...!

கல்லூரியின் மாணவப் படைப்பயிற்சிக் குழுமம் வெளியூரொன்றில் தங்கல் செய்திருந்தது. அப்படையின் இரு பிரிவினர்க்குள் மனத் தாங்கல்கள் இருந்தன. அவற்றின் மாணவத் தலைவர் இருவரும் பகையுணர்வோடேயே நடந்து கொண்டனர்.

பயிற்சி முடிந்ததும் மாணவர் படை தம் ஊர் திரும்ப முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தது. அக்கால் ஓர் அணித் தலைவனின் தலையை நோக்கி ஒரு கல் விரைந்து வந்தது. நல்ல வேளையாகக் கல் அவன் தலைக்கவிப்பை (Cap) மட்டும் உராய்ந்து சென்றது. தற்செயலாக அதைக் கவனித்த படைத் தலைவர் எதிர் அணியின் தலைவனைக் கூப்பிட்டு உசாவினர். இரண்டு அணிகளின் பகையுணர்வை முன்பே அவர் அறிந்திருந்தமையால் தலைவனிடம், ''நீ இக்கல்லை ஏன் எறிந்திருக்கக் கூடாது?'' என்றார். உடனே தலைவன் ''உறுதியாக நான் எறியவில்லை; நான் எறிந்திருந்தால் கல் இன்னும் சற்றுப் பெரியதாக இருந்திருக்கும்; இன்னும் விரைவாகச் சென்றிருக்கும்; குறியே தப்பியிராது'' என்றான்.

– தொ. அ. கமாலுதீன், பொள்ளாச்சி.

இளங்கோவின் ஆங்கிலம்!

பள்ளியில் ஆண்டு விழாச் சொற்பொழிவு நடந்து முடிந்தது. தலைமைச் சொற்பொழிவாளரைச் சுற்றி மாணவர் கூட்டம் அமர்ந்து கொண்டு பலவகையான விளக்கலையும் எழுப்பிக் கொண்டிருந்தது அவருடன் வந்த புலவர் வகுப்பு மாணவர் ஒருவர் சிலப்பதிகார ஆசிரியரைப்பற்றி வேடிக்கையாக, ''இளங்கோவடிகள் பயன்படுத்திய ஒரு சில சொற்களில் ஆங்கில ஒலியமைப்பு இருக்கின்றது. காட்டாக அதனுள்வரும் 'யானோ அரசன்' 'யானே கள்வன்' என்ற சொற்களில் ஆங்கில ஒலியமைப்பைக் காணலாம். யான் NO அரசன், யான் A கள்வன் என்று பொருள்படுமாறும் இதனை அவர் எழுதியுள்ளார் எனக் கொள்ளலாம். 'யான் அரசன் இல்லை' என்பதும் 'யான் ஒரு கள்வன்' என்பதும் தாமே அவற்றின் பொருள்...!'' என்று வேடிக்கையாகக் கூறினர். கூடியிருந்த மாணவர் யாவரும் நகைத்தனர். – முகவை. ஆ. வெ. கணேசன்.

கூலியும் கட்டணமும்!

மருத்துவர் ஒருவரிடம் ஒருவர் வந்தார்.

''உங்களிடம் ஒரு நோயாளியை அழைத்துக் கொண்டு வந்தால் எனக்கு என்ன கூலி கொடுப்பீர்கள்?''என்று கேட்டார்.

அதற்கு மருத்துவர் ''முதலில் அவரைக் கொண்டு வாருங்கள், பார்க்கலாம்'' என்றார்.

உடனே வந்தவர் ''நான்தான் அந்த நோயாளி; எடுங்கள் என் கூலியை'' என்றார்.

உடனே மருத்துவர் ''தருகின்றேன்; முதலில் நீங்கள் எனக்குக் கலத்தல் (Consulting) கட்டணமாகப் பத்து உருபா எடுங்கள்'' என்றார்.

– நா. கோ. இளங்கோ, நாகரசம்பட்டி.

விரல் ஆராய்ச்சி.

தொழிற்சாலை ஒன்றிற்குப் புதிதாக ஒருவன் வேலைக்கு வந்தான். அந்தப் பகுதியின் மேலர் (மேஸ்திரி) ஒருவர், அவனுக்குப் பல்வகையான பொறிகளையும் காட்டி, அவற்றை இயக்குவதைப் பற்றியும் சொல்லிவிட்டுப் போனார். பொருள்களை நறுக்கும் விசை அரம் ஒன்று சுழன்று கொண்டிருந்தது. அதன் சுழற்சி அப் புதியவனுக்கு வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அருகில் போய் ஓடிக்கொண்டிருந்த அதன் விளிம்பைத் தொட்டான். அவ்வளவுதான். ஒரு விரல் துண்டிக்கப் பட்டு விழுந்தது!... ஆ! என்று பதறினான் அலறலைக் கேட்டு மேலர் ''என்ன, என்ன'' என்று கேட்டுக் கொண்டே ஓடி வந்தார். புதியவன் ''என்னவா, வீணாய்ப் போகின்ற உங்கள் விசையரம் என் விரலைத் துண்டித்து விட்டதே!'' என்று கதறினான். ''நீ. என்ன செய்தாய்?'' என்றார் அவர். ''ஒன்றுமில்லை. இப்படித் தொட்டேன் ...'' என்றுகூறி முடிக்கவில்லை. இன்னொரு விரலும் போய்விட்டது

உறுப்பினர் கவனிக்க...

'தென்மொழி' இதழ் அனுப்பப்பெறும் சுற்றுத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ள எண்களே அவரவர் உறுப்பினர் எண்கள். அவற்றுள் **பு. உ. எண் 291 முதல் 336 வரை** உள்ள அன்பர் அனைவர்க்கும் சுவடி 2 – ஓலை 2 (பங்குனி இதழ்) முடிய உறுப்பினர் கட்டணம் முடிவடைகின்றது. தொடர்ந்து தென்மொழிப் பயன் துய்க்க விரும்புவார் இம்மாதத்திற்குள் கட்டணத்தை அனுப்பிப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகின்றோம்.

'தென்மொழி' இதழ்கள் ஒவ்வோர் ஆங்கில மாதத்திலும் 16-ஆம் நாளிலேயே உறுப்பினர்கட்கு அஞ்சல் செய்யப்பெறுகின்றன. இந்த நாளுக்குள் உறுப்பினர் கட்டணம் அனுப்பியவர்கட்கு மட்டுமே அந்தமாத இதழ் அனுப்பப்பெறும்

— **அமைச்சர், தென்மொழி.**

நாட்டுணர்வும் குடியாட்சியும்.

மூலம் : சான் டூவர்ட் மில் (**John Stuart Mill**)

தமிழில் : வழுதி.

ஒத்த உணர்வும் ஒத்த நாட்டமும் உடைய ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகுதியினரே ஒரு நாட்டினராகக் கருதப்படுவர். அவ்வொத்த வுணர்வாலும் ஒத்த நாட்டத்தாலும் அவர்கள் பிற தொகுதியினரினின்று வேறுபட்டிருப்பர். ஒத்த உணர்வால் தாங்களனைவரும் ஒன்றென்று இயல்பாகவே அவர் உணர்வர். பிற தொகுதியினர் தங்களினின்று வேறுபட்டவர் என்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்வர். ஏதாவது செயலென்றால் பிற தொகுதியினரோடு ஒத்துழைப்பதினும் தங்கட்குள் ஒத்துழைப்பதிலேயே அவர்கள் நாட்டம் செலுத்துவர் தங்கட்கெனத் தாங்களே விரும்பி ஓராட்சியை அமைத்துக்கொள்ளவும் அவர் முன்வருவர். இத்தகைய எண்ணங்களின் அடிப்படையில் மலர்வதுதான் ஒருநாட்டுணர்வு (Nationalism) ஆகும்.

இந்நாட்டுணர்வு எழுதற்குப் பொருட்டுகள் பல உள. இனத்தாலும், மொழியாலும், சமயத்தாலும், நில இயைபாலும் இவ்வுணர்வு எழும். ஆயினும் இவையனைத்தினும் வலிந்தவை நெடுநாளைய அரசியற் பிணைப்பும், தனிப்பெரும் வரலாற்றுச் சிறப்பும் அதனையொட்டிய பழம் பெருமையுணர்வுமே யாம். தம் முன்னாள் வரலாற்றை எண்ணுகையில் அனைவருள்ளத்தும் ஒருமுகமாக எழும் பெருமையுணர்வும், தங்கள் வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளும் இன்பதுன்பங்களும் தங்களனைவர்க்கும் பொதுவானவை என்ற உணர்வுமே இவ்வொருமைப் பாட்டினை விளைவிக்கின்றன. இப்பொருட்டுகள் அனைத்தும் பொருந்திவரின் ஒருமையுணர்வு மிகுந்தும், ஒன்றிரண்டு குறையுமாயின் அவ்வளவுக்கு ஒருமையுணர்வு குறைந்தும் காணப்பெறும். இந்நாட்டுணர்வு ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகுதியினர் பால் முனைந்தெழுந்து பொங்குமாயின், அவ்வளவானே அவர்களை அவர்கட்கே யுரிய தனியாட்சியில் இணைத்துவிடுதல் வேண்டும். இஃது ஒன்றும் புதிதன்று; மக்கள் தங்கள் ஆட்சியைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்வதுதான் இது. இவ்வடிப்படை உரிமைதானும் அவர்கட்கில்லாவிட்டால் எவ்வகையில் அவர்களை உரிமை பெற்ற மக்கள் என்று அழைப்பது?

பல்வேறு நாட்டுணர்வு உடைய பல தொகுதியினரை (different Nationalities) மக்களாட்சியில் பிணைத்தல் இயலாததொன்றாகும் ஒத்த உணர்வில்லாத, குறிப்பாக, ஒத்த மொழி பேசாத பல மக்கள் தொகுதியினர் நடுவில் ஒருமுகப்பட்ட

பொதுக் கருத்து (Public opinion) என்றும் நிலவ முடியாது. அத்தகைய (செயற்கை) நாடொன்றிருக்குமாயின், அதன் பல் வேறு பகுதிகளில் பல்வேறு எண்ணங்கள் நிலவுகின்றன. பொதுக் கருத்துகட்கும் அரசியல் ஆக்க வேலைகட்கும் ஊற்று யிருக்கின்ற அடிப்படை உணர்வுகள் பகுதிக்குப் பகுதி வேறு படுகின்றன. முற்றிலும் வேறுபட்ட கருத்துகளையுடைய கட்சி களும் தலைவர்களும் ஆங்காங்குக் கிளைத்தெழுகின்றனர்; ஆணை வலுப் பெறுகின்றனர். மக்களிடையே நடமாடும் நூற்களும் செய்தித் தாள்களும் அரசியற் கருத்துகளும் பகுதிக்குப் பகுதி வேறுபடுகின்றன. ஒரு பகுதியில் நிலவும் கருத்துகள், நடை பெறும் அரசியல் விரகுகளின் உள் உளவை மற்றொரு பகுதி யினர் புரிந்து கொள்ள முடிவதில்லை ஒரே நிகழ்ச்சி, ஒரே செயல், ஒரே ஆட்சி முறை அவர்களிடையே வேறு வேறான எதிரொலிகளை எழுப்புகின்றது. ஒரு பகுதிக்கு நலமாகவிருப்பது மற்றொரு பகுதிக்குத் தீங்காக விளைகின்றது. மாநிலத்துக்கு மாநிலம் அச்சமும் நம்பிக்கையின்மையும் நிலவுகின்றன. உணர்வு மாறுபாடுகள் நிகழ்கின்றன. நடுவணரசோடு சில பகுதிகள் ஒத்துழைப்பினும் அஃது உண்மையான ஒத்துழைப்பாக இருப்பதில்லை. தம் அண்டை மாநிலத்துக்குத் தீங்கு விளைதல் வேண்டுமென்றே தாம் நடுவணரசோடு இயைந்து செல்கின்றன. எனவேதான், இம் மாநிலங்கள் பலவுக்கும் நடுவணரசின்மேல் வெறுப்பிருந்தபோதிலும் அனைத்தும் தமக்குள் ஒன்று சேர்ந்து அதனை எதிர்த்துத் தம் உரிமையினை நிலைநாட்டல் வேண்டும் என்ற எண்ணமும் நம்பிக்கையும் கொள்வதில்லை. தனித்து நின்று நடுவண் அரசினை எதிர்க்கும் ஆற்றல் எந்தப் பகுதிக்கும் இல்லாமையாலேயே, அதனுடன் தான் ஒத்துப் போவதே நலம் என்று ஒவ்வொரு பகுதியும் நினைத்துவிடுகின்றது.

இத்தகையதொரு நாட்டின் படையும் சிறக்க அமைவதில்லை. பல்வேறு உணர்வுடைய பல இன மக்கள் இப்படையில் இருப் பதால் அவர்கட்குள் இயல்பான ஒற்றுமையைக் காணல் முடியாது. இப் படை மறவர்கட்கு ஆழ்ந்த நாட்டுப் பற்றும் இருப்பதில்லை அவர்தம் நாட்டுப் பற்றெல்லாம் கொடியினைப் பணிவது ஒன்றே. இத்தகைய படை மறவர்களை ஒன்றுபடுத்தும் ஒரே இணைப்பு அரசியல் வல்லாண்மையும், அவர்களின் மேலாளர்களுமே! கட்டளைக்குப் பணிபுரிவதொன்றே அவர்தம் கடமையுணர்வாகும். இத்தகைய நாட்டில் ஓரிடத்துப் படையை மற்றோரிடமாக மாற்றி மாற்றி வைத்து ஆட்சிபுரிய நேரும். இது வல்லாட்சிக் கொப்பானதேயாம் இனச் சார்பு, நாட்டுப்பற்றுப் போன்ற இந்தப் பற்றுகள் குறுகியன என்றும், நாகரிகமற்ற வர்க்கே உரியன என்றும், தற்கால உலகப் போக்கில் அவ் வுணர்வை எதிர்த்து மாற்ற வேண்டுமென்றும் கூறப்படுமாயின், ஒரு வகையில் அது சரியே ஆனால் மாந்தர் எண்ணத்தைக்

கவும் இவ்வுயர்ந்த நோக்கம் தற்காலச் சூழ்நிலையில்—அதுவும் பல நாட்டினரை ஒரே வல்லாட்சியின் கீழ்ப் பிடித்துப் போட்டு விடுவதால் நிறைவேறவே நிறைவேருது.

முன்னேற்றமில்லாத பழங் காலத்தில், நாகரிக வளர்ச்சி யில்லாத மக்களிடத்தில் வேண்டுமாஞல் அது நடந்திருக்கும். பல பிரிவினரிடையே உள்ள வெறுப்பை மாற்றி, அமைதியை நிலைநாட்டுவது கோன் ஆட்சிக் காலத்தில் எளிதாக இருந் திருக்கும். ஆனல் ஆங்காங்கு மக்கள் ஆட்சியோ, அன்றி மக்களாட்சி வேட்கையோ நிலவிவரும் இக்காலத்தில் செயற்கை யாகப் பிணைக்கப்பட்ட மக்களிடையே ஆட்சியின் நோக்கம் நேர் மாருகிவிடுகின்றது. ஒருமைப்படுத்துவதினும் பிரித்து வைப்பதே இத்தகைய ஆட்சியின் வேலையாயிருக்கின்றது. எல்லாரும் ஒன்றிவிட்டால் தனக்கிடர் என்பதால் அவர்களைச் சேரவிடாமல் ஒரு சிலரைத் தன் கைக் கருவியாக்கிக் கொண்டு வலுப்பெறுகின்றது. இப் பொருட்டுகளால், மக்களாட்சி சிறக்க வேண்டுமாயின் ‘ஒரு நாட்டுணர்வு’ நிலவும் எல்லையே ஆட்சி எல்லையாகவும் அமைய வேண்டும் என்பது தெற்றெனத் தெரி கின்றதன்ரே!

பல இன மக்களும் ஒற்றுமைப்பட்டால், பலர்தம் உயர்ந்த பண்புகளும் இணைந்து இருந்தால், அது மாந்த இனத்தின் வளர்ச்சிக்கு நன்று என்பது உண்மையே. ஆனல் தனித் தன்மையை அழித்துவிடுவதன்றே இதன் பொருள்! ஒவ்வோ ரினத்தின் தன்முனைப்பையும் பொது நலத்துக்குத் தேவையான அளவு சற்றே மட்டுப்படுத்தி அவர்களை இணைத்துவைப்பதன்ரே சரியான முறையாகும்! அப்படி இணைந்த மக்களிடையில்தான் எதிர்பார்க்கும் நல்விளைவைக் காணமுடியும். அந்நிலை அமைவ தற்குச் சில அடிப்படைகள் வேண்டும். அவ்வடிப்படை யில்லாமல் அவர்கள் ஒரே ஆட்சியின்கீழ் கொணரப்பட்டால் இடர்ப்பாடுகள்தாம் நேரும். இணைந்த இனங்களிற் சில பெரும் பான்மையினராகவும், சில சிறுபான்மையினராகவும் இருத்தல் கூடும். சிலர் நாகரிகத்தில் உயர்ந்தும் சிலர் தாழ்ந்தும் இருத்தல் கூடும். சிறுபான்மையினம் நாகரிகத்தில் உயர்ந்திருக்குமாயின் ஒருவேளை பெரும்பான்மையினரை அடக்கியாளக் கூடும்; எனினும் பொதுவாகப் பெரும்பான்மை இனத்தினரால் அடக்கி யாளப் படுவதே மிகுதி. இந்நிலை மாந்த வளர்ச்சிக்கு ஊறு தேடுவதாகும். உலகனைத்தும் சேர்ந்து இந்நிலையை எதிர்த்தாக வேண்டும். இவ்வினங்கள் தம்முள் ஒத்த எண்ணிக்கை உடையவாயிருக்கும் பொழுதும் இடரே விளைகின்றது. அவை இணைந்து செயலாற்ற விரும்புவதில்லை. தம்மைத் தாமே வலுப் படுத்த நினைக்கின்றன ஒவ்வொன்றும் தன்முனைப்பு மிகுந்து, தன் தனித்தன்மையை வளர்த்துக் கொள்ள விழைகின்றது.

மறைந்த வழக்கங்களும், அழிந்து கொண்டிருக்கும் மொழிகளும் கூடப் புது வலிவு ஊட்டப்பெற்று இடைவெளிகள் விரிவாக்கப் பெறுகின்றன. வேற்றினத்தின் வல்லாண்மை தன்மேல் செலுத் தப்படுமாயின் அதனைக் கொடுங்கோலாட்சி என்றே ஒவ்வோ ரினமும் கருதுகின்றது. மாற்றினத்துக்கு அளிக்கப்பட்ட ஒவ் வொரு நன்மையும் தன்னைச் சுரண்டியதால் விளைந்ததே என நினைக்கின்றது.

ஆட்சி வலுவாலும், எதிர்ப்பில் ஒற்றுமை இன்மையாலும் இவற்றை அடக்கி ஒடுக்கி அவற்றின் தனித்தன்மைக்கு ஊறு நேரும் வகையில் அழுத்தி விடக்கூடும்: இவ்வழுத்தம் சில தலைமுறைகள் நீடிக்குமாயின், அதன் பின்பு ஒரு வேளை உணர் வொருமைப்பாடு நிகழக்கூடும்; ஆனால் இவ்விணைப்பு நிகழ்வதன் முன்பு ஆங்காங்குத் தன்னாட்சிக் கிளர்ச்சிகளும் எழுச்சிகளும் தோன்றிவிடுமாயின் இணைப்பு நேர வழியே இல்லை. நிலவியல் வேறுபாடுகளும் ஒரே ஆட்சிக் கியல்பாக ஒத்துவராத வட்டாரச் சூழ்நிலையும், இயற்கையாகவே இந் நாட்டுப் பகுதி களிடை அமைந்துவிடுமாயின், இவற்றிடையே உரிமையும் அமைதியும் நிலவவேண்டுமாயின், இவை முற்றிலும் விடுதலை பெற்றுத் தனித்தியங்குவது பொருத்தம் மட்டுமன்று; மிகமிக இன்றியமையாததுமாகும். விடுதலை பெற்ற இப்பகுதிகள் சில போது பிரிவினைக்குப்பின், பயனுள்ள கூட்டாட்சி (Federation) முறையில் ஒன்றுபடினும் படலாம். எனினும் ஒத்த உணர்வு சிறிதாயினும் நிலவும் பொழுதுதான் இத்தகைய கூட்டாட்சியும் இயல்வதாக இருக்கும். *

தமிழர்க்குப் புதிய குருதி...!

''கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், பயிற்சிக் கூடங்கள், கோவில்கள் அனைத்தையும் இடித்து நொறுக்கித் தீயிலிட்டுப் பொசுக்கல் வேண்டும். தற்காலக் கல்வி இளைஞர்களை முற்றிலும் பாழ்செய்துவிட்டது; சிறிதும் பயனுடைத்தாக இல்லை. இருபதாம் அகவைக்கு மேலும் இளைஞர் தம் பெற்றோரின் உதவியை நாட வேண்டியுள்ளதென்றால் அஃது ஒரு பெருங் குற்றமாகும்.''

''இந்தி பேசும் தமிழர்கட்கு, (அஃதாவது தமிழகத்தில் இந்தித் திணிப்பை வரவேற்கும் தமிழர்கட்கு) நேர்வாளம் (ஒரு வகை நச்சு மருந்து) கொடுத்து அவர்தம் உடலின் குருதியை முற்றிலும் உறிஞ்சி எடுத்துவிடல் வேண்டும். பின்பு புதிய குருதியை அவர்கட்குச் செலுத்தல் வேண்டும்''

— சி. டி நாயுடு,
அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்
கிழமை ஏடு 3, பிப் 1964.

உயர்ந்த மாந்தனும் தாழ்ந்த மாந்தனும்

உயர்ந்த மாந்தன் எது சரியானது என்பதைப் புரிந்து கொள்கின்ருன்; தாழ்ந்த மாந்தனே எது விலைபோகும் என்பதையே புரிந்து கொள்கின்ருன். உயர்ந்த மாந்தன் தன் உள்ளத்தைப் பேணுகின்ருன்; தாழ்ந்த மாந்தன் தன் உடைமைகளைப் பேணுகின்ருன். உயர்ந்தவன் தன் தவறுகட்காகத் தான் அடைந்த தண்டனைகளையே மனத்தில் வைத்திருக்கின்ருன்; தாழ்ந்தவன் தனக்குக் கிடைத்த பாராட்டுகளையே கருதி மகிழ்கின்ருன். உயர்ந்தவன் பிறர் கருத்தினை ஒப்புக் கொள்ளாவிட்டாலும் அதனை மதித்து நடக்கின்ருன். தாழ்ந்தவனே, பிறர் கருத்தினை முற்றிலும் ஏற்றுக்கொண்டு விடுவான்; ஆனால் அவற்றை மதிக்கமாட்டான். உயர்ந்தவன் அசையா உறுதியுடனிருக்கின்ருன்; ஆனால் அவன் பூசலிடுவதில்லை. பலருடனும் நன்கு பழகுகின்ருன்; ஆனால் குழுச் சேர்ப்பதில்லை. உயர்ந்தவன் தன்னையே பழித்துக் கொள்கின்ருன்; தாழ்ந்தவன் பிறரைப் பழிக்கின்ருன்.

உயர்ந்தவன்பால் பணிபுரிதல் எளிது; ஆனால் அவனுக்கு மகிழ்வூட்டுதல் அரிது. எவ்வாறெனில் அவன் சரியானவற்றைச் செய்வதால் மட்டுமே மகிழ்வடைகின்ருன்; ஒவ்வொருவரையும் அவரவர் தனித் திறனுக்கேற்பப் பயன்படுத்திக் கொள்கின்ருன். தாழ்ந்தவனிடம் பணிபுரிதல் கடினம்; அவனுக்கு மகிழ்வூட்டுதல் எளிது எவ்வாறெனில், சரியானவற்றைச் செய்யாவிட்டாலும், அவனின் விருப்பு வேட்கைகட்கேற்ப நடந்து கொண்டால் அவனை எளிதில் மகிழ்வூட்டிவிடலாம். ஆனால் வேலை என்று வரும்பொழுதோ அவன் எல்லாரிடத்திலும் எல்லாத் திறமைகளையும் எதிர்பார்க்கின்ருன்.

உயர்ந்த மாந்தன் செயற்கரியசெய்யும் ஆற்றலுடையவனாக இருக்கின்ருன்; ஆனால் சில்லறை வேலையொன்றில் அவனை ஈடுபடுத்தல் முடியாது. தாழ்ந்தவனே இதற்கு நேர் மாருக இருக்கின்ருன். ஒரு துறையில் மட்டுமே திறன் பெற்றிருப்பவன் உயர்ந்தவன் ஆகான். உயர்ந்தவன் பரந்த நோக்கினன்; ஒரு சார்புடையவன் அல்லன். தாழ்ந்தவன் ஒரு சார்பினனே; அவனுக்குப் பரந்த நோக்கம் இல்லை. உயர்ந்தவன் மெய்ப்பொருளையே நாடுகின்ருன்; வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படான். அவனை வயல் வெளிகளில் வேலை செய்யச் சொல்லுங்கள்; அவன் பட்டினியாகத்தான் இருப்பான். ஆனால் புத்தகக் குவியலை அவனிடம் கொடுத்துப் பாருங்கள்; அங்குத்தான் அவன் உண்மையான செல்வத்தைக் காணுகின்ருன். அவன் வறுமைபற்றியும் கவலைப் படுதல் இல்லை.

உயர்ந்தவன் கரவற்றவனாகவும் மன அமைதியுள்ளவனாக வும் இருக்கின்றான். தாழ்ந்தவன் எப்போழ்தும் எதையாவது எண்ணிக் கவலைப்பட்டுக்கொண்டே இருக்கின்றான். முன்னவன் முன்னோக்கி உயர்கின்றான். பின்னவன் கீழ்நோக்கித் தாழ்கின் றான். முன்னவன் பெருமிதம் உடையான். தருக்குடையவனல் லன். பின்னவன் நேர்மாறாக இருக்கின்றான். உயர்ந்தவன் சரியானதனையே நிறைக்கோலாகக் கொண்டொழுகுகின்றான். (அதனால்) தான்சொன்ன உறுதிமொழியை நிறைவேற்றாமலும் போகின்றான். அவனுக்கென்று ஊறிப்போன காழ்ப்பெண்ணங் கள் எதுவும் இல்லை. உண்மை எதுவோ அதுவே அவன் வழி.

நல்லுணவு, நல்லுறையுள் என்று அவன் கேட்டுக் கொண் டிருப்பதில்லை. தன் கடன்களைச் செவ்வனே ஆற்றித் தன் சொற் களில் விழிப்பாயிருக்கின்றான். தன்னினும் பெரியோனைத் தனக்கு வழிகாட்டியாகக் கொள்கின்றான்.

உண்மையைநாட விழைந்து, ஆனால் தன் எளிய உணவுக் கும் எளிய உடைக்கும் ஒருவன் நாணுவானாயின் அவன் பயனற்றவனே. வாகான வாழ்க்கையை விரும்புபவன் அறிஞ னெனுஞ் சொல்லுக்குத் தகுதியுடையவனாகான்.

அரசன்பால் பணிபுரியும் ஒருவன், ஒரு முறையன்று மூன்று முறைகள் தன் அறிவுரைகள் அவ்வரசனால் புறக்கணிக்கப் பட்டதைக்கண்ட பிறகும் நாட்டைவிட்டு நீங்கானாயின், அவன் ஊதியம் கருதியே அப்பணியில் தொங்கிக்கொண்டிருக் கின்றான் என்று பொருளாகும் "இல்லை; இல்லை; ஊதியத்துக் காக நான் மயங்கவில்லை" என்று அவன் சொல்வானாயின் அவனை நம்பல் முடியாது. தன் செய்கையினும் சொற்கள் உயர் வாயிருக்கின்றனவே என்று நாணுபவனே பெருந்தகையாளன்.

கன்பூசியசு.

முகவர்கள் கவனிக்க!

ஒவ்வோர் ஆங்கில மாதத்திலும் 5ஆம் நாளுக்குள் முந்திய மாதப் பட்டியல் தொகையை அனுப்பி வைப்பதே விரைந்தும், விரும்பியபடியும் இதழ் பெறுவதற்கு வாய்ப்பாகும். பட்டியல் தொகை நெடுநாளுக்குப்பின் வருவதால் இதழ் பெறுவதில் தொல்லை நேரும் என்பதை உணர்ந்து ஒத்துழைக்க வேண்டு கிறோம். அதிகமான படிகள் தேவைப்படுவோர் முன்கூட்டியே தெரிவிக்கவும். காலங் கடந்து தெரிவித்தால் தேவையைச் சில நாள் கடந்தே நிறைவேற்ற முடியும்.

— அமைச்சர், தென்மொழி.

அகமலர்த்துங் கலை...!

——: ம. அரங்கனாதன் :——

வானேறி மதிமுதுகின் வகையறியும் பொறிவிடுவார்,
பானையென விண்வெளியிற் பார்மிதக்கப் பார்த்திடுவார்,
ஏனைவெளிக் கோட்பயணம் இயலுமெனக் கணக்கிடுவார்
ஆனாலும், அடுத்துளவர் அகமலர்த்துங் கலையறியார்.

ஓவாதே சுழலுதலும், ஒருநெறியே படிகுதலும்,
நீவாதே, பிறகோளில் நெரியாதே ஒழுகுதலும்,
ஏவாதே இயலுதலும் எனமுறைமை கொளுமுலகில்
நோவாதே மாந்தரியல் நுணுக்கமுற வியலாதோ?

மேனாடு போந்தறியேன், வினைவுகளை நேர்நேரே
தேனாடு சுரும்பெனவே சென்றறிதிற் சேர்க்ககிலேன்.
ஆனாலு மெனதுமன மதிர்வதெனின், அறிவுநிறை
வானார்தம் உளம்படுதல் அளவிடுதற் காமோதான்?

வெம்போர்க ளிரண்டானும், வினைவானுங் குறையுணரார்
தம்பா,லச் சாக்கியரும், தவமுடையா ரேசுவுமே
அம்பாரில் முனையுடல மதனோடு வரினு,மொரு
செம்பாக மேன்,சிறிய தினையளவுந் திருந்துவரோ!

ஒழுக்கமிலா ராயினும் உயர்பிறப்பே யரணாகக்
கொழுக்கவுள குழுவியலின் கொடுமைகளைக் கூறுவதோ!
அழுக்குமன முடையாரும் அறனறியாப் பணவலிவால்
செழிக்கவுள வரசியலின் சிறுமைகளைச் செப்புவதோ!

மானமெனு மொருமரபை, வழிவழியாய் வருமுறவை
ஆனவரை யழிப்பதுவே அறமாகக், கயவர் செயும்
ஈனமெலாம் இனியனவாய் ஏற்க,வியல் கலையுணர்வு
தேனருவி யா,யிலையோர் சிற்றுணர்வா சிந்திமினே!

செய்பணியின் குறிக்கோடான் சிதறுகினும் கவலையுறார்,
நொய்தாகு பொருளுணர்வில் நோன்பிழந்து நழுவிடுவார்;
எய்தாத பயன்களெலாம் எய்தியவாய் ஏட்டினிலே
பெய்திடுவர்; இவர்பிழைகள் பிறர்காணும் பெற்றியவோ!

தாய்மொழியே உயிராகச் சமைவாகுங் குழுவெனுமோர்
வாய்மையினை உணர்வாரும், வலிவிலராய், மொழியினது

தூய்மைகெடப் பேசுவதும், எழுதுவதும் தொழிலாகத்
தேய்வ,ரவர் புலமைநலம் சிறிதேனும் சிறப்புறுமோ!

வழக்கியலோ இழுக்கியலாய் மாறுவதால், மானமுளார்
புழுக்கமுற மிகவொதுங்கிப் புறம்போவர்; பொய்யரெலாம்
கொழுக்கவுள புகலிடமாக் கொள்ளுவர்;நல் லறமுறைகள்
வழுக்குகிலா எளியமுறை வகுப்பாரோ மதியுடையார்!

தொகைபெருத்த வொருகுலத்தார் துலங்குதலும், பிறரெல்லாம்
தகையுடையா ரானாலும் தளருவதும் தன்னலமாம்
பகைபெருக்கி வைப்பனவே; பண்புடையார் சிற்சிலபேர்
வகைதெரிந்துட் போனாலும் வாயலம்பி வருவாரால்.

குடியரசு நிலைபெறவே கோலுவதாம் தேர்தல்முறை
படிவுறுமா குலமுறைகள் பார்த்தியலும் படியாயின்?
நொடிவிலதாய், இழிதகவின் நுழைவிலதாய்ப், பரவியுள
மிடியகல முறைசெயுமா விளைவாகும் அரசுமுறை?

வாணிகமோ பெருங்கொள்ளை; வரிவிதிப்பு முறைகளெலாம்
நாணமிலார் கரவுக்கு நகர்ந்துதரும்; அலுவலர்தாம்
கோணுவர்;நல் லறமுறையாற் குறைகாண முனைகுவதும்
காணுமற் போயினபின் கதவிறுக்கல் போல்வதுவே!

திட்டத்தின் பேராலே செலவுசெயும் பொருள்களெலாம்
எட்டிப்போய் எளியவரின் இடர்களைய இயலாமல்,
குட்டிப்'பேய்' அலுவலரும் குழுத்தலைமைப் பொறுப்பினரும்
முட்டிக்கொள் அமயமெலாம் முடங்குவன பதிவுகளில்.

எவ்வகையிற் பார்த்தாலும் இழுக்குகளே மிகப்பலவாய்,
ஒவ்வியநற் பயனுடையார் ஒழுங்குகளை விழுங்கிவரச்
செவ்வனியல் வாழ்வியலுஞ் சிதறிவிழும்; பதறிமிக
அவ்வவரும் தன்னலமே அரணாக மறைகுவரால்.

மனம்வேறு சொல்வேறாய் மாறுபடச், செயல்களெலாம்
திணையானும் ஒருமைதரும் திறனிலவாய்ச் சிதறுவன;
தணையேனு முணரவல தகுதியிலா வொருவ,னிவண்
அணைவரக மலர்த்துவதற் கருந்திறலீங் குடையவனோ?

அரசியலை எவர்தோளில் அமர்த்துகினும், பல்சமயம்
பரவுகினும், கலை,கல்வி படிமுறையாய் வளருகினும்,
விரவியபல் வளங்களெலாம் மேவுகினும் யாதுபயன்?
உரவுபெறு மனநிலையில் ஒருமைபெற உணர்விலையேல்! *

வள்ளுவர் காட்டும் மன நிலைகள்.

புலவர், வித்துவான்.
ஒண். கி. சந்திரசேகரன், எம். ஏ., பி. டி., பி. ஓ. எல்.
(தியாகராயர் கல்லூரி, சென்னை.)

மனம் ஓர் அகப்புலன் ஆகும். இது காகத்தின் கண்மணி போல அகம் புறம் என்னும் ஈரிடத்தும் இயைந்து நின்று, புறப் பொறிகளான் அறிந்த பொருளை இடையே நின்று பற்றி வாங்கி அறிவின் எதிர் உருவாய்த் தோன்றுமாறு உய்த்தற்கண் ஒழியா விரைவுடையதாய்த் தோற்ற மாற்றமாகிய தொழிற் பாட்டுக்கு நிலைத்த நிகழிடமாய் நிற்கும். இம் மனத்திற்கே உலகந் தோன்றும்; தன்னுயிரைச் சார்ந்து, புறம் பரவாமல் நிற்கும் இயல்பில் தலைநிற்கும். உலகத்தை நோக்குங்கால் அதன்கண் உள்ள பிறவுயிர்கள், அவற்றின் உடல், உணர்வு, உடைமை, உறு தொழில்கள் ஆகியவற்றான் இது பல்வாறு தலைப்படும். தற்சார்பு பற்றுங்கால் அகத்தே மடங்கித் துன்பத்தின் நீங்கி ஒரு நிலையில் நிற்றலும்படும். இவற்றான், உலகியல் அறிவியல் ஒழுகலாறுகளில் இம்மனத்திற்கு உண்டாகும் வேறுபாடுகள் பலவாதல் பெறுதும்.

மேலும், இவ்வுடல் முன்னர் ஈட்டிய வினையால் வந்ததாக லின், மக்கள் யாக்கையோடு கூடி விளங்குவனவெல்லாம் ஒத்த மனவியற்கையினை உடையனவென்று எண்ணவும் படா. ஆகவே, ஒவ்வொருவருக்கும் வினையின் நீர்மையால் மன வியற்கை வேறுபட்டிருக்கும் என்றே கருதற்பாலதாகும். இது பற்றியே, மாசுதூர்ந்த மனமும், மாசற்ற மனமும் உடையவராக மக்கள் இருதிறம்பட நிற்பர். இயல்பாகவே மாசு நீங்கிய மனத் தாருக்கு உலகுறு நோக்கமும் உயிருடன்போக்கும் புகழ்தக்கவா யிருக்கும் அத்தகு மனவியற்கை இல்லாதார்க்கு எவ்வகையா னும் துன்பமே விளைந்து நிற்கும். இது நூலோர்க்கெல்லாம் துணிபாகும். இம்மன நிலைகளைப்பற்றிப் பொய்யாமொழியார் புகல்வனவற்றை நோக்குதும்.

வினைதான் நல்வினை தீவினையென இருதிறம்படும் (5). ஒருவன் நிழல் நெடிதாகப்போயும் அவன்றன்னை விடாது வந்து அடியின்கண் தங்கிய தன்மைபோல (208). தன்காலம் வருந் துணையும் புலனாகாது உயிரைப் பற்றி நின்று அஃது ஒன்றுற வாய்த்துழி நறும்பூ மலருஞ் செவ்வியில் மணம் வெளிப்பட்டு நாறுமாறு போல விளங்கிப் பயன் விளைக்கும். தாந்தாஞ் செய்த வினை தாமே துய்ப்பராகலானும், நன்மையுந் தீமையும் பிறர் தர வாரா வாகலானும், நல்வினை விளையுங்கால் அதன்

விளைவாய வின்பங்களை இயைந்துநுகராமலும், ஏனைத் தீவினை விளையுங்கால் அதன் விளைவாய துன்பங்களைத் துடைக்குந் திறன் நாடி, அல்லல் உழக்காமலும் ஒருதிறப்பட்டு நிற்பதுவே (379) மேதக்கதாகும். இதனால், தீவினையாற் கேடும் நல்வினை யாற் பெருக்கமும் யாவர்க்கும் முன்னே அமைந்து கிடத்தலின், அவ்வாற்றை அறிந்து கேடுற்றஞான்று பிறரைக் காரணமாக வைத்து அறிவுடையார் நோதலைச் செய்யார். அக்கேட்டிற்குக் காரணம் தமது பழவினையே யென்று அதனுண்மையை அறிந்து மனத்தைக் கோடாது நிறுத்துவர்.

''கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி'' (குறள் : 115)

மேலும், ஐம்புல வின்பங்களை யாரும் நுகரும் எண்மைத்தாய இல்லொழுக்கில் நிற்பினும், தம் மனத்தைப் பொறிவழிப் போக விடாது நிலையில் திரியாதடங்குவர் (124). இஃது ஆற்றரும் அறநிலையாகும். இந்நிலையினர் யாதுபற்றியும் பிறர் எட்டுணையே னுந் துன்புற நினையார். இவ்வியல்பான் இவர்தம் உள்ளத் துக்கண் அருள்நிலை வந்தெய்தும். இவ்வியல்பொடு உலகியலை நோக்குழி, மறந்தும் பிறன் கேடு சூழார் (204); செந்நெறியின் மருங்கோடித் தீவினையைச் செய்யார் (210); நகையும் உவகை யும் மேற்கொள்ளார் (304). இஃது ஆனாத அருள் நிலையாகும். தற்சார்பு பற்றுழி, ஐம்புலவழிப் படரார்; (343). உற்றநோய் நோன்று உயிர்க்குறுகண் செய்யார் (261); தங்குற்றங்களைக் கடிந்தொழுகுதலையே நாடுவர் (436); தம் நெஞ்சறிவன பொய் யார் (293); தம்முயிர் உடம்பினீங்கிப் போமாயினும் பிறிதோ ரின்னுயிரை அதன் உடம்பின் நீக்குந் தொழிலைச் செய்யார் (327). இத்திறத்தன தவலருந் தவநிலையாகும். அன்றியும், சார்புணர்ந்து சார்புகெட வொழுகுவர் (359), காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் 'நாம'ங்கெட மடங்குவர் (360); யானென தென்னுஞ் செறுக்கறுத்து நிற்பர் (346); மனமொழுக் கம், மெய்யுணர்வு முதலியவற்றில் முயற்சிபற்றுவர், புன்மை முயற்சிகளுள் போக்கொழிவர்; அகத்தொடுங்கி உயிரையே நோக்கிக் களிப்புக் கவலைகள் அற்ற வியற்கை நிலையையே வேட்டு நிற்பர் (370); இது பெறலரும் மெய்மைப் பெருநிலை யாகும். இவ்வாறு அறநிலை. அருள்நிலை, தவநிலை, அறிவு நிலை களில் தலைப்பெய்து மாட்சிமைப்பட்ட மனநிலையுடையாரையே மாண்டாரென வள்ளுவர் வேண்டினு ரென்க. இவர்களது தகுதியை யுள்ளவாறு வெளிப்படுக்கும் பொதுவாய பண்பு நலன்கள் பலவற்றுள்ளும் அன்பு, பொறுமை, வாய்மை, நல்லுணர்வு, நாண்முதலியன நனிசிறந்தனவாக நவிலத் தகுவனவாம். இவற்றுள் அன்பும் பொறுமையுமாகியவை மேதக்கன வென்ப. இவ்வியல்புகளைப் பற்றித் திருவள்ளுவர் இயம்புவனவற்றை இனிதின் நாடுவோம்.

அன்பு: உயிர் என்றென்றும் அழிவிலதாகும். உயிர்க்குயிராய் இறைவன் உளன். தன்னிடத்துள்ளதோர் மறைப்பு மூட்டத்தால் உயிரானது இறைவனை அறியமாட்டாது நிற்கும். இம் மறைப்பினை உந்தித்தள்ள இறைவன் விருப்பம்கொள்வன். இவ் விருப்பம்தான் உயிரிடத்து விளங்குங்கால் அன்பெனப்படும். இவ்வன்பானது உயிருக்கு அகக் கண்ணாய் நிற்கும் மனத்தின்கண் நிகழும். இம்மனந்தான் புறப்பொறிகளின் வாயிலாய் தொடர்புடையார்மாட்டு இவ்வன்பினை வெளிப்படுக்கும். உயிரினிடத்து நிகழும் இறைவனின் வேட்டையானது மனமுதலாகிய கருவிகளின் கூட்டரவாகிய உடம்பொடு கூடிய வழியே புறம் பொசிந்து அன்பெனப்பட்டு விளங்கும் உயிரும் உடம்பும் இயைந்த துணையானே அன்புண்டென்பது பெறப்படாது. காந்தக் கல் இரும்பைத் தன்கண் ஈர்த்துக் கொண்டு தன்வயமாய்ப் பற்றச் செய்வதுபோல, இறைவனும் உயிரைத் தன் திருவடிக்கண் சேர்த்துக் கோடற்கு வேட்கை பிறக்கக் கொண்ட உயிரோடு கூடிய உடம்பினிடத்துத்தான் அன்பென்பது காணப்படும். இதனால், மாண்டார் மனத்துத் தான் அன்பு நிகழுமென்பது விளங்கும். இறைவன் யாண்டும் விளங்குவனாதலின் உயிர்களெல்லாம் இவ்வன்பினால் தொடர்புபட்டு வாழவேண்டுவது இறைவனது விருப்பவழி நிற்றலாகிய பொய்தீர் ஒழுக்க நெறியாகக் கொள்ளற் பாலதாம். அதுபற்றியே, பெறுதற்கரிய மக்களுயிர்க்கு உடம்போடுண்டாகிய தொடர்ச்சியினை அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின் பயனாமென்று அறிவுறுத்தற்கு

> ''அன்போ டியைந்த வழக்கென்ப; ஆருயிர்க்(கு)
> என்போ டியைந்த தொடர்பு (73)

என்றுரைத்தார். உடம்போடியைந்தன்றி அன்பு செய்யலாகாமையானும், ஒரு திறம் பற்றி உடங்கியைந்து நிற்பாரிடத்து எளிதில் செய்தற்கு அமையுமாகலானும், இல்வாழ்க்கைக் கண் நின்று மனைவியோடும் மக்களோடும் ஒத்தலோடுங்கூடி இன்புறுவாரிடை இவ்வன்பு அரும்பி முருகி வளர்தற்கு இயைபுண்டாம். இவ்வன்பு முதிர்ந்துழி தொடர்பு பற்றாது இயல்பாக வெல்லாவுயிர்கள் மேலும் செல்லும். அப்பொழுது அஃது அருள் என்றுரைக்கப்படும். அன்பின் முகிழ்த்து முதிர்ந்ததே அருளாதலின், அவ்வாறு பிறக்கும் அருளை ''அருளென்னும் அன்பீன் குழவி'' (757) யென்றார்.

> ''தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்; தேரின்
> அருளாதான் செய்யும் அறம்'' (249)

என்றதனான், நிலைபெற்ற மெய்யுணர்வில்லாதவன் இடையே மெய்ப் பொருளை யுணர்ந்தால் அதனைத் தன் அறிவின்மையால்

தானே அழித்து விடுமாறுபோல, அருளாதான் இடையே அறஞ் செய்தால் அதனைத் தன்னருளாமையால் தானே யழித்துவிடு மென்பதாயிற்று. அருளிலான் அன்புமிலான். ஆதலான், அன்பின்மையால் அறத்தை யழித்தானுயினுன். அது நோக்கியே ''அறத்திற்கே அன்பு சார்பென்ப'' (76) என்று சாற்றினுர். உயிர்கட்கு ஆக்கமாவது எல்லாப் பேற்றினுஞ் சிறந்த வீடு பேறும், துறக்க முதலிய செல்வமுமாம். இவ்வாக்கத்தை அறமே தரும்.

''சிறப்பீனுஞ் செல்வமு மீனும்; அறத்தினூஉங் (கு)
ஆக்க மெவனோ வுயிர்க்கு (31)

எனவே, அன்பிலார்க்கு இருமையினும் இன்ப மின்ருகும்.

தொடர்பு பற்ருதே வருத்த முற்ருர்மேல் செல்வதாய அருள் வறியார் மேற் சென்றக்கால் அவ்வறுமையைக் களைதற்குப் பொருள் வேண்டுமன்றே; அஃதில் வழி அருள் வளராது. அருளை வளர்க்குந் திறத்ததாகிய பொருளும் தொடர்புடையார் தொடர்பிலார் ஆகியோர்க்கு நோய் செய்யாது படைக்கப்படல் வேண்டும். அவ்வாறு வருவதே அறஞ் செய்தற்காம்; பிற இழத்தற்காம் ஆதலின்,

''அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்'' (755)

என்ருர். இவற்ருன், அறத்திற்கு மூலம் அருளென்றும், சார்பு அன்பென்றும் கருவி பொருளென்றும் கொள்ள நிற்றலின், மூல மாகிய அருளையும் கருவியாகிய பொருளையும் தன்னெடு பிணைத்து இருதலைப் புள்ளுப்போல் அன்பு விளங்குவதாகும்.

அன்புடையார் தாம் ஈட்டிய வொண்பொருளை இம்மை நோக்கி ஒப்புரவு செய்தற்கும் மறுமைநோக்கி ஈகையை மேற் கோடற்கும் உய்ப்பர். தாஞ் செய்யத்தகுவனவற்றை யறிந்த இயற்கை யறிவுடையார் பிறவெல்லாம் ஒழியினும் ஒப்புரவு செய்தற்குத்தளரார். அதனுல் பொருட்கேடு வருமெனினும் தம்மை விற்ருயினும் செய்வர்.

''ஒப்புரவினுல் வருங்கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து'' (220)

இத்தன்மையோர், பொருட்குறை நிரப்பவேண்டி வறியார்க்கு ஈயாது ஈட்டத்தையே மேற்கொண்டு இவறிக்கூட்டார் (229). எதிர்நின்று ஏற்பார் பொருளான் வறியராயின் இங்ஙனஞ் செய்தல் பற்றும். அவ்வாறன்றிப் புருவின் ஊனை நசைந்த வல்லூறுபோல நேரின் பொருளால் பயனின்ரும். சிபிவேந்தன்

புருவின் நிறைக்குப் பிறிதோருடம்பின் ஊனைப்பெறக் கருதிலன். அதுகொலையுட் புகுத்தலாலும் அருளுக்கு மாறுபடுதலாலும் ''அருளல்ல தியாதெனின் கொல்லாமை கோறல்'' (254) ஆக லானும் அவ்வாறு நினைந்திலன்:

> ''தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
> மன்னுயிர்க் கின்னா செயல்'' (318)

என்றபடி, புருவைக் காக்கவும் வல்லூறின் பசி நீக்கவுங் கருதி ஞன் கொலைவினையனுவனே! அருள் கருதியன்புடையன் (285) ஆயினானதலின், அருளற்றாரற்றார் மற்றாதலரிதென்பதனை (248) நன்குறநாடித் தனதுடலையே தடிதற்கு ஒருப்பட்டான். கைப் பொருளானே யன்றித் தன்னுடலையும் வழங்கிவிடும் வண்மை வந்தவாறென்னே! கடவுளதாணை வழி ஒழுகி வாழுமியல்புடை யார்க்கெல்லாம் இத்தன்மையே யுளதாங்கொல்! உண்பார்க்குப் பசிதீர்க்கும் நல்ல உணவுகளை உளவாக்கிக் கொடுக்கும் மழை யானது நீர்வேட்கையை நீக்குதற்குத் தன்னையும் நீராயுண்ணக் கொடுக்குமாறு போல அன்புடையாரும் அருளாற் சிறந்து தம்முடம்பானும் பிறர்க்குரியராவார் போலும்!

> அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
> என்பு முரியர் பிறர்க்கு (72).

இதனால் மாண்டார் தம் மனவியற்கை புலனாம்.

பொறுமை:

அன்பால் மாண்ட மனத்தார் தாம்மேவன செய்தொழுகார் (1073) தம்மனத்தைச் சென்றவிடத்தால் செலவிடார் (422), ஒரு கால் பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் (417). அஃதில்லார் பெரிதும் பேதைமைப்பட்டு முடிவில்காலமெல்லாம் தாம் நிரயத் துன்பம் உழத்தற்குக் காரணமாகிய கொடுவினை களைச் சிறிது காலத்துள்ளே செய்து கொள்ளுவர்.

> ''ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையும்
> தான்புக் கழுந்து மளறு'' (835).

அருள் சேர்ந்த நெஞ்சினார் இது செய்யார். ''மனநலத்தினாகு மறுமை'' (459) என்பதனை நன்குணர்ந்து ''நிறையுடைமை நீங்காமை'' (154) வேண்டுவர். நெறியினீங்கிய செய்தாரையும் பொறுப்பர்; மனம் நோவார். அறனல்ல செய்யார். இவர் மனம் நோவாமையின் (157) சினமும் ஏனைச் சிறுமையும் துறந் தாராவர். அறனல்ல செய்யாமையின் (157) கரிசும் படிறு மிலராவர். பொறுத்தலின் (158) நோற்றல் தலைப்பட்டவராவர். இறப்பினை மறத்தலின் (152) மறம் நிகழ்தற்குக் காரணமாம் மாசிலராவர். இவற்றான், அன்பின் வழிநின்று பொறையுடைமை

போற்றி யொழுகுதல் மாண்டார்தம் மனத்தான் பகைமை பற்ரு மலும், சினங்கதுவாமலும், கரிசு புகாமலும், மாசு தூராமலும், நோன்பு நெகிழாமலும் இருத்தலாகிய இயற்கை நிலையோடு விளங்குதல் காணப்படும்.

''சினத்தைத் துறந்தார் துறந்தார் துணை'' (310), யென்றும்,

''எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
மாணு செய்யாமை தலை'' (317) என்றும்,

''உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு'' (261)

என்றும் துறந்தார்க்கு வேண்டும் இயல்புகளெல்லாம் இவர்க்கும் அமைந்து கிடத்தலின், இருதிறத்தார்க்கும் ஒத்த பெருமை களுளவா தலை,

''துறந்தாரிற் றூய்மை யுடையா ரிறந்தார்வாய்
இன்னுச் சொநோற் கிற்பார்'' (159)

''உண்ணுது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னுச்சொ னோற்பாரிற் பின்'' (160)

என்பவற்ருல் புலப்படுத்தினுர். இதனுலும் மாண்டார் தம் மன வியற்கை புலனும்.

மாணுர் மனக்குற்றந் தீர்ந்திலர். ஆதலின் அவரிடை இனக் கேண்மை நெகிழும். தம்மொழிந்தாரைப் பகைவர், அயலா ரென்று பகுத்து நிற்பார். மனம் மாணுதாகவே உணர்ச்சியும் இன்னுவாம். இதுபற்றிப் பிறிதினோய் தந்நோய்போல் போற்று தல் தப்பும். பிறர் தம்மினும் தாம் சிறந்திருந்தால் பெருமித மூர்ந்துவிடுவர். அவரையொப்ப உடுத்தல், உண்ணல், பூணல், ஊர்தல்முதலியவற்ருல் பிறர்விளங்குதலையும் நோனுர். செல்வத் தாற் பட்டுந்துகிலும் உடுத்தலையும் பாலோடு அடிசில்உண்டலை யுங் காணுமாயின் அவற்றைப்பொருது அவர்மாட்டு வடுவில்லை யாகவும் வடுவேற்றி வசையூட்டுவர் (1079). தாம் மேவன செய்தொழுகலான் நடுவின்மையிலராவர். அதுபற்றி, உடையார் வறியார்க்குக் கொடுக்கும் பொருள்களைப் பற்றிப் பொருமை செய்வர் (167).

மேலும், மனக்குற்றமடியாக மொழிக்குற்றம் முதலாயின வும் வருதலான் அவரது குறிபண்புகளாயின வெல்லாம் வரம்பி கந்து வடுவேறி வளரும். ஆதலின், பிறன்பழி கூறுதலை யுவப்பர் (186); ஒருவனைக் காணுதவழி இகழ்ந்துரையால் அழித்துச் சொல்லிக் கண்டவழி அவனோடு பொய்த்து நகுவர்

(182). இவ்வியல்பான், துன்னியார் குற்றமும் தூற்றும் மரபின ராய் (188), தம்மைவிட்டு அவர் நீங்குமாற்றுல் புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்வர்.

''பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்'' (187)

குடிமை, செல்வம், கல்விகளில் தமக்கு ஒக்கும் பெரியாரிடத் தும் அமைந்திரார். தாம் வறியராயவழியும் பிறராற் செய்தற் கரியவாய தஞ்செயல்களை விடாது அவை செய்யு நெறியால் கடைபோகச் செய்யும் வன்மை அப்பெரியார்க்கு உளதாதலை யும் ஓரார். தமக்கு வளமுண்டாயின் அதனையே வியந்து, பெருமைக்குக் காரணம் இல்வழியும் அதனையேற்றிக் கொண்டு, தருக்கின் முடிவின் கண்ணே நின்று, பிறர் பண்பை மறைத்துக் குற்றத்தையே தூற்றுநிற்பர்.

''அற்றம் மறைக்கும் பெருமை, சிறுமைதான்
குற்றமே கூறி விடும்'' (980)

இத்திறத்த மனநிலையுடையார் உலகியலைச் சிதைத்தலின் அவர துடல் நிலக்குப் பொறையாம் என்ப.

இம் மாணு மன வியற்கையினை வெளிப்படுத்த வல்லன வாவன நாணுமையும், நாடாமையும், நாரின்மையும், யாதொன் றும் பேணுமையுமாம் என்று வள்ளுவர் தொகுத்துக் காட்டினர்:

''நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில் (833)

சால்பு, பண்பு முதலிய பண்புகளானுயர்ந்தோர் தமக்கொவ் வாத கருமங்களில் நாணுதலுடையராய்ப் பழி முதலிய புகுதா மற் காத்தொழுகுங்கால் நாணும் ஞாலமும் தம்முள் மாருய வழி யந் நாணினையே கொள்வர், ஞாலம்பெற விரும்பார். ஆனல் மாணுதார் கண்டாருங் கேட்டாருமாகிய பிறர் நாணத் தக்க பழியைத் தாம் நாணுர். தம்மையாதொனுமொரு துன்பமுற்றக் கால் அதுவே பற்றுக்கோடாக விரைந்து தம்மைப் பிறர்க்கு விற்றற்கு உரியருமாவர் (1080)

மேலும், கருமங்களில் செய்வன தவிர்வனவற்றைப் பகுத் துணரார். நூலோர் கடிந்த வினைகளைத் தாமுங் கடிந்தொழியார். தீயவினைகளைச் செய்து அதனுல் பழியைத் தம்மேற் கொண்டே னும் செல்வம் பெறுவர். மனந்தீயார்க்குக் கருமத்தைக் கடை போகச் செய்யும் முறை தோன்றுது. அந்நிலைமைக்கண் அதனை மேற்கொள்ளின்பின் அக்கருமம் ஆகாவகையறிந்து உள்ளழிவர், தாமுங் கெடுவர்.

இந்தியால் தமிழ் அழியாதா?

(புலவர், வி. பொ. பழனிவேலன் பி. ஓ. எல்.)

தமிழ் நாடு கழகக்காலம் வரை சேர, சோழ, பாண்டியர்களால் தனியாட்சி நிகழ்த்தி வரப்பெற்றது. மூவரச மரபினரும் தனியரசு ஓச்சி வந்துள்ளனர். தமிழக முழுவதும் ஒருகால் சேரர் ஆட்சியிலும், மற்றொருகால் சோழராட்சியிலும், வேறொருகால் பாண்டியராட்சியிலும் இருந்து வந்தது. மூவரும் முத்தமிழ் வளர்க்கும் நற்றிற முடையவராகவே இருந்தனர். இவர்களுக்குக் கீழ் குறுநில மன்னர் பலரும் இருந்தனர். ஆயினும், தமிழகம் என்றுமே வேற்று நாட்டார் ஆட்சிக்குட்பட்டிருந்ததில்லை. ஆரிய இனத்தினர் வட நாட்டில் ஆட்சி செலுத்தியுளரேயல்லால் தென்றமிழ் நாட்டையெட்டிப்பிடிக்க எண்ணவில்லை. எண்ணினும் தென்னகமன்னர்கள் வன்மைமிக்கவர்களாக இருந்தமையின் நாட்டைக் கைப்பற்றியாள முயன்றதில்லை.

பாரதம் என்று பாராட்டப்பெற்ற நாட்டில் தமிழ்நாடு உட்பட்டிருந்ததில்லை, துரியோதனன், தருமன் போன்றோர் பாரத நாட்டை ஆண்ட ஞான்றும் கூடத் தமிழ்நாடு அவர்கட்குட்படவில்லை. அருச்சுனன் என்பவன் தென்னாட்டுக்குப் புனித நீராட்டுச் செலவு வந்தபோழ்து பாண்டி நாட்டை அல்லியென்ற மறமங்கை ஆட்சி செய்ததாகவும், அருச்சுனன் அவளை மணக்க விரும்பியதாகவும், அவள் வீறு கொண்டெழுந்து பாண்டவர்களுடன் போரிட்டு வெற்றி கொண்டதாகவும், வில்லிபுத்தூரார் பாரதம் கூறுகிறது.

பின்னர், கிருட்டினன் என்ற அவன் மாமன்மகன் துணைகொண்டு அல்லியை வலக்காரத்தால் வென்றதாகத் தெரிகின்

(முன்பக்கத் தொடர்ச்சி)

''பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்'' (836)

அன்றியும், பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தங் கருமமே கட்டளைக் கல் (505) லாதலின், மாணார்தம் இயல்பினை அவர் தாம் மேற்கொள்ளும் வினைபடு பாலால் அறிய வற்றாகும். இவர்க்கு நலத்தின்கண் நாரின்மை தோன்றும் (958). அது தோன்றவே, கொடாமையும் கடுஞ் சொல்லும் காணப்படும். வறுமையுற்ற வழி படிறு பொருந்தி அமைவிலவாகிய தொழில்களைச் செய்ய மனம் நாடும். கொல்லா நலத்ததாகிய நோன்பும், பிறர்தீமை சொல்லா நலத்ததாகிய சால்பும் இவர்மாட்டுக்காணப்படா. இவைபற்றி மாணுதார் மனவியற்கை நன்கு தேறப்படும்.

றது. பாரதக் கதை கற்பனையாயினும், கற்பனையிலும் தமிழகம் அயலார்க் குட்பட்டிருந்ததில்லை என்று தெரிகின்றதன்றோ!

மேலும், அயோத்தியிலிருந்து தசரதன், இராமன் முதலியோர் பேரரசாட்சி செய்த ஞான்றும் தமிழகம் தனியாட்சி நடத்தியதாகவே தெரிகிறது. ஏனெனின், இராமன் கானுறை வாழ்க்கையின் பொழுது அவன் மனைவி சீதையை இராவணன் எடுத்துச் சென்ற பிறகு இராம இலக்குவர் நடந்து சென்று யாண்டும் தேடியும் காணமுடியவில்லை. பிறகு தென்னகத்தில் கிட்கிந்தையை ஆண்ட குறுநில மன்னர்களாகிய வாலி, சுக்கிரீவன் இருவரில் சுக்கிரீவனது துணையைக் கொண்டு அவன் மறவர்களைத் தமிழகம் முழுவதுமனுப்பிச் சீதையைத் தேடச் செய்தனர் என்று கம்பராமாயணம் கூறுகிறது. சுக்கிரீவனின் அமைச்சனாகிய அநுமான் இலங்கை சென்று சீதை இராவணனால் பிண்டி மரக்காவில் சிறைவைக்கப் பெற்றிருப்பதைக் கண்டு வந்து சொன்னான். அதன் பிறகே இராமன் பன்னர் பலரை விடுத்துச் சீதையைத் தன்னிடம் அனுப்பிவிடும்படிக் கேட்டான். இராவணன் மறுக்கவே இராம–இராவணப் போர் நிகழ்ந்தது. இராவணன் தமிழ் நாட்டில் ஆட்சி புரிந்த அரசர்களுள் ஒருவனே. இலங்கை (ஈழம்) தமிழ் நாட்டின் ஒரு பகுதியே. எனவே, பாரத இராமாயண காலங்களிலும் தமிழ்நாடு தனித்தே இருந்துள்ளதெனத் தெரிகின்றது. அசோகன், சந்திரகுப்தன் முதலிய பேரரசர்கள் ஆண்ட ஞான்றும், அதன்பின் மகமதியர்களாகிய அக்பர், ஔரங்கசீப் முதலியோர் ஆண்ட காலத்தும் தமிழ்நாடு அவர்கள் ஆட்சிக்குட்பட்டு இயங்கவில்லை யென்பதும் அறியற்பாலது.

சேர சோழ பாண்டியராட்சி முற்றுப்பெற்றுத் தமிழகஆட்சி சிதைவுற்றதால் தென்னாட்டில் இருந்த சில சிற்றரசர்கள் வலுப்பெற்று ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றினர். இவர்களுள் பல்லவர், களப்பிரர், சாளுக்கியர், முதலியோர் குறிப்பிடத் தக்கவராவர். ஆங்கிலர் ஆட்சிக் காலத்தில்தான் தமிழ்நாடு ''பாரத''த்துடன் இணைந்து ஒரே ஆட்சிக்குட்பட்டிருந்தது. அதற்குமுன் எந்தப் பேரரசர் ஆட்சியிலும் தமிழ்நாடு தனியரசு செலுத்தியே வந்திருக்கிறதென்பது வரலாறு கண்ட உண்மை.

ஆரியர் தமிழ் நாட்டில் குடிபுகுந்த பிறகே தமிழில் பிறமொழிக் கலப்புத் தொடங்கியது. தமிழ் நாட்டில் ஆண்ட அரசர்கள் பலரும் ஆரியர் வயப்பட்டு அவர்களைத் தமக்கு அறிவுரை கூறுவோராக அமர்த்திக் கொண்டனர். வடமொழிப் 'புராணங்'களைப் படிக்கக் கேட்டும் சொல்லக் கேட்டும் மகிழ்ந்தனர். வடமொழி நூல்களை யெல்லாம் தமிழில் பெயர்க்கச் செய்தனர். வடவர் கருத்துகள் வரம்பின்றித் 'தமிழ் நாட்டிலும் தமிழர்

உள்ளங்களிலும் உலாவந்தன. வடமொழி தேவமொழி என்றும் மாந்தரால் பேசப்படாது என்றும் ஏமாற்றித் தமிழகத்தில் அம் மொழி முதன்மை பெறுமாறு செய்துவிட்டனர். வடமொழிச் சொற்கள் வரம்பின்றித் தமிழில் கலந்து கொண்டே வந்தன. அதனால் தமிழ் வளரவில்லை. மாறாகப் பிறமொழிகள் தோன்ற லாயின. தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய மொழிகள் முளைத்தன.

கன்னடமும் களி தெலுங்கும்
கவின் மலையாளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்,

என்று பேராசிரியர் சுந்தரனார் எழுதிய தமிழ் வாழ்த்தும் இதனை எடுத்துக் கூறும்.

இன்று நாம் பேசுந் தமிழில் எத்தனைப் பிறமொழிச் சொற்கள் உள்ளனவென்று எத்தனைப் பெயர் அறிவர்? அறிந்த சிலரும் பிற மொழி கலவாமல் பேசவியலாதவராயிருக்கின்றனர். வட மொழியால் பல தனித்தமிழ்ச் சொற்கள் வழக்கு ஒழிந்து போயின. இதனைப் பற்றிக் கவலுவோர் எவர்?

எ–டு:–

கஷ்டம் வந்தது துன்பம் தொலைந்தது
புஸ்தகம் புகுந்தது பொத்தகம் போயிற்று
வருஷம் முளைத்தது ஆண்டு அழிந்தது.
வயது ஏறிற்று அகவை இறங்கிற்று.
நஷ்டம் ஏற்பட்டது இழப்பு இகந்தது.
அதிர்ஷ்டம் தொடங்கிற்று ஆகூழ் நீங்கிற்று.

இங்ஙனம் பல்லாயிரம் வட சொற்கள் தமிழர் வாய்களில் புகுந்து நிலைத்துவிட்டன. விரியுமென்று விடுத்தாம்.

பின்னர் மகமதியர் ஆட்சியால் உருது, பாரசீக மொழிச் சொற்கள் பல தமிழில் கலந்தன.

எ. டு:

தாணா	வந்ததால்	காவல் நிலையம்	கழன்றது.
கஜானா	,,	கருவூலம்	கழிந்தது.
தபால்	,,	அஞ்சல்	அகன்றது.
நகல்	,,	படி (Copy)	பெயர்ந்தது.
நமுனா	,,	முறி	முரிந்தது.
பந்தோபஸ்து	,,	காப்பு	கையற்றது.
வியாஜ்யம்	,,	வழக்கு	வழக்கற்றது.
வக்கீல்	,,	மன்றுடி	மறைந்தார்.

இவ்வாறு மகமதியர் ஆட்சியால் அவர்தம் மொழிச் சொற்கள் பல ஆட்சிக்கு வந்து தமிழ்ச் சொற்களைத் தட்டிக் கழித்தன. இன்னும் பல சொற்கள் இடமஞ்சி விடப்பட்டன.

ஆங்கிலர் ஆட்சி இந்த நாட்டில் ஏற்பட்டதும் ஆங்கிலமே முதன்மொழியாயிற்று. தமிழ் தலைதடுமாறி நின்றது. பல ஆங்கிலச் சொற்கள் தமிழில் கலந்தன. அதன்காரணமாகப் பல தமிழ்ச் சொற்கள் வழக்கற்றன.

எ-டு:-

Office	நுழைந்து	அலுவலகத்தை	நூறிற்று.
Sir	புகுந்து	ஐயாவை	அகற்றியது..
Idea	வந்து	கருத்தைக்	கவர்ந்தது
Pen	,,	தூவியைத்	தொலைத்தது.
Time	,,	காலத்தைப்	போக்கிற்று.
Station	,,	நிலையத்தை	நீக்கிற்று.
Rail	,,	தண்டவாளத்தைத்	தகர்த்தது.
Train	,,	தொடர்வண்டியைப்	புதைத்தது.
Teacher	,,	ஆசிரியரை	அகற்றியது.
Thanks	,,	நன்றியை	நகர்த்தியது.

இவ்வகையில் ஆயிரக்கணக்கான சொற்களை அடுக்கிக் கூறிக் கொண்டே போகலாம். இடம் இன்மையான் இத்துடன் விடுத்தாம்.

எனவே, பல அயன்மொழிச் சொற்கள் வந்து தமிழ் நாட்டில் வழங்கத் தொடங்கியமையால் புதுமை வேட்கைமிக்கவரும், மொழிப் பற்றற்றோரும், அறியாதவரும் தங்கள் பேச்சிலும் எழுத்திலும் அவற்றைக் கலப்பதைப் பெருமையென்று கருதி அம்மொழிக் கொலைப்பணியை மேற்கொண்டனர். தமிழ்ச் செய்தி யிதழ்களும் அவற்றையே விரும்பி வெளியிட்டன. தமிழ்ச் சொற்கள் யாவும் மறைந்து போயின. ஆதலால், சில தமிழ்ப் பகைவர் அதற்கென்ன தமிழ்ச் சொல்? இதற்கென்ன தமிழ்ச் சொல் என்று கேட்டுத் தமிழ்ப் புலமை யற்றோரைத் திகைக்க வைத்து விடுகின்றனர். ஆகவே, அவர் தமது இயலாமையை வெளிக்குக் காட்டாது அவர்களுக்கு ஒத்து ஊதுகின்றனர்.

பண்டுதொட்டுத் தமிழ் மூவேந்தரும் பிறரும் ஆட்சிபுரிந்த பொழுது இருந்த ஆட்சி மொழிச் சொற்கள் எங்கே போயின? பேசாமல், எழுதாமல் எப்படி அரசாண்டனர்? இப்போழ்து ஆங்கிலச் சொற்களைக் கொண்டு தமிழில் ஆள ஆட்சிச்சொல் அகரமுதலி இயற்ற வேண்டிய இடர்ப்பாடு எதனால் ஏற்பட்டது? தமிழ்நாடு பல தொழிலாளர் ஆட்சிக்கும் ஆட்பட்டு நின்றதால்

உஞ வகை:

வாற் கோதுமை.

அரிசி, சோளம், கோதுமை, ரை, ஓட்சு முதலிய உணுப் பொருள்களைப் போலவே 'பார்லி' என்று கூறப்பெறும் வாற் கோதுமையும் மாந்தர்க்கும் கால்நடைகளுக்கும் ஏற்ற நல்ல உணவுப் பொருள். இக் கூல (தானியப்) ப் பொருள் மிகப் பழமையானது. கி. பி. 23–79-இல் வாழ்ந்த பிளினி என்னும் உரோமானிய வரலாற்ருசிரியர், மாந்தனின் மிகப் பழமையான உணவுப் பொருள்களுள் இவ் வாற் கோதுமையும் ஒன்று என்று குறிக்கின்ருர். கோதுமையை அடையாகச் சுடத்தெரிந்திருக்கும் முன்பே வாற் கோதுமை அடைசெய்ய மேலைநாட்டு மக்கள் அறிந்திருந்தனர் எனலாம். ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா முதலிய பெருநிலப் பரப்புகளில் உள்ள மக்கள் எல்லாம் முற் காலத்தில் வாற் கோதுமையை அறிந்திருந்தனர். சுவிட்சர் லாந்தில் வாழ்ந்த கற்கால மக்களுக்குப் 'பார்லி' உணவாகப் பயன்பட்டது. பழைய எகிப்திய மக்களுக்கும் இது சிறந்ததோர் உணவு. கிறித்துவ மறைநூலான பழைய ஏற்பாட்டில் பாலத்

(முன்பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மொழியைக் கைவிட்டு ஆட்சியாளர்களது மொழிகளையே ஆட்சிமொழிகளாகக் கொண்டதே உண்மைக் கரணியமாகும்.

வடசொல்–தமிழ் அகர வரிசையும், ஆட்சிச்சொல் அகர வரிசையும் எழுதி வெளியிட வேண்டிய இன்றியமையாமை ஏன் ஏற்பட்டது? நடுநிலைக் கண்ணேட்டத்துடன் காண்பார்க்கு உண்மை தெற்றெனத் தெரியாமற் போகாது. இந்தி வந்தால் தமிழ் அழியாது என்பாரும் அவர்கட்கு வால்பிடிப்பாரும் யாம் மேற்கூறிய உண்மைகளையும், எடுத்துக்காட்டுகளையும் நன்கு ஆராய்ந்து தக்க முடிவுக்கு வருவார்களாக. ஆட்சி தங்களிடம் இருக்கிறதென்று நினைத்தவற்றை யெல்லாம் நிறைவேற்ற விழைவது நேர்மையாகாது. மக்களுக்காக அரசாட்சியே யன்றி அரசாட்சிக்காக மக்களல்லர். தம் கட்சி பெரும்பான்மைக் கட்சி என்பதற்காக மனம் போனவாறு பேசுவதும், எழுதுவதும், சட்ட மியற்றி அடக்கியாள நினைப்பதும் அறிவுடைமையாகாது. எல்லா மக்களும் இனிது வாழ வேண்டுமென்பதே அரசின் கொள்கையாயின் எந்தத் தீங்கும் நேராது; மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வர். தமிழ் நாட்டு அரசும் நடுவணரசும் நல்ல வண்ணஞ் சூழ்ந்து எதனையும் தக்கவாறு செய்யுமாக! மக்களைத் தவருன வழிகளில் செலுத்தத்தக்க சட்டங்கள் செய்வதைக் கைவிடுமாக!

*

தீன விளைவுகளில் இதுவும் ஒன்றாகக் குறிக்கப் பெற்றுளது. உரோமானியப் படைமறவர்களுக்கு இது மிகச் சிறந்த உண வாகக் கொடுக்கப்பட்டு வந்ததாம். இதைச் சோருகவும், அடை யாகவும், கூழாகவும் செய்யக் கற்றிருந்தனர் அக்கால மக்கள்.

'பார்லி' வெண்மை, சிவப்பு, பழுப்பு, கறுப்பு, ஊதா ஆகிய வண்ணங்களில் விளைகின்றது. இஃது ஒரு பருவப் பயிர். விளைந்த பயிரில் உள்ள கதிரைக் கொய்ததும் அதன் அடிக் கட்டையிலிருந்தே புதுத் தாள்கள் வளரும். இப் பயிர் மூன்றடிக்கும் குறைவாகவே வளரும். இது வளர்ச்சியிலும் தோற்றத்திலும், பூவிலும், கதிரிலும் கோதுமைப் பயிரையே ஒத்திருக்கும். 'பார்லி'யிலே உள்ள ஒவ்வொரு கதிரிலும் உமிகள் நெல்லுமிபோல் முரப்பாக இருக்கும். இதன் உமிப் பகுதியின் முனை நீண்டு வால்போல் வளர்ந்திருக்கும். இதன் பொருட்டே கோதுமைபோன்ற இக் கூலத்திற்கு வாற்கோதுமை என்று பெயரிடப் பெற்றது. இவ்வால் சொர சொரப்பாகவும் அரும்புகள் உடையதாகவும் இருக்கும். இக்கால் மாந்தன் கையாண்டுள்ள விதை மாற்றுப் புதுத் தோற்றத்தால் இச் சொர சொரப்பான வாற்பகுதியும், முள் போன்ற உமிப் பகுதியும் மழ மழப்பாகத் தோற்றுவிக்கப் பெறுகின்றன. இதன் பூக்கள் சிறிது நேரமே மலர்ந்திருக்கும்.

இதில் புரதப் பொருள் 11·5, சருக்கரைப் பொருள் 74·00 கொழுப்பு 1·3., முதனிலை (தாது) ப் பொருள் 1·5 என்ற விழுக் காட்டில் இருக்கின்றன. இந்தியாவிலும் திபெத்திலும் 14000 அடி உயரத்திலும், வடக்கே அலாசுக்காவில் 65 பாகை வட குறுக்குக் கோட்டை அடுத்த பகுதியிலும், உருசியாவில் ஆர்க் டிக் பெருங் கடற் கரையில் வெண் கடல் அருகிலும் வாற் கோதுமை விளைகின்றது. இங்கு குளிர் காலத்திலும், வேனில் காலத்திலும் இப்பயிர் விளைகின்றது.

பதினாரும் நூற்றாண்டு வரையிலும் வாற் கோதுமையையே மக்கள் அடை சுடப் பயன்படுத்தினர். இதன் அடை கம்பு, கேழ்வரகு அடைபோலவே வரட்சியாக இருக்கும் கோதுமை மாவுக்குப் பிசுபிசுப்பைத் தரும் 'குளூட்டென்' (Gluten) என் னும் பொருள் வாற் கோதுமையில் குறைவாக இருப்பதால், இதன் அடைகள் பொது பொது வென்றிருப்பதில்லை. இதை இடித்து உமிபோக்கித் தீட்டி அரிசியாகச்செய்து கஞ்சி காய்ச்சி ஞல் மிகவும் சுவையாக இருக்கும். நோயாளிகட்கும் குழந்தை கட்கும் இக்கஞ்சி மிகநல்லது. இஃது ஒரு மருந்துரை (பத்திய)ப் பொருள். இதிலிருந்துதான் பீர், விசுக்கி என்னும் வெறிநீர்கள் செய்யப் பெறுகின்றன.

*

சீன் என்ரி

காசிமிர் ’பேபர்

(பூச்சியியல் அறிஞர்).

“நீர் இறைவனை நம்புகின்றீரா?”

“இல்லை; நான் இறைவனை நம்ப வில்லை; **கண்ணால் காண்கின்றேன்** அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் அவரை நொடிதோறும் கண்டு வியக்கின்றேன்”

இவ்விடையினைக் கூறியவர் யாரோ கீழைநாட்டு மெய்யுணர்வாளர் அல்லர்; பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஐரோப்பிய இயற்கையியல் அறிஞரான ஃபேபர்! இயற்கையின் படைப்பில் எங்கும் நிறைந்திருக்கும் எண்ணிறந்த சிற்றுயிர்களைப் பற்றியே அவர் அவ்வாறு கூறினார்.

விலங்கும் புள்ளும், பூச்சியும் புழுவும் மாந்தரின் நன்மைக்காகவே படைக்கப் பெற்றன என்று தருக்கி, அவற்றைப் பிடித்து முரட்டுத்தனமாகக் கீறியும் கிழித்தும் வெட்டியும் கொன்றும் அவற்றின் உடலில் ஆய்வு நிகழ்த்தி அதுவே அறிவென்று ஐரோப்பிய அறிவியல் உலகம் கருதிக் கொண்டிருந்த காலம் அது கலையுணர்வற்ற வறட்டு அறிவியல் வல்லுநர்கள் உயிர்வாழ்வின் விழுமிய அழகினை உணராதாராய்க் கொடுமைக்கும் கொலைக்கும் ஆராய்ச்சி என்று பெயர் கூறிக் கொண்டிருந்தனர். அவர்கள் நடுவில் தான் மண்ணின் மைந்தராய், இயற்கைத் தெய்வத்தின் மறைபொருள் உணர்த்தும் பன்னராய்த் தோன்றினார் ஃபேபர் இயற்கைப் படைப்புகள் அனைத்தும் சிறப்பு மிக்கனவே; அவற்றுள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி உணர்வு, தனித் தனி வாழ்க்கை உண்டு; அவற்றின் இயக்கம் அனைத்தும் அழகே! இயன்றவரை ஊறு நோகாமல் அவற்றை இயற்கைச் சூழலிலேயே கண்டு அவற்றின் வியத்தகு வாழ்வியக்கங்களை அறிந்து போற்றுதலே உண்மை இயற்கையறிவாகும் என்று தம் வாழ்வியல் உலகுக் குணர்த்தியவர்

ஃபேபர். இயற்கை நூல், –சிறப்பாகப் பூச்சி நூல் இன்று சிறக்க வளர்ந்து பெருகியிருப்பதற்கு ஃபேபரின் ஆராய்ச்சிகளே அடிப்படையாகும்.

எத்துறையிலும் உண்மையாளர்கள் அத்துறை சார்ந்த பொது மாந்தரினும் வேறு பட்டவராகவே இருந்திருக்கின்றனர். உணர்வும் அறிவும் ஒருங்கு செம்மை யுற்ற அவர்களை வழக்கம் பழக்கம் எனும் குருட்டுப் பேய்கள் பற்றுவதில்லை. உலகியல் நன்மைகள் எனும் பொன் விலங்கை அவர் தமக்குப் பூட்டிக் கொள்ளார். அரசினர் பாராட்டுக்கு அவர் என்றும் அடிமைப் படார்; புல்லியர் புழுங்கியோர் தூற்றுதலையும் அவர் பொருட் படுத்தார். புகழ் அவர்களை மயக்குவதில்லை; எதிர்ப்பச்சம் என்றும் அவர்களை அணுகுவதில்லை. உண்மையே நோக்கமாய் உள்ளுணர்வே சட்டமாய், வினையே உயிராய், நெறி திறம்பாமல், குறி விலங்காமல், பீடு நடை கொள்ளும் பெற்றியர் அவர்கள். நுணுகிப் பரந் தாழ்ந்து அகன்று செம்மாந்துயர்ந்த அவர்தம் பேருள்ளங்கள் பொதுவியல் மாந்தரின் இடுகிய பார்வைக்கு என்றும் எட்டாதனவே. இத்தகையோர் ‘பைத்தியங்கள்’ என்று எள்ளப் படுவர்; பேதையர் என்று இழிக்கப் படுவர். செருக்குடையார் என்றும் தூற்றப்படுவர். எனினும் பயனுள்ளவராக வாழ்ந்து உலகை நிலை நிறுத்தி உண்மைப் புகழ் எய்துவோர் அவராகவே இருக்கின்றனர். சிப்பிகளின் நடுவில் முத்தைப் போலும், கறையான்களின் கூட்டத்தில் ஈசல் போலும் திகழ்வர் அவர். அத்தகைய உண்மையாளருள் ஒருவரே சீன் என்ரி காசிமிர் ஃபேபர் ஆவர்.

பிரான்சு நாட்டின் தென் பகுதியில் நடு மாநிலத்தில் ஓர் ஏழை உழவர் குடும்பத்தில் கி. பி 1823–ஆம் ஆண்டில் தோன்றினார் ஃபேபர். வறுமையில் உழன்ற பெற்றோர் தம் உணவுக் கவலையைத் தீர்க்க வியலாமல் பிறந்த நான்காம் ஆண்டிலேயே சிறுவனை அவனின் பாட்டன் வீட்டுக் கனுப்பி விட்டனர். பாட்டனும் அவர் குடும்பத்தினரும் மண்ணை நம்பி வாழும் எளிய உழவர்கள். கரவற்ற சிற்றூர் மக்கள். குழந்தை வளர்க்கும் ‘நாகரிக’ மெல்லாம் அறியாதவர்கள். சிறுவனைத் தன் விருப்பப்படி திரிய விட்டுவிட்டனர். சிறுவன் தோப்பிலும் பொழிலிலும் கண்டபடி திரிந்தான். பன்னிறப் புட்களையும் வண்டுகளையும் கண்டு கண்டு வியப்புற்றான். வண்ணப் பூச்சிகளின் அழகிய சிறகுகளில் நெஞ்சைப் பறிகொடுத்தான். தும்பிகளின் முரல் வொலியும், சுவர்க் கோழிகளின் இடையறு இமிரலும், வெட்டுக் கிளிகளின் ‘சுர்’ என்னும் இசையும் அவன் செவிக்கு விருந்தாயின. ஓடும் அணிலும் ஊரும் நத்தையும் அவனுக்குப் பேசாத தோழராயின. பத்தாம் அகவை வரையும் இவ்வாறு பெற்ற இயற்கைத் தோய்வு, பாட்டனார் வீடு நீங்கிப்

பள்ளி சென்ற பின்பும் நிற்கவில்லை. மாருக மிகுதியாயிற்று. எளிய தோற்றத்துடன் கனவுலகில் திரிபவன் போற் காட்சி யளித்த ஃபேபரைப் பள்ளிச் சிறுவர்கள் எள்ளி நகையாடினர்; தொட்டும், இழுத்தும், அடித்தும் விளையாடினர். ஃபேபரும் பள்ளிக்குச் சரியாகச் செல்லாமல், வயல் வெளிகளில் திரிந்து பறவைக் கூடுகளையும் முட்டைகளையும் சேர்த்துக் கொண்டும் புழுப் பூச்சிகளின் வாழ்க்கையை உற்று நோக்கிக் கொண்டும் காலம் போக்கினன். ''என்ன, இச் சிறுவன் பித்துக் கொள்ளி யாக விருக்கின்ருனே; படிக்க வேண்டிய நாளில் இப்படி அலைந்து திரிகின்ருனே!''என்று உற்ருர்பழித்தனர். பெற்ரோரும் தம் மகனைத் திருத்த முயன்றும் இயலாமல் அவனின் 'முட்டாள் தன'த்துக்கும், ''சோம்பேறித் தன''த்துக்கும் வருந்திக் கிடந்த னர். உழவுத் தொழிலில் தோல்வி கண்ட தந்தை வேலை தேடி ஊர் ஊராகத் திரிந்ததும் உணவு விடுதிகளில் வாழ்ந்ததும், ஃபேபரின் பள்ளி வாழ்க்கைக்குக் கூற்றமாயின.

துன்ப நிலையைத் தாங்கொணுத ஃபேபர் பதினேழாம் அகவையில் வீட்டை விட்டோடிஞர். கையில் காசின்றிச் சாலை களில் சுற்றித் திரிந்தார். வறுமையின் நடுவிலும் உள்ளம் பறவைபோல் விடுதலைப் பண் பாடியது. எப்பொழுதாவது சிறு கூலி வேலை கிடைக்கும்; அப்பொழுது சிறிது காசும், அதன்வழி உணவும் கிடைக்கும். ஒருமுறை கையிலிருந்த காசைக்கொண்டு பாட்டு நூல் ஒன்றை வாங்கிவிட்டார். உணவுக்கோ காசில்லை. ஆயினும் அறிவுப் பசியுடையார் வயிற்றுப் பசியை மதியார் அல்லரோ? அப்பாடல்களைப் பாடிப் பாடியே சில நாட்கள் தம் வயிற்றுக் கவலையை மறந்திருந்தாராம் அவர்!

அறிவு வேட்கையுடையார்க்கு எக்கல்வியும் எளிதே யாம். 'ஆவிக்னன்'எனும் ஊர் வந்தடைந்த ஃபேபர் ஆசிரியத்தொழி லுக்குரிய தேர்வை எழுதி முதல்வராகத் தேறிஞர் பத்தொன் பதாம் ஆண்டில் கல்லூரிப் பட்டம் பெற்று, கார்பென்ட்ராசு பள்ளியில் ஆசிரியர் ஆனர். தோற்றத்தால் பலர் தம் பகடிக்கும் ஆளாகிய இவ்வாசிரியர் சிறந்த முறையில் கல்வி புகட்டும் ஆற்றல் பெற்றிருத்தலை மாணவர் உணர்ந்து அவர்பால் மதிப்பு வைத்தனர். சுவையற்ற வறட்டுப்பாடங்கள் ஃபேபரின் கையாள் தலால் மாணவரைக் கவர்வனவாயின. அப்பொழுதும் இயற்கைத் தோய்வினை ஃபேபர் விட்டுவிட வில்லை. அவற் ருேடு, இயற்கை அறிவு நூற்களையும் வாங்கிப் படிக்க விழைந் தார். குறைந்த வருவாய் அதற்குப் போதாதிருக்கவே, தனிப் பாடங்கள் நடத்தவும் தொடங்கிஞர். முன்பு தாம் கற்றிராத கலவை நூல், பூத நூல், இயற்கணக்கு, கோட்டுக்கணக்கு இவை யெல்லாவற்றையும் தம் நுண்ணறிவின் திறத்தால் மிகக் குறைந்த நாட்களில் கற்றுக்கொண்டு, அவற்றை மாணவர்க்குச் சுவைபடக் கற்பிக்கவும் வல்லவராஞர்.

இருபத்தொன்றும் அகவையில் திருமணம் புரிந்து கொண்டார். குறைந்த வருவாய் நடுவிலும் மயக்குறு மக்களைப்பெற்று மகிழத் துடித்தது அவர்தம் இயற்கையுள்ளம். ஆயினும் பிறந்த மகவு இறந்தது. ஊதியத்திலும் நிறைவில்லை. வாட்டும் வறுமை தம் ஆய்வுப் பணிகட்குத் தடையாக விருத்தலை உணர்ந்த ஃபேபர் மேல்வருவாய் கருதி மான்டி பெவியர் பல்கலைக் கழகத்தில் பட்டத் தேர்வெழுதி வெற்றிகண்டார். ஆயினும் பொருள் வலியும் துணைவலியும் அற்ற இவர்க்கு உயர்ந்த பேராசிரியப் பணியை அளிக்க யாரும் முன்வந்திலர். தம்மினும் அறிவில் தாழ்ந்த பலர் பேராசிரியர் இடங்களைப் பற்றிக்கொண்டு தம்மை ஏற இறங்க நோக்குதலைக் கண்டு அவர் உளம் கொதித்தார். அத்தகையார் தொடர்புகளை அவர் மனம் வெறுத்தொதுக்கியது. மீண்டும் பழைய பள்ளிக்கே திரும்பினார். அங்கும் அவர்க்கு நிறைவில்லை பொறாமை உற்ற உடனாசிரியர்கள், பூச்சிகளை ஆய்ந்து கொண்டிருந்த இவர்க்குப் 'பூச்சி' என்றே பெயரிட்டுப் பகடி செய்தனர். ஃபேபர் அதனைப் பொருட்படுத்த வில்லை.

இவ்வாறிருக்கையில் 'கார்சிகா' திட்டில் கல்லூரி ஆசிரியர் வேலை கிடைத்தது. இஃதவர்தம் ஆகூழ் என்றே கூறல் வேண்டும். நாற்புறமும் அலைவீசி எறியும் ஆழி; நடுவண் நிவந்தோங்கிய பனி மலைகள்; கண்ணைப் பறிக்கும் வண்ண மலர்க் காடுகள்; கடலோரம் இப்பிகள், சங்கினங்கள்; மலைச் சாரலில் புட்கள், வண்டுகள்; மண்ணில் புழு பூச்சிகள். ஃபேபரின் உள்ளம் நாடிய இனிய இயற்கைச் சூழல் அது. சிற்றுயிர்களின் வாழ்க்கையை நேரிற் கண்டறிய மிகச் சிறந்த வாய்ப்புக் கிட்டியது. அங்கிருக்கையில்தான் ஒரு மரவியல் அறிஞரும் மாவியல் பேராசிரியரும் ஃபேபரின் நண்பராயினர். முறையாகத் தெரிந்து கொள்ள வேண்டிய சில அடிப்படைகளை அவர்கள்பால் ஃபேபர் அறிந்துகொண்டார். தூலூசுப் பல்கலைக் கழகத்தில் உயிர் நூல் தேறிச் சிறப்பிடம் பெற்றார். அவர்தம் ஆற்றலைக் கண்டு பேராசிரியர்கள் வியந்தனரேனும், பொறாமையாலும் புறக்கணிப்பாலும் மீண்டும் அவரை ஆவிக்னன் உயர் நிலைப் பள்ளிக்கே அனுப்பினர்; ஊதியமும் குறைந்தது. பெரிய இடத்தார் தம் புன்மைதான் என்னே!

வயிற்றுப் பிழைப்பாக அறிவியல் துறையை மேற்கொண்டு "வல்லுநர்" என்று பெயர் பெற்றவர் எல்லாம் உண்மையின் உள்ளுயிர்ப்பினை அறிந்தவர் அல்லர். உண்மையினை (Truth) எட்ட வியலாமை ஒருபுறம் இருக்க, தம்துறை சார்ந்த மெய்ம்மைகளையாவது (Facts) சரியாக அறிந்திருந்தனரா எனில் அதுவும் இல்லை. அக்கால வல்லுநர் ஒருவரின் நூலைப் படித்த ஃபேபர் இக் குறைபாடுகளை நன்குணர்ந்தார். ஆய்வுத் தெளிவில்லாதார் தவறான செய்திகளைப் பரப்பிக்கொண்டிருத்தலைக் கண்டு துணுக்

குற்றர். எடுத்துக் காட்டாக ஒன்று கூறலாம். குளவிகள் வண்டினைத்தாக்கிக் கொன்று அவற்றைக் காட்டுப்புழுவுக் கிரை யாக்குகின்றன என்றே அக்கால நூல் ஒன்று கூறியது. ஆனால் குளவிகளின் நண்பரான ஃபேபர் அது பிழைஎன உணர்ந்தார். குளவி வண்டினை உடனே கொன்றுவிடுவதில்லை என்பதையும், அதனை உயிர்நிலையான இடங்களில் கொட்டிக் கொட்டி உணர் விழக்கச் செய்து, மயக்க நிலையிலேயே அதனைக் காட்டிற் கிழுத்துச் சென்று, தன் காட்டுப்புழுவுக்கு உயிருள்ள உணவாக அதனைச் சேமித்து வைத்துச் சிறிது சிறிதாக அளித்து வருகின் றது என்பதையும் அவர் தெள்ளத் தெளியக் கண்டறிந்திருந் தார் அப்பிழைச் செய்தி கண்ட அன்றே அவர் உள்ளத்தில் தெளிவும் துணிவும் பிறந்தன எனலாம். அவ் 'வல்லுநர்' தம் அறிவினும் தம் இயற்கையறிவு பன்மடங்கு மேம்பட்ட தென்பதையும், அரசினர்பால் மதிப்புப் பெற்றிருக்கும் அப் போலி யறிவினரை யெல்லாம் எதிர்த்துநின்று பணியாற்றி உண்மை இயற்கை அறிவை உலகுக்களித்தல் இன்றியமை யாததென்றும் உணர்ந்தார். அன்றுமுதல் அவர்தம் உள்ளுணர் வின் குரலுக்கே செவிசாய்த்தல் அன்றி வேறு எப்புற நிலைக்கும் பணியாராயினர்.

ஏறத்தாழ நாற்பது ஆண்டுக்காலம் இச்சிற்றூரில் ஆராய்ச்சியிலேயே கழிந்தது. இன்று மிக எளிதாக ஏட்டிலே நாம் பெறும் செய்திகளிற் பெரும்பாலானவை, வெயிலுக்கும் குளிருக்கும் வருந்தாமல் இரவுபகல் பாராமல், பசிக்கும் நோய்க் கும் பணியாமல் இடைவிடாமல் ஃபேபர் நிகழ்த்திய நுண்ணிய ஆராய்வுகளின் பயனே யாகும். அஃறிணை உயிர்கட்கு இயல் புணர்வு (Instinct) என்பதே இல்லை என்று அறிவியற் பேராசிரி யர்கள் மறுத்துவந்த காலம் அது அதனைப் பொய்ப்பித்து இயல் புணர்வு பற்றிய அனைத்துண்மைகளையும் நிலைநாட்டியவர் ஃபேபரே. எண்ணெய் சுரக்கும் வண்டுகளைப்பற்றியும், தேனீக் களைப் பற்றியும் எகிப்தியரின் புனித வண்டைப்பற்றியும், இன் னும் பல புழுப் பூச்சிகளின் வாழ்க்கை வரலாறுகளையும் அவர் தம் ஆய்வுக் கட்டுரையில் விளக்கமாக எழுதி வெளியிட்டார். ஐரோப்பா முழுவதும் உள்ள அறிவியலார்பால் ஃபேபரின் கட்டுரை பெருங் கிளர்ச்சியை உண்டாக்கியது. தாம் நெடுநாள் போற்றிவந்த பல கொள்கைகள் முறியடிக்கப் படு கின்றனவே என்று அஞ்சியார் பலர் அவரை எதிர்த்தனர்; பொருமையால் புழுங்கியார் பழி தூற்றினர். வெறும் பள்ளி யாசிரியர் ஒருவர் இவ்வளவு அறிவியல் செய்திகளை வெளி யிட்டுப் புகழ் பெறுவதா என்று வெயர்த்தனர் சிலர். சமயத்தின் புற வினைப்பாடுகளில் இவர் நாட்டம் செலுத்தாதிருப்பதைக் கண்ட சமயக் கணக்கரும் இவருக்குத் தொல்லை விளைக்கலாயி னர். ஃபேபர் பூச்சி நூல் அறிவுபற்றி மாணவர்க்கு வகுப்புகள்

நடத்திக் கொண்டிருந்தார். அவ்வகுப்புகளில் எவ்வகை வேறு பாடும் காட்டாமல் ஆடவரோடு மகளிரையும் சேர்த்துக் கொண் டிருந்தார். இதனை ஒரு பிடிப்பாகப் பயன்படுத்தி, ஃபேபர் இருபாலரையும் ஒன்றாக வைத்து ஒழுக்கக் கேட்டுக்குக் காரண மாகின்றார் என்று பொய் பரப்பினர் சமயக் கணக்கர்கள். இதனை மெய்யென்று நம்பிப் பலர் இவரைப் புறக்கணிக்கலாயினர். இவர் வேலையும் போயிற்று. குடியிருந்த வீட்டிலிருந்து வெளி யேறுமாறு வீட்டுக்காரர் கூறலாயினர். எதனையும் பொருட் படுத்தாமல் ஃபேபர் இடர்ப்பாடுகளின் நடுவிலும் தம் ஆய்வு முடிவுகளை நூற்களாக வெளியிடுவதில் முனைந்தார். மயில் வண்ணப் பூச்சி இரவில் தானிருக்குமிடத்தை ஆண் பூச்சிகட்கு அறிவிக்க என்ன வழியைக் கையாள்கின்றது என்பதையும், பெரிய நத்தையினை மின்மினிப்பூச்சி எவ்வாறு மயக்க மருந்து உட்செலுத்திக் கொல்கின்றது என்பதையும் கருந் தேளின் காதல் நாட்டியத்தையும் எறும்புகளின் குமுக வாழ்க்கை பற்றிய வியப்பூட்டும் செய்திகளையும் இவர்தம் நூற்கள் கூறின. நூற் களில் வெறும் அறிவுமட்டும் இல்லை கலையுணர்வும் அருளுணர் வும் பொங்கிவழிந்தன; இயற்கை அழகு சிரித்தது. நகைச்சுவை விரவிக் கிடந்தது. அந்நூற்கள் எளிய தாளில் சிறிய எழுத்தில் படவிளக்கமும் விளம்பரமும் இன்றி எளிய முறையில் அச்சிடப் பெற்று வெளிவந்தன. சரியாக விற்பனையும் ஆகவில்லை. விற்று வந்த ஊதியமும் மிகக்குறைவு. ஒழுங்காகவும் கிடைக்கவில்லை. இலக்கிய ஆய்வாளர்களும் இந்நூற்களைப் புறக்கணித்தனர். வறட்டுத்தன்மையும் கடுமையும் நிறைந்திருப்பது தான் உயர்ந்த அறிவியல் நூலுக்கு அடையாளம் என்று கருதிய அறிவியலா ளர்கள் சுவை பொதுளப் பொதுள, யாருக்கும் எளிதில் விளங் கும்படி எழுதப்பட்ட இந்நூற்களை அறிவியல் நூற்கள் என்றே ஏற்க மறுத்தனர். ஃபேபர் அவர்களின் அறியாமையை நன்கு அறிந்திருந்தமையால் எதிர்த்து நின்று அவர்களைப் பகடி செய்தார்.

‘‘பூச்சிகளே, கொட்டும் குளவிகளே, தும்பிகளே, நீவிரெலாம் வாருங்கள்! என்சார்பில் வழக்காடுங்கள். நான் சொல்வதே உண்மை எனச் சான்று பகருங்கள்! நான் உங் களின் நெருங்கிய தோழனாக விருந்து எவ்வளவு ஆர்வத்துட னும் பொறுமையுடனும் உங்கள் இயக்கங்களை உற்றுநோக்கி அவற்றை எடுத்துச் சொல்கின்றேன் என்பதையெல்லாம் அவர் கட்கு எடுத்துக் கூறுங்கள்! நீங்கள் கூறியும் அவர்கள் உணரா விட்டால், போகட்டும், நானே கூறுவேன் ‘‘ஏ போலி அறிவிய லாளர்களே, நீங்கள் உயிர்களைக் கொன்று கிழித்துப் பார்க்கின் றீர்கள். நான் அவற்றினை உயிருடன் கண்டு ஆய்கின்றேன், நீங்கள் பூச்சிகட்குப் பெயரிட்டு வகைப்படுத்தி விட்டால் போதும் என்று நினைக்கின்றீர்கள். நானோ அவற்றின் பிறப்பு

முதல் இறப்புவரை உள்ள வாழ்க்கையைக் காட்டுகின்றேன். நீங்கள் உங்கள் வெறிபிடித்த அழுக்குக் கையால் அவற்றை அணுகி அவற்றை அச்சப் பொருளாக்குகின்றீர்கள். நானோ அருளுணர்வுடன் அவற்றை நெருங்கி அவை அன்புக்குரியவை என்பதை வெளிப்படுத்துகின்றேன். நீங்கள் சாவை. ஆய்கின்றீர்கள்; நான் வாழ்வை ஆய்கின்றேன்!'' இவ்வாறு ஃபேபர் எழுதியுள்ளார்.

எதிர்ப்புகள், புறக்கணிப்புகளின் நடுவிலும் இவர்தம் உண்மைச் சிறப்பினை ஆங்காங்கு ஒருசில உண்மையாளர்கள் உணரத் தொடங்கினர். அவருள் இங்கிலாந்தைச் சேர்ந்த சார்லசு தார்வின் ஒருவர். ஃபேபரின் ஆய்வு கண்டு அவர் இறும்பூ தெய்தினர். 'பேரறிவாளன்' என்று ஃபேபரைப் பாராட்டினர். தேனீக்களின் குடும்பவுணர்வுபற்றித் தாம் மேற்கொள்ளவிருக்கும் ஆய்வுக்குத் துணையாகுமாறும் ஃபேபரை வேண்டிக் கொண்டார். சான் தூவர்த்து மில் எனும் ஆங்கில அறிஞரும் ஃபேபரின் நண்பரானர். இச் சிறு பள்ளியாசிரியரின் பெயர் அரசினர்க்கும் எட்டியது. விக்தர் தியூரி என்பார் அதுபோழ்து கல்வியமைச்சராக இருந்தார். பிரான்சின் கல்வி முறையில் புரட்சிசெய்ய விரும்பிய அவர், சமயக்கணக்கர் பிடியிலிருந்து கல்விக் கூடங்களை விடுவித்தார். பெண்களையும் ஆடவரோடு பள்ளியில் சேர்த்துக் கொண்டார். அவர் ஃபேபரைக் காண வந்து தம் திட்டத்துக்கு அவரே ஏற்ற துணையாகக் கூடும் என்று முடிவுகட்டி அவரைப் பாரிசுக்கும் அழைத்துச் சென்றார். அறிவியல் ஆய்வுக்காக அவர்க்குப் ''பெருமைக்குரியார்'' (Legion of Honour) என்ற அரச விருதினை அளித்துச் சிறப்பித்தார். பிரெஞ்சுப் பேரரசரான மூன்றும் நெப்போலியனுக்கும் ஃபேபரை அறிமுகம் செய்வித்தார். அரசரும் இவரைக் காண மகிழ்ந்தார். அரசரின் பிள்ளைகட்குக் கல்விபுகட்ட ஃபேபர் அமர்த்தப்படக் கூடும் என்ற செய்தியும் ஃபேபருக்குக் குறிப்பாக உணர்த்தப் பட்டது. வேறு எவராயினும் இச் சூழலையும் வாய்ப்பினையும் நன்கு பயன்படுத்திப் பொருளும் புகழும் பெற்றுக் கவலையற்று வாழ்ந்திருப்பர். ஆனல் மெய்நெறியாளராகிய ஃபேபரோ இச்செய்தியைக் கேட்டவுடனேயே சடக்கென நிலைமையைப் புரிந்து கொண்டார். அரசவை வாழ்வு இன்பமும் மதிப்பும் அளிப்பினும், அஃது ஒரு வகையில் அடிமை வாழ்வாகும். கட்டற்ற விடுதலையுணர்வுடன் உண்மைகளைக் கூறுதற்கு அங்கு இடமிராது என்பதை உணர்ந்து கொண்டார். தலைநகரின் மரப்பாவை இயக்கமும், பொறியியல் நாகரிகமும் அரசவைப் பகட்டுகளும் தமக்கு ஏற்றன அல்ல எனத் தெளிந்தார். உள்ளுணர்வு அவரை அங்கிருந்து அகன்று விடுமாறு கூறிற்று. விரைவில் நகரைவிட்டு ஓடினர். வரவேற்புகளையும் வாழ்த்துகளையும் பொருட்படுத்தாமல் தமக்காகத் திறந்

திருந்த இயற்கையியற் கண்காட்சியையும் காணமறுத்து ஓடினர். பூச்சிகளின் ஒலிநிறைந்த பழைய சிற்றூர் வாழ்க்கையே அவர்க்கு இன்பமாக விருந்தது. விலகி வந்துவிட்டாலும் அரசரின் அறிமுகம் இவர்க்கு இருந்தமை ஃபேபரின் பகைவர்க்கெல்லாம் பொறுமையாக விருந்தது. சமயக் கணக்கர்களின் சூழ்ச்சித் திறத்தால் பேரரசர் அரியணை துறக்க நேர்ந்த பொழுது, அவர்தம் அன்புபெற்ற ஃபேபரையும் அவர்கள் பழிவாங்கக் கருதினர். ஒழுக்கக் கேட்டுக்குக் காரணமாக இருக்கின்றார் என்று கதைகட்டி அவரை வேலையினின்றும் நீக்கி வீட்டை விட்டும் வெளியேறுமாறு செய்தது அஞ்ஞான்றுதான்.

கிழத் தந்தையோடும், உடல் மெலிந்த மனைவியோடும் வீட்டைவிட்டு வெளியேறிய ஃபேபர் தம் நண்பர் தூவர்துமில்' லிடம் கடனாகப்பெற்ற சிறிது பணத்தைக் கொண்டு 'ஆரஞ்சு' நகருக்கருகிலுள்ள சிற்றூர் ஒன்றில் குடியேறினர். பூச்சிகளைப் பற்றிய அறிவைத் தவிர வேறு எந்தச் சொத்தும் அவர்க்குச் சொந்தமாக இல்லை. இந்நிலையில்தான் அவர்தம் நூற்களும் ஒன்றன்பின் ஒன்றாக வெளிவந்தன. அவைபற்றி முன்பே கூறினோம்.

வினையாண்மை யுடையார் ஒரு குறிப்பிட்ட எல்லையோடு நின்றுவிடார். வினை; வினை; வினை; வினையே அவர்க்கு உயிர். அவர் நெருப்புக் கனல் போன்றவர். முழுதும் வெந்து தணியு மட்டும் அவர்க்கு அமைவு இல்லை. இறக்கும் வரையும் ஓய்வின்றி உலக நலம் கருதி உழைத்துக் கொண்டே யிருப்பர். ஃபேபரும் அவ்வாறே உழைத்தார். ஓய்வு கருதவில்லை; உடல் நலம் கருதவில்லை; உண்டி உறையுள் என்று பறக்கவுமில்லை. நல்லுணவின்றி இளைத்துப் போன குழந்தைகட்கும், நோயால் துன்புறும் மனைவிக்கும் நலம் செய்யக் கூடிய குறைந்த அளவு பொருளைக்கூட அவர் ஈட்டவில்லை. முதுமைப் பருவத்தில் ஆரஞ்சு நகர்க்கு அருகில் செரிக்னன் என்ற சிற்றூரில் அவர்க்குச் சிறிது நிலம் கிடைத்தது. அதைப் பண்படுத்தியிருந்தால் விளைச்சல் நிலம் ஆகியிருக்கும். ஃபேபர் அதையும் சரியாகக் கவனிக்காததால் அது செடியுங் கொடியும் நிரம்பி முள்ளும் குருக்கும் பூத்துப் புதர் மண்டிக் காடாயிற்று. ஆனால் அதுவே ஃபேபருக்கும் உயர்ந்த செல்வமாயிற்று. ஆம், அப் புதர் நிலத்தில் குளவிகளும் தேனீக்களும், நிலத்தைக்குடையும் வண்டுகளும் கூட்டம் கூட்டமாய் வாழ்ந்தன அல்லவோ!

வாழ்வில் பல்வேறு இடர்கட்கு ஆளாகி இறுதியில் மனைவி மக்களையும் ஒருவர்பின் ஒருவராக ஃபேபர் இழந்தார். ஆயினும் எப்படியும் தம் ஆய்வை உலகுக்குப் பயனுடையதாக்க விரும்பிய அவர், தம் நிலத்தேகிடைத்த நூற்றுக்கணக்கான சிற்றுயிர் வகைகளுடன் ஏடன் நகர் நோக்கி வந்தார். நெடுநாட்களாகப்

புறக்கணிப்பும் எதிர்ப்புமே காட்டிய உலகம் முதுமைக் காலத்தில் ஃபேபரின் பெருமையினை உணர்ந்தது. இவர்தம் நூற்கள் எங்கும் பரவின; பலரும் உண்மை அறிஞர் என்று பாராட்டினர் ஃபேபருக்குப் பல பரிசுகளும் பதக்கங்களும் விருதுகளும் வழங்கப்பட்டன. ஃபேபர் அவையனைத்தையும் கண்டு மயங்கி விடவில்லை. மெல்லத் தமக்குள் குறுநகை பூத்துக் கொண்டார். மீண்டும் பூச்சியுலகமே அவரை அழைத்தது.

ஒருநாள் ஊரின் ஒதுக்குப் புறமான வயல் வெளியில் நாடோடி போன்ற ஒரு கிழ உருவம் மண்ணில் தலைகுப்புறப் படுத்துக் கொண்டு ஏதோ செய்து கொண்டிருப்பதை ஊர் காவலன் கண்டான். ''எழுந்திரு ஐயா, சட்டத்தின் பெயரால் உன்னைக் காவலில் வைக்க வந்திருக்கின்றேன்'' என்றான். அக் கிழவர் மெல்லத்தலைநிமிர்ந்து பார்த்து,''ஏன்? என்ன காரணம்?'' என்று வினவினார். ''காரணமா? அப்பொழுதிருந்தே உன்னைப் பார்த்துக் கொண்டு வருகிறேன். ஆளைப்பார்த்தால் ஒழுங்கான வனாகத் தெரியவில்லை. வெறும் நாடோடிபோல் திரிந்து கொண்டிருந்தாய். இப்பொழுது குப்புற விழுந்துகொண்டு ஒன்று மறியாதவன்போல் கிடக்கிறாய்; எழுந்திரு'' என்றான் காவலன். கிழவர் துள்ளி எழுந்தார். அமைதியாக நின்று கொண்டு ''ஒன்றுமில்லை அப்பா, நான் இங்கே புழு பூச்சிகளை ஆராய்ச்சி செய்கின்றேன்'' என்றார். ''என்ன ஐயா கதை பேசுகிறாய்? வெறும் புழு பூச்சிகட்காக இந்த வெயிலில் நீ குப்புறப்படுத்துக் கிடப்பதாவது? அதை நான் நம்புவதாவது?'' என்று பேசிக் கொண்டேவந்த காவற்காரன் சட்டென்று பேச்சை நிறுத்தினான்; அவரது தோட்பட்டையில் ஏதோ ஒன்று மின்னிக் கொண்டிருந்தது அஃது அவர்க்கு அரசினர் அளித்த உயர் மதிப்புடைய பொற்பதக்கம். அதைத் தெரிந்துகொண்ட ஊர் காவலன் அவரை வணங்கிப் பின்வாங்கினான். அம் மண்ணின் மகன் மீண்டும் மண்ணில் விழுந்தார். மாலையில் வீடு திரும்பிய உழவர்கள் அவர் அங்கேயே படுத்துக் கிடப்பதைக் கண்டனர். காலையில் அவர்கள் வயல்கட்குச் சென்றதிலிருந்தே அவர் அப்படித்தான் கிடந்தார் தங்கட்குள் தலையாட்டி ஏதோ பேசிக் கொண்டனர். ''அந்தோ'' என்றான் ஒருவன்.

சிறுவனாக இருக்கையில் 'பைத்தியம்' என்று அழைக்கப் பட்ட ஃபேபர் தள்ளா முதுமையிலும் அவ்வாறுதான் அழைக்கப் பட்டார். உண்மை மாந்தர் அனைவரையும் உலகம் ''பைத்தியங்கள்'' என்றுதான் அழைத்து வந்திருக்கின்றது; அழைத்து வருகின்றது இனியும் அழைக்கத்தான் செய்யும். ஆனால் இந்தப் பைத்தியங்களால் தான் உலகம் முன்னேறுகின்றது என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை. **ஆக்கம் -'வழுதி'.**

முதல்: **ஆங்கிலத்தில்-தோனல்து கல்ராசு பீட்டி.**

(Donald Culross Peattie)-Readers' Digest.

தென்மொழி பதிவு எண் : எம். 7211

பொருளடக்கம்

சுவடி 2 பங்குனி - தி. பி. ௧௯௯௫ ஓலை 2.

தேர்(தல்) திருவிழா	(ஆசிரியவுரை)	3
தமிழனுக்கு ஒப்பாரி	(பாடல்)	7
பாவாணர் பொருட்கொடைத் திட்டம்	(பட்டியல்)	11
ஆந்தைப் பாட்டு	(இலக்கியம்)	15
கருத்திலக்கியம்		20
பைந்தமிழ்ப் பணி	(பாடல்)	25
சட்ட அமைப்பும், மக்கள் மனப்பாங்கும்		26
எழுத்தாளர்	(பாடல்)	33
நின்ற சொல்லர் சேனவரையர்		34
நற்சோணை		38
நாட்டுணர்வும் குடியாட்சியும்		47
உயர்ந்த மாந்தனும் தாழ்ந்த மாந்தனும்		51
அகமலர்த்துங் கலை	(பாடல்)	53
வள்ளுவர் காட்டும் மனநிலைகள்		55
இந்தியால் தமிழ் அழியாதா?		62
காசிமிர் 'பேபர்	(வரலாறு)	68

மற்றும்

ஆங்கில மொழியாக்கம், நூல்நிறை, நகைநலம் முதலியன

உரிமை, வெளியீடு
தாமரை, உலக முதல்வி

மித்திரா அச்சகம்
திருப்பாதிரிப்புலியூர்.